www.Padasalai.Net www.Trb Tnpsc.Com




**Prepared by:**

**R. THALAMPOORAJAN, M.A., B.Ed., M.Phil,**

**Post Graduate Economics Teacher.**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# பொருளடக்கம்

## பொருளியல்

12


| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1 | பேரியல் பொருளாதாரம் | 3 |
| 2 | தேசிய வருமானம் | 13 |
| 3 | வேலைவாய்ப்பு மற்றும் வருமான கோட்பாடுகள் | 23 |
| 4 | நுகர்வு மற்றும் முதலீடு சார்புகள் | 36 |
| 5 | பணவியல் பொருளியல் | 49 |
| 6 | வங்கியியல் | 60 |
| 7 | பன்னாட்டுப் பொருளியல் | 73 |
| 8 | பன்னாட்டு பொருளாதார அமைப்புகள் | 87 |
| 9 | நிதிப் பொருளியல் | 96 |
| 10 | சுற்றுச்சூழல் பொருளியல் | 110 |
| 11 | பொருளாதார மேம்பாடு மற்றும் திட்டமிடல் | 119 |
| 12 | புள்ளியியல் முறைகள் மற்றும் பொருளாதார அளவையியல் ஓர் அறிமுகம் | 129 |


R.THALAMPOORAJAN M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# அத்தியாயம் 1

## பேரியல் பொருளாதாரம்

1.பொருளியல் பாடத்தின் கிளைகள் என்பவை

**நுண்ணியல் மற்றும் பேரியல்.**

2."மேக்ரோ" (MACRO) என்ற வார்த்தையை அறிமுகப்படுத்தியவர் யார்?

**ராக்னர் பிரிக்ஸ்**

3.நவீன பேரியல் பொருளியலின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?

**ஜே.எம்.கீன்ஸ்**

4.பேரியல் பொருளாதாரத்தின் வேறு பெயர் யாது? **வருவாய் கோட்பாடு**

5.பேரியல் பொருளாதாரம் என்பது பற்றிய படிப்பு **மொத்தங்கள்**

6.ஜே.எம்.கீன்ஸின் பங்களிப்பை குறிப்பிடுக. **பொது கோட்பாடு**

7.பொதுவான விலையின் தொடர் உயர்வை குறிப்பிடும் கருத்து **பணவீக்கம்** ஆகும்.

8. பொருளாதார கொள்கைகளின் அவசியத்தை குறிப்பிடுக.

அ) அடிப்படை பிரச்சனைகளை தீர்ப்பது ஆ) தடைகளை முறியடிப்பது

இ) வளர்ச்சியை அடைவது **ஈ) மேலே கூறப்பட்ட அனைத்தும்**

9.ஒரு பொருளாதார அமைப்பின் அடிப்படை பொருளாதார நடவடிக்கைகளை குறிப்பிடுக. **உற்பத்தி மற்றும் நுகர்வு**

10.ஒரு பொருளாதார அமைப்பில் காணப்படுவது.

அ) உற்பத்தி துறை ஆ) நுகர்வு துறை

இ) அரசு துறை **ஈ) மேலே கூறப்பட்ட அனைத்தும்**

11. எந்த பொருளாதார அமைப்பில் உற்பத்தி உரிமை தனியாருக்கு மட்டுமே உள்ளது? **முதலாளித்துவ அமைப்பு**

12.பகிர்வில் சமத்துவத்தை கடைபிடிக்க பொருளாதார அமைப்பு **சமத்துவ பொருளாதார அமைப்பு** ஆகும்

13. முதலாளித்துவத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்? **ஆடம்ஸ்மித்**

14.முதலாளித்துவத்தை பின்பற்றும் நாடு **அமெரிக்கா** ஆகும்.

15.சமத்துவத்தின் தந்தையை கண்டுபிடி. **காரல் மார்க்ஸ்**

16.தனியார் மற்றும் அரசு சேர்ந்து பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடும் பொருளாதார அமைப்பை குறிப்பிடும் பதம் **கலப்பு பொருளாதாரம்** ஆகும்.

17.ஒரு குறிப்பிட்ட காலத்தில் (Point of time) குவிந்த சரக்குகளின் அளவை குறிப்பிடும் பதம் **இருப்பு** ஆகும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

18.கீழ்வருவனவற்றுள் ஓட்ட மாதிரி கண்டுபிடி. **வருவாய்**

19.இரு துறை மாதிரி உள்ள இரு துறைகளை குறிப்பிடுக.

**குடும்பங்களும் நிறுவனங்களும்.**

20.திறந்து விடப்பட்ட பொருளாதாரத்தின் வட்ட ஓட்ட மாதிரி என்பது **நான்கு துறை மாதிரி** ஆகும்.

**21.பேரியல் பொருளியலின் இலக்கணம் தருக. (1.2)**

**பேரியல் பொருளியல்:**

- கிரேக்க மொழியில் உள்ள **"Makros"** என்ற சொல்லில் இருந்து **"Macro"** என்ற சொல் பெறப்பட்டது. அதன் பொருள் **"பெரிய"** என்பதாகும்
- பேரியல் பொருளியல் என்பது பொருளாதார அமைப்பு முழுமையையும் பற்றி படிப்பதாகும்.

**வேறு பெயர்:** வருவாய் கோட்பாடு

**22.பணவீக்கம் என்ற பதத்தின் பொருள் தருக. (1.4)**

**பணவீக்கம்:**

- பணவீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதைக் குறிப்பதாகும்.

**இலக்கணம்:**

"குறைந்த அளவு பண்டங்களை அதிக அளவு பணம் துரத்தும் நிலை"

– **கோல்பர்ன்**

"வாங்கும் சக்திக்கான அளவின் அசாதாரண குறைவு நிலையாகும்"

– **கிரிகெரி**

**23." பொருளாதாரம்" என்பதன் பொருள் யாது? (1.6)**

**பொருளாதாரம்:**

- பொருளாதார அமைப்பு என்ற கருத்தினை ஏ.ஜே.பிரவுண் என்பவர், "மக்கள் தங்கள் பிழைப்பை அமைத்துக் கொள்ளும் முறையை குறிப்பது" என்று வரையறுத்துள்ளார்.
- "ஒரு பொருளாதார அமைப்பு என்பது பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எந்த முறையையோ அல்லது பகுதியையோ குறிப்பதாகும்.

**24.வளர்ச்சி நிலை அடிப்படையில் பொருளாதாரங்களை வகைப்படுத்துக. (1.6)**

- **பொருளாதார வகைகள்:**
- 1.வளர்ந்த பொருளாதார அமைப்பு
- 2.வளராத அல்லது முன்னேறாத பொருளாதார அமைப்பு
- 3.வளரும் பொருளாதார அமைப்பு

R.THALAMPOORAJAN M.A.,B.Ed.,M.Phil., www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**25.முதலாளித்துவம் என்றால் என்ன? (1.7.1)**

**முதலாளித்துவம்:**

**தந்தை:** ஆடம் ஸ்மித்

- ❖ பொருளாதார நடவடிக்கைகளை தீர்மானிப்பதில் அரசாங்கத்தின் பங்கு குறைவாகவும், சந்தையின் பங்கு அதிகமாகவும் இருக்கும்.
- ❖ உற்பத்தி நடவடிக்கைகள் தனியார்வசம் இருக்கும்.
- ❖ இலாப நோக்கத்தை முதன்மையாகக் கொண்டிருப்பார்கள்.

**வேறு பெயர்கள்:**

1. தடையில்லாப் பொருளாதாரம்
2. அங்காடி (அ) சந்தைப் பொருளாதாரம்

**26.பொருளாதார மாதிரியின் இலக்கணம் தருக. (1.8.2)**

**பொருளாதார மாதிரி:**

- ❖ மாதிரி என்பது உண்மை சூழலை எளிமையாக பிரதிபலிப்பது ஆகும்.
- ❖ பொருளாதார வல்லுநர்கள், பொருளாதார நடவடிக்கைகளை அவைகளுக்கிடையேயான உறவுகள், நடத்தைகள் பற்றி விவரிப்பதற்கு மாதிரிகளைப் பயன்படுத்துகின்றனர்.
- ❖ மாதிரி என்பது பொருளாதாரம் எவ்வாறு இயங்குகிறது என்பதை விளக்குகிறது.

**27." வருமானத்தின் வட்ட ஓட்டம்" வரையறு. (1.9)**

**வருமானத்தின் வட்ட ஓட்டம்:**

- ❖ ஒரு வருவாயின் வட்ட ஓட்ட மாதிரியானது பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கிடையே உள்ள தொடர்பினை விளக்குவதாகும்.
- ❖ வருவாயின் வட்ட ஓட்ட ஆய்வானது தேசிய கணக்குகள் மற்றும் பேரியல் பொருளாதாரத்தின் அடிப்படையாகும்.

**28.பேரியல் பொருளாதரத்தின் முக்கியத்துவத்தை தருக. (1.3)**

**பேரியல் பொருளாதரத்தின் முக்கியத்துவம்:**

- ❖ ஒருபொருளாதார அமைப்பின் ஒட்டு மொத்த செயல்பாடுகளை புரிந்து கொள்ள பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.
- ❖ தேவைகள் மற்றும் சவால்களை எதிர்கொள்வதற்கும், தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பேரியல் பொருளாதாரம் பயன்படுகிறது.
- ❖ நடப்பு பிரச்சினைகளை அறிவியல் பூர்வ விசாரணை மூலம் அறிய பேரியல் பொருளாதாரம் வாய்ப்பளிக்கிறது.
- ❖ பொருளாதாரக் குறியீடுகளை பகுத்தாயவும் அவைகளை ஒப்பிடவும் பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.
- ❖ பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காணவும், சரியான கொள்கைகளை உருவாக்கவும் பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.

R.THALAMPORAJAN.M.A.B.Ed.M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**29.பொருளாதார அமைப்புகளின் வகைகளை குறிப்பிடுக. (1.7)**

- **பொருளாதார அமைப்புகளின் வகைகள்:**
- 1.முதலாளித்துவ பொருளாதார அமைப்பு (முதலாளித்துவம்)
- 2.சமத்துவ பொருளாதார அமைப்பு (சமத்துவம்)
- 3.கலப்பு பொருளாதார அமைப்பு (கலப்புத்துவம்)
- 4.உலகத்துவம்

**30.முதலாளித்துவத்தின் சிறப்பினை வரிசைப்படுத்துக. (1.7.1)**

**முதலாளித்துவத்தின் சிறப்பியல்புகள்:**

**1.தனியார் சொத்துரிமை மற்றும் பரம்பரைச்சட்டம்:**

- நிலம், உழைப்பு, மூலதனம், இயந்திரங்கள், சுரங்கம் போன்ற அனைத்து வளங்களும் தனிநபர்களுக்கு சொந்தமானதாக இருக்கும்.
- உரிமையாளர்கள் இறந்த பிறகு அவர்களின் சொத்துக்கள் அவர்கள் வாரிசுகளுக்கு மாற்றப்படும்.

**2.தெரிந்தெடுப்பதில் சுதந்திரம்:**

- தனிநபர் வேலையை தெரிந்தெடுப்பதிலும், உற்பத்தி செய்யும் பொருட்களை தேர்ந்தெடுப்பதிலும், முழு சுதந்திரம் பெற்றிருப்பர்.
- நுகர்வோர்கள் விருப்பமான பொருட்களை தெரிவு செய்வதில் சுதந்திரம் பெற்றிருப்பர்.

**3.இலாப நோக்கம்:**

- இலாபம் பெறுவதே உந்து விசையாக காணப்படும்.
- முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் உற்பத்தியாளர்களால் பின்பற்றப்படுகின்ற **தங்கவிதி “உச்ச இலாபம்”** அடைதல்.

**4.போட்டியில் சுதந்திரம்:**

- வாங்குபவர் விற்பவர் இடையே போட்டி நிலவும்.

**5.விலை இயங்குமுறை:**

- ***முதலாளித்துவ பொருளாதாரத்தின் இதயம்.***
- அனைத்து பொருளாதார நடவடிக்கைகளும் தேவை மற்றும் அளிப்பு அங்காடி சக்திகளால் கட்டுப்படுத்தப்படுகிறது.

**6.அரசின் பங்கு:**

- அரசின் பங்கு மிகக் குறைவாகவே இருக்கும்.

**7.வருமான ஏற்றத்தாழ்வு:**

பணக்காரர்கள் இன்னும் பணக்காரர்களாகவும், எழைகள் இன்னும் எழைகளாகவும் இருக்கின்றனர். இதனால் பொருளாதார சமனற்ற நிலை அதிகரிக்கின்றது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**31.சமத்துவத்தின் குறைகளைக் கூறுக. (1.7.2)**

**சமத்துவத்தின் குறைகள்:**

**1.சிகப்புநாடா மற்றும் அதிகார வர்க்கம்**

- அனைத்து முடிவுகளையும் எடுக்க அரசின் அநேக அலுவலர்களின் அனுமதி பெற எடுக்கும் கால அளவு அதிகமாகும் நிலை.

**2.ஊக்கமில்லாமை:**

- திறமைக்கு எந்த ஊக்கமும் அளிப்பதில்லை.

**3.தெரிவு செய்வதில் சுதந்திர குறைவு:**

- பண்டங்கள் மற்றும் பணிகளை நுகர்வதில் தெரிவு செய்யும் சுதந்திரம் நுகர்வோரால் அனுபவிக்க முடியாது.

**4.அதிகாரம் குவிதல்:**

- அரசே மிகவும் சக்தி வாய்ந்தததாக அமைந்துள்ளது.

**கலப்புப் பொருளாதாரம் என்றால் என்ன? உதாரணம் தருக. (1.7.3)**

**கலப்புப் பொருளாதாரம்:**

- தனியார் மற்றும் பொதுத்துறைகள் இணைந்து பொருளாதார மேம்பாட்டிற்காகப் பணியாற்றும் அமைப்பு ஆகும்.

**உதாரணம்:** இந்தியா, இங்கிலாந்து, பிரான்ஸ், பிரேசில்

**32.கலப்புப் பொருளாதாரத்தின் முக்கிய இயல்புகளை எடுத்தெழுதுக. (1.7.3)**

**கலப்புப் பொருளாதாரத்தின் முக்கிய இயல்புகள்:**

**1.சொத்து, உற்பத்திச் சாதனங்களின் உரிமம்:** தனியார் மற்றும் அரசுக்குச் சொந்தமாக இருக்கும்.

**2.பொது மற்றும் தனியார் துறைகள் இணைந்திருக்கும்.**

- தனியார் துறைகள் – இலாப நோக்கம்
- பொதுத்துறைகள் - சமூகநலனை உச்சப்படுத்துவது.

**3.பொருளாதாரத் திட்டமிடல்:** திட்டங்கள் இலக்குகள் அடிப்படையில் இயங்கும்.

**4.பொருளாதாரப் பிரச்சனைகளுக்குத் தீர்வு:** பொருளாதார அடிப்படைப் பிரச்சனைகள் அரசின் தலையீட்டின் மூலம் தீர்க்கப்படும்.

**5.சுதந்திரமும் கட்டுப்பாடும்:** தனியாருக்குச் சொந்தமாக இருந்தாலும் ஒட்டுமொத்தக் கட்டுப்பாடும் அரசிடமே காணப்படும்.




Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**33.முதலாளித்துவம் மற்றும் சமத்துவத்தை வேறுபடுத்துக. (1.7.3)**

| வ. எண். | தன்மைகள் | முதலாளித்துவம் | சமத்துவம் |
|---|---|---|---|
| 1. | உற்பத்தி மூலங்களின் உரிமை | தனியார் உரிமை | பொது (அரசு) உரிமை |
| 2. | பொருளாதார நோக்கம் | இலாபம் | சமூக லன் |
| 3. | மைய பிரச்சனைகளின் தீர்வு | தடையில்லா சந்தை முறை | மத்திய திட்டமுறை |
| 4. | அரசின் பங்கு | உள்ளீடு கட்டுப்பாடு மட்டும் | முழு ஈடுபாடு |
| 5. | வருவாய் பங்கீடு | சமனற்றநிலை | சமநிலை |
| 6. | நிறுவன தன்மை | தனியார் நிறுவனம் | அரசு நிறுவனம் |
| 7. | பொருளாதார சுதந்திரம் | முழுமையான சுதந்திரம் | சுதந்திரமின்மை |
| 8. | முக்கிய பிரச்சனை | சமமின்மை | திறனின்மை |

**34.இருதுறை சூழல் ஓட்ட மாதிரியினை விளக்குக. (1.9.1)**




**இல்லத்துறை:**

- பொருட்கள் மற்றும் பணிகளை வாங்கும் ஒரே துறை.
- நிலம், உழைப்பு, மூலதனம் மற்றும் அமைப்பு ஆகிய உற்பத்திக் காரணிகளை அளிக்கும் துறை.
- அனைத்து வருவாயையும், நிறுவனத்துறை தயாரிக்கும் பொருட்கள் மற்றும் பணிகளை வாங்க பயன்படுத்துகிறது.
- உற்பத்திக் காரணிகளை அளிப்பதன் மூலம் வருவாயைப் பெறுகிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**நிறுவனத்துறை:**

- **பொருட்கள் மற்றும் பணிகளை இல்லத்துறைக்கு விற்பனை செய்வதன் மூலம் வருவாயை ஈட்டுகின்றது.**
- **நிலம், உழைப்பு, மூலதனம் மற்றும் அமைப்பு ஆகிய உற்பத்திக் காரணிகளை, பணியமர்த்துகிறது.**
- **அனைத்து உற்பத்தியையும் இல்லத்துறைக்கு விற்பனை செய்கிறது.**
- இது எளிய பொருளாதார அமைப்பு.
- இல்லத்துறை + நிறுவனத்துறை **(Y = C + I)**

**35.பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி. (1.4)**

**பேரினப் பொருளியலின் பரப்பெல்லைகள்:**

**1.தேசிய வருவாய்:**

- தேசிய வருவாயை கணக்கிடுதல் மற்றும் தேசிய வருவாயில் துறைகளின் பங்கு போன்றவை பேரியல் பொருளாதார பகுத்தாய்வின் அடிப்படை அம்சங்களாகும்.

**2.பணவீக்கம்:**

- பணவீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதைக் குறிக்கும்.
- மொத்த விலை குறியீட்டெண் மற்றும் நுகர்வோர் விலை குறியீட்டெண் போன்ற விலை குறியீட்டெண்களைப் பயன்படுத்தி மொத்த விலை அளவை மதிப்பிடுவது அவசியமாக இருக்கிறது.

**3.வாணிபச் சுழற்சி:**

- மொத்த பொருளாதாரக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு நாட்டின் வாணிப சுழற்சி மாற்றங்களைத் (செழிப்பு, பின்னிறக்கம், மந்தநிலை மற்றும் மீட்பு) தெரிந்து கொள்ள முடிகிறது.

**4.வறுமை மற்றும் வேலையின்மை:**

- வளங்கள் நிறைந்த நாடுகளிலும் வறுமை மற்றும் வேலையின்மை மிகப் பெரிய பிரச்சனையாக உள்ளது.

**5.பொருளாதார வளர்ச்சி:**

- பேரியல் பகுத்தாய்வின் மூலம் தான் ஒரு பொருளாதார அமைப்பின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம், அதை தீர்மானிக்கும் காரணிகள் போன்றவற்றை புரிந்து கொள்ள முடியும்.

**6.பொருளாதார கொள்கைகள்:**

- அடிப்படைப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவும் பொருளாதார கொள்கைகள் தேவைப்படுகின்றன.

R.THALAMPOORANAN M.A.,B.Ed.,M.Phil., www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**36.நடவடிக்கைகள் அடிப்படையில் ஒரு பொருளாதார அமைப்பு செயல்படுவதை விவரி. (1.6)**

**பொருளாதார அமைப்பு செயல்படும் விதம்:**

**பொருளாதாரம்:**

- ❖ பொருளாதார அமைப்பு என்ற கருத்தினை ஏ.ஜே.பிரவுண் என்பவர், "மக்கள் தங்கள் பிழைப்பை அமைத்துக் கொள்ளும் முறையை குறிப்பது" என்று வரையறுத்துள்ளார்.
- ❖ "ஒரு பொருளாதார அமைப்பு" என்பது பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எந்த முறையையோ அல்லது பகுதியையோ குறிப்பதாகும்.
- ❖ ஒரு பொருளாதார அமைப்பின் அடிப்படை நடவடிக்கைகள் உற்பத்தி மற்றும் நுகர்வு ஆகும்.
- ❖ பகிர்வுப் பணியானது உற்பத்தி மற்றும் நுகர்வுப் பணிகளுக்கு உதவுகின்றன.

**முக்கிய பொருளாதார நடவடிக்கைகள்:**

1.போக்குவரத்து 2. வங்கிப்பணி 3. விளம்பரம்

**பொருளாதாரமற்ற நடவடிக்கைகள்:** சுற்றுச்சூழல், கல்வி, ஆரோக்கியம், பொழுதுபோக்கு, ஆட்சிமுறை, நெறிப்படுத்துதல்.

**பொருளாதாரத்தின் வெளிநடவடிக்கைகள்:** இறக்குமதி, ஏற்றுமதி, பன்னாட்டு உறவுகள், குடியேற்றம், இடப்பெயற்சி

**மேலும் பல்வேறு அடிப்படைகளில்:**

**1.வளர்ச்சி நிலை:**

வளர்ந்த, வளராத, முன்னேறாத மற்றும் பொருளாதார அமைப்புகள்

**2.நடவடிக்கைகளின் முறை:**

முதலாளித்துவ, சமத்துவ மற்றும் கலப்பு பொருளாதார அமைப்புகள்

**3. நடவடிக்கைகளின் அளவு:** சிறிய மற்றும் பெரிய பொருளாதார அமைப்புகள்

**4.செயல்படும் தன்மை:** நிலையான மற்றும் இயங்கும் பொருளாதார அமைப்புகள்

**5.செயல்பரப்பு தன்மை:**

மூடிய மற்றும் திறந்தவெளி பொருளாதார அமைப்புகள்

**6.முன்னேற்ற தன்மை:**

பழைமையான மற்றும் நவீன பொருளாதார அமைப்புகள்

P.THALAMOORTHY M.A.,B.Ed.,M.Phil., www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**7.தேசிய வருவாய் அளவு:** குறைந்த வருவாய், இடைநிலை வருவாய் மற்றும் அதிக வருவாய் பொருளாதார அமைப்புகள்

**37. முதலாளித்துவம் மற்றும் சமத்துவம் ஆகியவற்றின் இயல்புகளை ஒப்பிடுக. (1.7.3) (விடை: வினா எண்:33)**

**38.முதலாளித்துவ, சமத்துவம், கலப்புத்துவம் இவற்றின் தன்மைகளை ஒப்பிடுக. (1.7.3)**

**பொருளாதார அமைப்புகளை ஒப்பிடுதல்:**

| வ. எண். | தன்மைகள் | முதலாளித்துவம் | சமத்துவம் | கலப்புத்துவம் |
|---|---|---|---|---|
| 1. | உற்பத்தி மூலங்களின் உரிமை | தனியார் உரிமை | பொது (அரசு) உரிமை | தனியார் மற்றும் பொது உரிமை |
| 2. | பொருளாதார நோக்கம் | இலாபம் | சமூக லன் | சமூக நலன் மற்றும் இலாப நோக்கம் |
| 3. | மைய பிரச்சனைகளின் தீர்வு | தடையில்லா சந்தை முறை | மத்திய திட்டமுறை | மத்திய திட்ட முறை மற்றும் தடையில்லா சந்தை |
| 4. | அரசின் பங்கு | உள்ளீடு கட்டுப்பாடு மட்டும் | முழு ஈடுபாடு | குறைந்த பங்கு |
| 5. | வருவாய் பங்கீடு | சமனற்றநிலை | சமநிலை | குறைந்த சமநிலைபற்ற நிலை |
| 6. | நிறுவன தன்மை | தனியார் நிறுவனம் | அரசு நிறுவனம் | தனியார் மற்றும் அரசு நிறுவனங்கள் |
| 7. | பொருளாதார சுதந்திரம் | முழுமையான சுதந்திரம் | சுதந்திரமின்மை | கட்டுபாட்டுடன் சுதந்திரம் |
| 8. | முக்கிய பிரச்சனை | சமமின்மை | திறனின்மை | சமமின்மை மற்றும் திறனின்மை |

R. www.Padasalai.Net

## பயிற்சி வினாக்கள்

1.ரேக்னர் ஃபிர்ஸ்ச் சிறு குறிப்பு வரைக. (1.1)
2.ஜான் மேனாட் கீன்ஸ் (J.M.கீன்ஸ்) சிறு குறிப்பு வரைக. (1.1)
3.கீன்சு ஏன் நவீனப் பொருளியலின் தந்தை என்று அழைக்கப்பட்டார்? (1.1)
4.பேரியல் பொருளாதாரத்தின் பாடப் பொருள்கள் யாவை? (1.2)
5.பேரியல் பொருளாதாரத்தின் குறைகள் யாவை? (1.5)
6.பொருளாதார நடவடிக்கைகளைக் கூறுக. (1.6)
7.பொருளாதாரமற்ற நடவடிக்கைகளைக் கூறுக. (1.6)
8.பல்வேறு அடிப்படையில் பொருளாதார அமைப்புகளை எவ்வாறு வகைப்படுத்தலாம்? (1.6)
9.பொருளாதார அமைப்பு என்றால் என்ன? (1.7)
10.உலகத்துவம் சிறு குறிப்பு வரைக. (1.7)
11.ஆடம் ஸ்மித் பற்றி சிறு குறிப்பு வரைக. (1.7.1)
12.முதலாளித்துவப் பொருளாதார நாடுகளுக்கு உதாரணம் தருக. (1.7.1)
13.முதலாளித்துவ பொருளார அமைப்பில் உற்பத்தியாளர்களால் பின்பற்றப்படுகின்ற தங்க விதி என்ன? (1.7.1)
14.முதலாளித்துவத்தின் நன்மைகள் யாவை? (1.7.1)
15.முதலாளித்துவத்தின் குறைகள் யாவை? (1.7.1)
16.சமத்துவப் பொருளாதாரத்தின் தந்தை யார்? (1.7.2)
17.கட்டளைப் பொருளாதார அமைப்பின் கட்டமைப்பு யாது? (1.7.2)
18.சமத்துவ பொருளாதார அமைப்பின் இயல்புகள் யாவை? (1.7.2)
19.சமத்துவ பொருளாதார அமைப்பின் நன்மைகள் யாவை? (1.7.2)
20.கலப்புத்துவத்தின் நன்மைகள் யாவை? (1.7.3)
21.கலப்புத்துவத்தின் தீமைகள் யாவை? (1.7.3)
22.இருப்பு என்றால் என்ன? உதாரணம் தருக. (1.8.1)
23.ஓட்டம் என்றால் என்ன? உதாரணம் தருக. (1.8.1)
24.வருவாயின் வட்ட ஓட்ட மாதிரிகளை விளக்குக. (1.9)
25.வட்ட ஓட்டம் என்றால் என்ன? (1.9)
26.மூன்று துறை சூழல் ஓட்ட மாதிரியினை விளக்குக. (1.9.2)
27.நான்கு துறை சூழல் ஓட்ட மாதிரியினை விளக்குக. (1.9.3)
28.பொருளியலுக்கான நோபல் பரிசு பெற்றவர்கள் யாவர்?

R.THALAMPORANAN,M.A.,B.Ed.,M.Phil., www.Padasalai



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# அத்தியாயம் 2 தேசிய வருவாய்

1.உற்பத்தி காரணியின் செலவின் அடிப்படையிலானNNP **தேசிய வருவாய்**

2. முதன்மை துறை என்பது **விவசாயம்**

3. எத்தனை முறைகளால் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது? **மூன்று**
4.எவற்றைக் கூட்டி வருமான முறையில் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது? **வருமானம்**

5. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது மிகப்பெரிய எண்ணாக இருக்கும்? **GNP**

6. **கட்டிடத்துறை** துறையில் செலவு முறையில் தேசிய வருவாய் மதிப்பிடப்படுகிறது.

7 மூன்றாம் துறை **பணிகள்** எனவும் அழைக்கப்படுகிறது. 8.ஒரு நாட்டின் **பொருளாதாரம்** செயலை தேசிய வருவாய் குறிப்பிடுகிறது.

9. **நாட்டின் மக்கள் தொகை** ஆல் தேசிய வருவாயை வகுத்தால் தலைவீத வருமானம் கண்டறியலாம்.

10. GNP = **GDP** + வெளிநாட்டில் இருந்து வரும் நிகர காரணி வருமானம்.

11.NNP என்பது **Net National Product**.

12. மொத்த மதிப்பிலிருந்து **தேய்மானம்** கழித்தால் நிகர மதிப்பு கிடைக்கும்.

13 இந்தியாவில் நிதியாண்டு என்பது **ஏப்ரல் 1 முதல் மார்ச் 31**.

14.NNPயிலிருந்து வெளிநாட்டு காரணிகளின் நிகர வருமானம் கழிக்கப்பட்டால் கிடைக்கும் நிகர மதிப்பு **நிகர உள்நாட்டு உற்பத்தி**.

15 உற்பத்தி புள்ளியில் NNPயின் மதிப்பு **காரணி செலவில் NNP** என அழைக்கப்படுகிறது.

16 ஒரு நாட்டின் சராசரி வருமானம் என்பது **தலைவீத வருமானம்**.

17. பண வீக்கத்திற்கு சரிப்படுத்தப்பட்ட தேசிய வருவாயின் மதிப்பு **உண்மை தேசிய வருவாய்** என அழைக்கப்படுகிறது.

18 கீழ் வருவனவற்றுள் எது ஓட்ட (Flow) கருத்துரு? **மாத வருமானம்.**

19.PQLI என்பது **பொருளாதார நலம்** ன் குறியீடு ஆகும்.

20. மிக அதிக அளவிலான தேசிய வருவாய் **தனியார் துறை** லிருந்து வருகிறது.

R.THALAMPOORANAN M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net

**21.தேசிய வருவாய் இலக்கணம் கூறுக. (2.1)**

**தேசிய வருவாய்:**

- ❖ தேசிய வருவாய் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த பண்டங்கள் ம்ற்றும் பணிகளின் பண மதிப்பாகும்.
- ❖ "ஒரு நாட்டில் உள்ள உழைப்பும் முதலும் சேர்ந்து அங்குள்ள இயற்கை வளங்களைப் பயன்படுத்தி பண்டங்கள் மற்றும் பணிகளைப் பயன்படுத்துகின்றன. இதுவே அந்நாட்டின் நிகர ஆண்டு வருமானம், தேசிய வருவாய் அல்லது ஈவுத்தொகை ஆகும். – **ஆல்ஃபிரட் மார்ஷல்**

**22.GNP கணக்கிடும் சூத்திரத்தை எழுதுக. (2.4.2)**

**GNP கணக்கிடும் சூத்திரம்:**

**C+I+G+(X-M) + (R-P)**

**C** = நுகர்வு **I** =முதலீடு **G** =அரசு **(X-M)** =நிகர ஏற்றுமதி

**(R-P)** =காரணி வருவாய் வேறுபாடு

**23.NNP க்கும் NDP க்கும் உள்ள வேறுபாடு யாது? (2.4.3)**

| NNP | NDP |
|---|---|
| நிகர தேசிய உற்பத்தி என்பது ஒரு ஆண்டின், பொருளாதாரத்தின் நிகர உற்பத்தியின்மதிப்பு ஆகும். | நிகர உள்நாட்டு உற்பத்தி என்பது ஒரு ஆண்டில் ஒருநாட்டில் ஏற்படும் தேய்மானத்தை கழித்த பிறகு கிடைக்கும் நிகர உற்பத்தி ஆகும். |
| **NNP = GNP – தேய்மானக் கழிவு** | **NDP = GDP – தேய்மானம்** |

**24.GNPக்கும் NNPக்கும் உள்ள தொடர்பினை எழுது. (2.4.2)**

**GNP:**

- ❖ ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவடைந்த பொருட்கள் மற்றும் பணிகளின் அங்காடி மதிப்பின் மொத்த கணக்கிடுதல் ஆகும்.
- ❖ **GNP =C+I+G+(X-M) +(R-P)**

**NNP:**

- ❖ நிகர தேசிய உற்பத்தி என்பது ஆண்டின், பொருளாதாரத்தின் நிகர உற்பத்தியின்மதிப்பு ஆகும்.
- ❖ **NNP = GNP – தேய்மானக் கழிவு**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**25.தனிநபர் வருமானம் என்றால் என்ன? (2.4.5)**

**தனிநபர் வருமானம்:**

- ❖ தனிநபர் வருமானம் என்பது ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு தனி நபருக்கும் பல வழிகளில் இருந்து கிடைக்கப் பெறும் மொத்த வருமானம் ஆகும்.
- ❖ அவை வாரமாகவோ, வட்டியாகவோ அல்லது கூலியாகவோ இருக்கலாம்.
- ❖ **தனிநபர் வருமானம் =** தேசிய வருமானம் – (சமூக பாதுகாப்பு பங்களிப்பு மற்றும் பகிரப்படாத கார்பரேட் இலாபம்) + மாற்று செலுத்துதல்கள்

**26.GDP குறைப்பான் இலக்கணம் தருக. (2.4.9)**

**GDP குறைப்பான்:**

- ❖ GDP குறைப்பான் என்பது GDPயில் குறிப்பிட்டுள்ள பண்டங்கள் மற்றும் பணிகளின் விலை மாற்ற குறியீட்டெண் ஆகும்.

$$\text{GDP குறைப்பான்} = \frac{\text{பணமதிப்பு GDP}}{\text{உண்மை GDP}} \times 100$$

**27. தேசிய வருவாய் கணக்கீட்டில் “சுய நுகர்வு” எவ்வாறு சிரமத்தைத் தருகிறது? (2.7.5)**

**சுய நுகர்வு:**

- ❖ விவசாயிகள் தங்களின் சுய நுகர்விற்காக உற்பத்தியில் ஒரு பகுதியை ஒதுக்கி வைக்கின்றனர். சந்தையில் விற்பனை செய்யாமல் ஒதுக்கிய உற்பத்தி தேசிய வருமானத்தில் சேர்க்கப்பட்டதா என்பதைக் கண்டறிவதில் சிக்கல் ஏற்படுகிறது.

**28. தலைவீத வருமானம் பற்றி ஒரு சிறு குறிப்பு வரைக. (2.4.7)**

**தலைவீத வருமானம்:**

- ❖ தலா வருமானம் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒரு நபரின் சராசரி ஆண்டு வருமானம் ஆகும்.
- ❖ தேசிய வருமானத்தை மக்கள் தொகையால் வகுக்கக் கிடைப்பது தலா வருமானம்.
- ❖ **தலா வருமானம்** $= \frac{\text{தேசிய வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$

R.THALAMPOORAJAN M.A.,B.Ed.,M.Phil., www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**29.தனிநபர் வருமானத்திற்கும் செலவிடக்கூடிய வருமானத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன? (2.4.5 & 2.4.6)**

| தனிநபர் வருமானம் | செலவிடக்கூடிய வருமானம் |
|---|---|
| தனிநபர் வருமானம் என்பது ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு தனி நபருக்கும் பல வழிகளில் இருந்து கிடைக்கப் பெறும் மொத்த வருமானம் ஆகும். | செலவிடக்கூடிய வருமானம் என்பது தனிநபர் செலவிடக்கூடிய வருமானத்தைக் குறிக்கிறது. |
| தேசிய வருமானம் – (சமூக பாதுகாப்பு பங்களிப்பு மற்றும் பகிரப்படாத கார்பரேட் இலாபம்) + மாற்று செலுத்துதல்கள் | **தனிநபர் வருமானம் – நேர்முக வரிகள்** |

**30.காரணி செலவில் NNP – விவரி. (2.4.4)**

**காரணி செலவில் NNP:**

- NNP என்பது உற்பத்தியின் சந்தை மதிப்பு ஆகும்.
- காரணி செலவில் NNP உற்பத்தி காரணிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த வருமான செலுத்துதல் ஆகும்.
- காரணி செலவில் நிகர தேசிய வருவாயை பெறுவதற்கு, சந்தை விலையில் NNPயின் பணமதிப்பிலிருந்து மறைமுக வரியை கழிக்க வேண்டும். மேலும் மானியங்களைக் கழிக்க வேண்டும்.
- காரணிச் செலவில் NNP =

  **சந்தை விலையில் NNP - மறைமுக வரி + மானியம்**

**31.செலவு முறை பற்றி சிறு குறிப்பு வரைக. (2.5.3)**

**செலவு முறை:**

- ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்த செலவுகள் அனைத்தையும் கூட்டி தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.
- தனிநபர் சுய நுகர்வு செலவுகள், நிகர உள்நாட்டு முதலீடு, அரசின் கொள்முதல் செலவு, முதலீட்டு பொருள் வாங்கும் செலவு மற்றும் நிகர ஏற்றுமதி போன்ற அனைத்து செலவுகளையும் கூட்டி செலவு முறையில் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.
- **GNP =C+I+G+(X-M)**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**32.தேசிய வருவாய் கணக்கிடுதலில் “இருமுறை கணக்கீட்டுப் பிரச்சனைக்கு என்ன தீர்வு? (2.5.1)**

**இருமுறை கணக்கீட்டுப் பிரச்சனை:**

- ஒரு துறையின் வெளியீடு மற்றொரு துறையின் உள்ளீடாகச் செல்ல வாய்ப்பு இருப்பதால் ஒரே பொருள் இருமுறை அல்லது பலமுறை கணக்கில் வர வாய்ப்பு உள்ளது. இதற்கு இருமுறை கணக்கிடல் என்று பெயர்.
- இதனை தவிர்க்க இறுதி பொருட்களின் மதிப்பையோ அல்லது ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்ட மதிப்புக் கூட்டலையோ கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**33.தேசிய வருவாய் மற்றும் பொதுநலன் ஆகியவற்றைப் பற்றி சுருக்கமாக எழுதுக. (2.8.2)**

**தேசிய வருவாய் மற்றும் பொதுநலன்:**

- ஒரு நாட்டின் வளர்ச்சியும் பொருளாதார அந்தஸ்தும் அந்நாட்டின் தேசிய வருவாயைப் பொறுத்தே அமைகிறது.
- GDPயில் தலைவீத வருமானம் மற்றும் அதன் ஆண்டு வளர்ச்சி வீதம் அடிப்படையில் நாடுகளின் பொருளாதார முன்னேற்றம் அளவிடப்படுகிறது.
- அதிக தலைவீத வருமானம் உடைய நாடு, நல்ல வாழ்க்கைத்தரத்துடன் அதிக பொருளாதார நலனையும் பெற்றதாக இருக்கும்.

**34.தேசிய வருவாயின் பயன்களைப் பட்டியலிடுக. (2.6)**

**தேசிய வருவாயின் பயன்கள்:**

1. தேசிய வருவாய் கணக்கீட்டின் மூலம், பொருளாதாரத்தில் இருக்கும் பல்வேறு துறைகளின் முக்கியத்துவம் பற்றி அறிய முடிகின்றது.
2. தேசிய அளவிலான பணவியல் மற்றும் பொது நிதிக் கொள்கைகளை உருவாக்க உதவுகிறது.
3. திட்டமிடுதலுக்கும், திட்டங்களின் விளைவுகளை மதிப்பிடுவதற்கும் விவரங்களை அளிக்கின்றது.
4. குறுகிய கால மற்றும் நீண்ட கால பொருளாதார மாதிரிகளை உருவாக்கப் பயன்படுகிறது.
5. துறைவாரியான பொருளாதார விவரங்களை ஒப்பிடவும் பயன்படுகிறது.
6. தேசிய வருமானம் மூலம் தலா வருமானம் கணக்கிடப்படுகிறது.
7. ஒரு நாட்டில் இருக்கும் பல்வேறு உற்பத்திக் காரணிகளின் வருமானப் பகிர்வைத் தெரிந்து கொள்ளப் பயன்படுகிறது.
8. பேரியல் பொருளாதாரக் காரணிகளான வரி – GDP விகிதம், கடன் – GDP விகிதம் போன்றவற்றை கண்டறிய உதவுகிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**35.தேசிய வருவாயின் முக்கியத்துவத்தை விவரி. (2.6)**

**தேசிய வருவாயின் முக்கியத்துவம்:**

**பல்வேறு துறைகளின் முக்கியத்துவம்:**

- தேசிய வருவாய் கணக்கீட்டின் மூலம், பொருளாதாரத்தில் இருக்கும் பல்வேறு துறைகளின் முக்கியத்துவம் பற்றி அறிய முடிகின்றது.
- பொருள்கள் மற்றும் பணிகள் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்றன, பகிரப்படுகின்றன, செலவு செய்யப்படுகின்றன, சேமிக்கப்படுகின்றன, வரி விதிக்கப்படுகின்றன போன்றவைகளை அறிய இயலும்.

**பணவியல் கொள்கை:**

- தேசிய அளவிலான பணவியல் மற்றும் பொது நிதிக் கொள்கைகளை உருவாக்க உதவுகிறது.
- பொருளாதாரத்தைச் சரியான பாதையில் இட்டுச் செல்ல வேண்டிய வழிமுறைகளைக் கையாள உதவுகிறது.

**திட்டமிடுதல்:**

- திட்டமிடுதலுக்கும், திட்டங்களின் விளைவுகளை மதிப்பிடுவதற்கும் விவரங்களை அளிக்கின்றது.
- நாட்டின் மொத்த வருமானம், உற்பத்தி, சேமிப்பு மற்றும் நுகர்ச்சியின் அளவுகளை அளிக்கிறது.

**பொருளாதார மாதிரி:**

- குறுகிய கால மற்றும் நீண்ட கால பொருளாதார மாதிரிகளை உருவாக்க தேசிய வருவாய் கணக்கீடு பயன்படுகிறது.

**வருமான ஒப்பீடு:**

- துறைவாரியான பொருளாதார விவரங்களை ஒப்பிடவும் பயன்படுகிறது.
- ஒரு நாட்டில் வட்டாரங்களின் வருமானத்தை மற்ற நாடுகளின் வருமானத்தோடு ஒப்பிடவும் பயன்படுகிறது.

**தலா வருமான கணக்கீடு:** தேசிய வருமானம் மூலம் தலா வருமானம் கணக்கிடப்படுகிறது.

**வருமானப் பகிர்வு:**

- ஒரு நாட்டில் இருக்கும் பல்வேறு உற்பத்தி காரணிகளின் வருமானப் பகிர்வை தெரிந்து கொள்ள பயன்படுகிறது.

**விகிதம்:**

- பேரியல் பொருளாதாரக் காரணிகளான வரி – GDP விகிதம், பற்றாக்குறை - GDP கடன் – GDP விகிதம் போன்றவற்றை கண்டறிய உதவுகிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**36.தேசிய வருவாயைக் கணக்கிடும் முறைகளை விளக்குக. (2.5.1)**

**தேசிய வருவாயைக் கணக்கிடும் முறைகள்:**

1.உற்பத்தி முறை 2. வருமானமுறை 3. செலவுமுறை

**1. உற்பத்தி முறை:**

- உற்பத்தி முறை என்பது ஒரு நாட்டின் உற்பத்தியை கணக்கிடுவது ஆகும். இம்முறை **சரக்கு முறை** என்றும் அழைக்கப்படுகிறது.
- ஒரு குறிப்பிட்ட ஆண்டில் விவசாயம், தொழில், வணிகம் போன்ற துறைகளின் உற்பத்தியின் மொத்தமே தேசிய உற்பத்தி ஆகும்.
- ஒரு துறையின் வெளியீடு மற்றொரு துறையின் உள்ளீடாகச் செல்ல வாய்ப்பு இருப்பதால் ஒரே பொருள் இருமுறை அல்லது பலமுறை கணக்கில் வர வாய்ப்பு உள்ளது. இதற்கு **இருமுறை கணக்கிடல்** என்று பெயர்.
- இதனை தவிர்க்க இறுதி பொருட்களின் மதிப்பையோ அல்லது ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்ட மதிப்புக் கூட்டலையோ கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**இந்தியாவில் பயன்படுத்தப்படும் துறைகள்:**

- விவசாயம், சுரங்கம், தயாரிப்பு மற்றும் கைவினைப் பொருள்கள் துறை

**2.வருமான முறை:**

- வருமான முறை பகிர்வு பகுதியிலிருந்து அணுகப்படுகிறது. உற்பத்தி நிலைகளில் உற்பத்திக் காரணிகள் பெற்ற அனைத்து வித ஊதியங்களையும் கூட்டி தேசிய வருமானத்தைக் கணக்கிடலாம்.

**வேறு பெயர்கள்:** 1. வருமான முறை 2. காரணிகள் சம்பாதிக்கும் முறை

**இந்தியாவில் பயன்படுத்தப்படும் துறைகள்:**

- விவசாயம், சுரங்கம், தயாரிப்பு மற்றும் கைவினைப் பொருள்கள் துறை

$$Y = w + r + i + \pi + (R-P)$$

**இதில்**

W=கூலி, r = வாடகை, i = வட்டி, $\pi$ = இலாபம்
R = ஏற்றுமதி P = இறக்குமதி

**3.செலவு முறை:**

- ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்த செலவுகள் அனைத்தையும் கூட்டி தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

- ❖ தனிநபர் சுய நுகர்வு செலவுகள், நிகர உள்நாட்டு முதலீடு, அரசின் கொள்முதல் செலவு, முதலீட்டு பொருள் வாங்கும் செலவு மற்றும் நிகர ஏற்றுமதி போன்ற அனைத்து செலவுகளையும் கூட்டி செலவு முறையில் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.
- ❖ **GNP =C+I+G+(X-M)**

**37.தேசிய வருவாய் கணக்கீட்டில் உள்ள சிரமங்கள் யாவை? (2.7)**

**தேசிய வருவாய் கணக்கீட்டில் உள்ள சிரமங்கள்:**

**1.மாற்றுச் செலுத்துதல்கள்:**

- ❖ ஓய்வூதியம், வேலையின்மைக்கான உதவித்தொகை, மானியங்கள் போன்றவற்றை அரசு அளிக்கிறது. இவைகளை தேசிய வருவாயில் சேர்ப்பதில்லை.

**2.தேய்மானக் கொடுப்பளவு மதிப்பிடுவதில் சிக்கல்:**

- ❖ தேய்மானக் கொடுப்பளவு, விபத்து இழப்பீடு மற்றும் பழுது கட்டணங்கள் போன்றவற்றை தேசிய வருவாயிலிருந்து கழிப்பது மிக எளிதானது அல்ல.

**3.பணம் செலுத்தப்படாத சேவைகள்:**

- ❖ இந்தியாவில் அதிகமான பெண்கள் வீட்டிலேயே அதிக வேலை செய்கின்றனர். ஆனால் அவர்களுடைய அர்ப்பணிப்பு தேசிய உற்பத்தியில் சேர்க்கப்படுவதில்லை.

**4.சட்டவிரோத நடவடிக்கைகளிலிருந்து பெறும் வருமானம்:**

- ❖ சட்டவிரோத நடவடிக்கைகளிலிருந்து பெறப்படும் வருமானம் தேசிய வருமானத்தில் சேர்க்கப்படுவதில்லை.

**5.சுய நுகர்வுக்கு உற்பத்தி செய்தல் மற்றும் விலை மாற்றம்:**

- ❖ விவசாயிகள் தங்களின் சுய நுகர்விற்காக உற்பத்தியில் ஒரு பகுதியை ஒதுக்கி வைக்கின்றனர். சந்தையில் விற்பனை செய்யாமல் ஒதுக்கிய உற்பத்தி தேசிய வருமானத்தில் சேர்க்கப்பட்டதா என்பதைக் கண்டறிவதில் சிக்கல் ஏற்படுகிறது.

**6.மூலதன இலாபம்:**

- ❖ தேசிய வருமான கணக்கீட்டில் மூலதன இலாபம் சேர்க்கப்படுவதில்லை.

**7.புள்ளி விவர சிக்கல்:**

- ❖ ஒரே விவரத்தை பல முறை கணக்கில் சேர்ப்பது, நம்பகத்தன்மை, புள்ளி விவரங்கள் கிடைக்காமை போன்றவை பிரச்சனைகளைத் தரலாம்.
- ❖ புள்ளி விவரங்களை சேகரிக்கும் பெரும்பான்மையான அலுவலர்கள் பயிற்சி அற்றவர்களாகவும், திறமையிற்றவர்களாகவும் உள்ளனர்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**38.பொருளாதார ஆய்வில், சமூகக் கணக்கிடுதலின் அவசியத்தை விவாதி. (2.8)**

**பொருளாதார ஆய்வில், சமூகக் கணக்கிடுதலின் அவசியம்:**

- ❖ சமூகக் கணக்கிடுதல் மூலமாகவும் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.
- ❖ சமூகக் கணக்கிடுதல் முறையில் நிறுவனங்கள், குடும்பங்கள், அரசு மற்றும் இதுபோன்ற அமைப்புகளின் பரிமாற்றங்கள் பதியப்பட்டு இவற்றிற்கு இடையே உள்ள தொடர்புகளும் கண்டறியப்படுகின்றன.
- ❖ சமூகக் கணக்கிடுதலை தயாரிப்பது பொருளியல் அறிஞர்களுக்கு கொள்கைகளை உருவாக்க பயன் உள்ளதாக இருக்கும்.
- ❖ ஏனெனில் இது பொருளாதார அமைப்பின் பல்வேறு துறைகளுக்கிடையே உள்ள புள்ளியியல் மற்றும் பொருளாதார காரணிகளிக்கிடையேயுள்ள தொடர்புகளை விளக்குகிறது.

**சமூகக் கணக்கிடுதல் மற்றும் துறைகள்:**

- ❖ ஒருநாட்டின் பொருளாதாரம் பல்வேறு துறைகளாக பிரிக்கப்படுகிறது. அவையாவன:

**1.நிறுவனங்கள்:** நிறுவனங்கள் உற்பத்திக் காரணிகளைப் பணியில் அமர்த்தி பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்கின்றன.
**2. குடும்பங்கள்:** குடும்பங்கள் தங்கதள் உழைப்பினை அளித்து கூலியைப் பெற்று அதன் மூலம் பண்டங்கள் மற்றும் பணிகளை வாங்குகின்றன.

**3.அரசு:** பாதுகாப்பு, பொது சுகாதாரம், கல்வி ஆகியவற்றை மக்களுக்கு வழங்குவதுதான் அரசின் முக்கியப் பணியாகும்.

**4. வெளிநாட்டு வாணிபம்:** ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வருமானம், வெளிநாட்டு கடன்கள், வெளிநாட்டு மூலதன வருமானம் மற்றும் செலுத்துதல்கள் போன்றவை வெளிநாட்டுத் துறையாகக் கருதப்படுகிறது.

**5. மூலதனதுறை:** மூலனத்துறை சேமிப்பையும் முதலீட்டையும் உள்ளடக்கியது.

- ❖ மொத்த உள் நாட்டு உற்பத்தி துறைகளின் பங்கை மதிப்பிடுவதற்கு ஒரு நாட்டின் பொருளாதாரம் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் துறை என பிரிக்கப்படுகிறது.

R.THALAMPOORAJAN,M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## பயிற்சி வினாக்கள்

1.சைமன் குஷ்நெட்ஸ் சிறு குறிப்பு வரைக. (2.1)

2.தேசிய வருவாயின் அடிப்படைக் கருத்துருக்கள் யாவை? (2.4)

3.மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP): (2.4.1)

4.நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP): (2.4.1)

5.மொத்த தேசிய உற்பத்தி (GNP): (2.4.2)

6.நிகர தேசிய உற்பத்தி (NNP at Market Prices): (2.4.3)

7.காரணி செலவில் நிகர தேசிய உற்பத்தி (NNP at Factor Cost): (2.4.4)

8.தனிநபர் வருமானம்: (2.4.5)

9.செலவிடக்கூடிய வருமானம்: (2.4.6)

10. தலா வருமானம்: (2.4.7)

11.உண்மை வருமானம்: (2.4.8)

12.தேசிய வருவாயை அளவிடும் முறைகள் யாவை? (2.5)

13.உற்பத்தி முறையின் முன்னெச்செரிக்கைகள் யாவை? (2.5.1)

14.உற்பத்தி முறையின் வேறு பெயர் யாது? (2.5.1)

15.இருமுறை அல்லது அதற்கு மேல் விற்கப்படும் பொருட்களுக்கு உதாரணம் தருக. (2.5.1)

16.வருமான முறையின் வேறு பெயர் யாது? (2.5.2)

17.வருமான முறையின் முன்னெச்செரிக்கைகள் யாவை? (2.5.2)

18.$Y = w + r + I + \pi + (R - P)$ விவரிக்க. (2.5.2)

19.செலவு முறையின் முன்னெச்செரிக்கைகள் யாவை? (2.5.3)

20.உற்பத்திக் காரணிகள் என்றால் என்ன? (2.5.3)

21.காரணி செலவு என்றால் என்ன? (2.5.3)

22.உற்பத்தி செலவிற்கான உதாரணங்கள் யாவை? (2.5.3)

23.சந்தை விலை என்றால் என்ன? (2.5.3)

24.உற்பத்தி மதிப்பின் அளவீடு யாது? (2.5.3)

25.பணம் செலுத்தப்படாத சேவைகள் யாவை? (2.7.3)

26.எடி மற்றும் பீகாக் கூற்றுப்படி அரசு என்பதனை வரையறு. (2.8.1)

27.PQLI (Physical Quality of Life Index) என்றால் என்ன? (2.8.2)

R.THALAMPOORAJAN,M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# அத்தியாயம் 3

## வேலை வாய்ப்பு மற்றும் வருமான கோட்பாடுகள்

1.நடப்பு கூலி விகிதத்தில் வேலை செய்ய விரும்புகிற ஒவ்வொருவரும் பணியில் இருந்தால் அது **முழு வேலை வாய்ப்பு** எனப்படும்.

2. அமைப்புசார் வேலையின்மையின் இயல்பு **இயங்கும் சமுதாயம்**

3.மறைமுக வேளாண்மையில், உழைப்பாளியின் இறுதிநிலை உற்பத்தி **பூஜ்ஜியம்**

4. தொன்மை பொருளியல் கோட்பாட்டின் பிரதான இயல்பு **பொருளாதாரம் எப்போதும் சமநிலையில் இருக்கும்.**

5.J.B.சே ஒரு **தொன்மை பொருளியலாளர்.**

6. கின்ஸின் கருத்துப்படி, முதலாளித்துவ பொருளாளர் அமைப்பில் எப்படிப்பட்ட வேலையின்மை காணப்படுகிறது? **குறைவு வேலைவாய்ப்பு**

7. வேலைவாய்ப்பு பற்றி தொன்மை கோட்பாட்டின் மையக்கருத்து என்பது **அங்காடிவிதி**.

8. கீன்ஸின் கூற்றுப்படி வேலையின்மை என்பது **விளைவு தேவை பற்றாக்குறை.**

9.சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் இடையே சமநிலையை கொண்டு வருவது **வட்டியின்** நெகிழ்வு ஆகும்.

10. நவீன பொருளாதார கோட்பாட்டின் வளர்ச்சியில் **கீன்ஸ்** கோட்பாடு ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

11.வேலைவாய்ப்பு மற்றும் வருவாய் பற்றிய கீன்ஸின் கோட்பாட்டின் அடிப்படை கருத்துரு **விளைவுத் தேவை** ஆகும்.

12. தொகுத்தேவையின் கூறு **அரசு செலவு** ஆகும்.

13.மொத்த அளிப்பு சமம் **C+S+T+Rf**

14. தலையிடாக் கொள்கைக்கு பதிலாக கீன்ஸின் கோட்பாடு **சில சூழல்களில் அரசின் தலையீடு** யை எடுத்துரைக்கிறது

15.கீன்ஸின் வேலைவாய்ப்பு மற்றும் வருவாய் கோட்பாட்டில், **உற்பத்தி திறன் ஒப்பிடும்போது மிகக் குறைந்த அளவு மொத்த தேவை** பொருளாதார மந்த நிலைக்கு காரணமாக உள்ளது.

16.தொன்மை கோட்பாடு **சமநிலை வரவு செலவு** ஐ ஆதரிக்கிறது.

R.THALAMPOORANAN M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

17.**குறுகிய காலம்** சமநிலையை கீன்ஸுடைய கோட்பாடு வலியுறுத்துகிறது.

18. தொன்மை கோட்பாட்டின் படி, பயிற்சி வட்டி வீதம் **சேமிப்பு**க்கான வெகுமதி.

19. கீன்ஸின் கோட்பாட்டில், பணத்திற்கான தேவையையும் பணத்தின் அளிப்பையும் நிர்ணயிப்பது **வட்டி வீதம்** ஆகும்.

20. ஒரு பொருளாதாரத்தில் **தானியங்கும் விலைக் கருவி** இயக்கத்தை சே (Say)யின் விதி வலியுறுத்தியது.

**21." முழு வேலைவாய்ப்பு" வரையறு. (3.2)**

**" முழு வேலைவாய்ப்பு":**

- ❖ கீன்ஸின் கூற்றுப்படி முழு வேலைநிலை என்பது விருப்பமில்லா (Involuntary Unemployment) வேலையின்மை இல்லாமல் இருப்பது ஆகும்.
- ❖ நல்ல உடல் நலம் உள்ள தனிநபர்கள் மற்றும் நிலவுகின்ற கூலி விகிதத்தில் வேலை செய்ய தயாராக இருப்பவர்கள் அனைவருக்கும் வேலை கிடைக்கிறதெனில், அதனை முழு வேலைவாய்ப்பு என்கிறோம்.

**22.ஊரக வேலையின்மையின் முக்கிய இயல்பு யாது? (3.3)**

**ஊரக வேலையின்மையின் முக்கிய இயல்பு:**

**1.பருவகால வேலையின்மை:**

- ❖ ஒரு வருடத்தில் சில காலங்களில் மட்டும் நிலவும், வேலையின்மைக்கும் பருவகால வேலையின்மை என்று பெயர்.

**2.மறைமுக வேலையின்மை:**

- ❖ தேவைக்கு அதிகமானவர்கள் ஒரு வேலையில் இருந்தால் அது மறைமுக வேலையின்மையாகும். (**உதாரணம்:** விவசாயம்)

**23.உடன்பாடில்லா வேலையின்மை பற்றி சிறு குறிப்பு வரைக. (3.3)**

**உடன்பாடில்லா வேலையின்மை:**

- ❖ உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் தற்காலிக அல்லது பிறழ்ச்சி வேலையின்மை ஏற்படுகிறது.
- ❖ உழைப்பாளர்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம் பெயராமை, திறமை பற்றாக்குறை, இயந்திரங்களில் பழுது ஏற்படுதல் போன்ற காரணங்களால் உடன்பாடில்லா அல்லது பிறழ்ச்சி வேலையின்மை ஏற்படுகிறது.

R.THALAMPOORAJAN M.A.,B.Ed.,M.Phil., www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**24.தற்போதுள்ள சூழலில் ஆள் குறைப்பிற்கான காரணத்தைத் தருக. (3.3)**

**ஆள் குறைப்பிற்கான காரணங்கள் (தொழில்நுட்ப வேலையின்மை):**

- புதிய தொழில்நுட்பம் மூலதன செறிவு உடையதாக இருப்பதால், குறைந்த எண்ணிக்கையில் உழைப்பாளர்கள் தேவைப்படுகின்றனர்.
- உழைப்பை சேமிக்கின்ற புதிய கண்டுபிடிப்புகள் தொழில்நுட்ப வேலையின்மையை உருவாக்கும்.

**25.சே விதியின் எடுகோள்களைப் பட்டியலிடுக. (3.4.1)**

**சே விதியின் எடுகோள்கள்:**

1.ஒரு தனி வாங்குவோரோ, விற்பவரோ அல்லது உள்ளீடோ பொருளின் விலையை மாற்ற முடியாது.

2.முழு வேலை நிலை நிலவும்.

3.மக்கள் அவர்களின் சுய விருப்பங்களால் உந்தப்படுகிறார்கள்.

4.சந்தை சக்திகளே அனைத்தையும் நிர்ணயிக்கின்றன.

5.உழைப்பு மற்றும் பண்டங்களின் சந்தையில் நிறைவுப்போட்டி நிலவும்.

6.கூலி மற்றும் விலையில் நெகிழ்வுத்தன்மை உண்டு.

7.பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் உதவும்.

8.இது நீண்ட காலப் பகுத்தாய்வை அடிப்படையாகக் கொண்டது.

9.அதிக உற்பத்திக்கோ வேலையின்மைக்கோ வாய்ப்பில்லை.

10. உற்பத்திக் காரணிகள் அவற்றின் உற்பத்தித் திறனுக்கேற்ப ஊதியம் பெற விருப்பமுடன் இருப்பார்கள்.

11.விலைக்கருவி தானாக இயங்குவதால் அங்கு அரசின் தலையீடு தேவை இருக்காது.

12.வட்டிவீத நெகிழ்வுத்தன்மை, சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் சமநிலையை உருவாக்கும்.

**26." விளைவுத் தேவை" என்றால் என்ன? (3.6)**

**விளைவுத் தேவை:**

- விளைவுத்தேவை என்பது உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மீது உண்மையிலேயே செலவு செய்கிற பணத்தின் அளவு ஆகும். (அல்லது)
- உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மூலம் தொழில் முனைவோர்கள் எதிர்பார்க்கும் பணத்தின் அளவு.
- ED = Y= C + I = வெளியீடு = வேலைவாய்ப்பு
- விளைவுத் தேவை ஒரு பொருளாதாரத்தின் வேலைநிலையை நிர்ணயிக்கிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**27.தொகு அளிப்பின் கூறுகள் யாவை? (3.6.2)**

- **தொகு அளிப்பின் கூறுகள்:**
- தொகு அளிப்பில் கீழ்கண்ட நான்கு பகுதிகள் உள்ளன.
- 1.மொத்த நுகர்வுச் செலவு
- 2.மொத்த தனியார் சேமிப்பு
- 3.நிகர வரி வசூல்.
- 4.தனிநபர் வெளிநாட்டவர்க்கு கொடுக்கின்ற மாற்று செலுத்துதல்கள் மற்றும் உதவித்தொகை.

**28.கீழ்காணுபவற்றை சுருக்கமாக விவரி. (3.3)**

**அ) பருவகால வேலையின்மை ஆ) உடன்பாடில்லா வேலையின்மை**

**இ) படித்தவர் வேலையின்மை**

**அ) பருவகால வேலையின்மை:**

- ஒரு வருடத்தில் சில காலங்களில் மட்டும் நிலவும், வேலையின்மைக்கும பருவகால வேலையின்மை என்று பெயர்.
- விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்கள் (கரும்பு, பருத்தி) போன்றவை குறிப்பிட்ட பருவத்தில் மட்டுமே நடைபெறும்.

**ஆ) உடன்பாடில்லா வேலையின்மை:**

- உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் தற்காலிக அல்லது பிறழ்ச்சி வேலையின்மை ஏற்படுகிறது.
- உழைப்பாளர்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம் பெயராமை, திறமை, பற்றாக்குறை, இயந்திரங்களில் பழுது ஏற்படுதல் போன்ற காரணங்களால் உடன்பாடில்லா அல்லது பிறழ்ச்சி வேலையின்மை ஏற்படுகிறது.

**இ) படித்தவர் வேலையின்மை:**

- சில நேரங்களில் படித்து கல்வித் தகுதி பெற்றவர்களுக்கு வேலை கிடைப்பது இல்லை அல்லது பகுதி நேர வேலை செய்கின்றனர்.

**29.தொன்மை வேலைவாய்ப்பு கோட்பாட்டின்படி கூலிக்குறைப்பு எவ்வாறு வேலையின்மைப் பிரச்சனைக்குத் தீர்வாக அமைந்தது என்பதை வரைபடம் மூலம் விளக்குக. (3.4)**


**தொன்மை வேலைவாய்ப்பு கோட்பாடு:**

- கூலி மற்றும் விலையில் நெகிழ்வுத் தன்மை உண்டு. உற்பத்திக் காரணிகள் அவற்றின் உற்பத்தித் திறனுக்கு ஏற்ப ஊதியம் பெற விருப்பமுடன் இருப்பார்கள்.
- எனவே கூலி குறைப்பு வேலையின்மைக்கு தீர்வாக அமையும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**வரைபடம்:**




**வரைபட விளக்கம்:**

- ❖ OW கூலி விகிதத்தில் ON அளவு வேலைவாய்ப்பு உள்ளது.
- ❖ கூலி விகிதமானது OW1 ஆக குறையும்.
- ❖ பொது வேலைவாய்ப்பானது ON1 ஆக அதிகரித்தது. பேராசிரியர் பிகு, வேலையி் சனைக்கு இக்கோட்பாட்டை அடிப்படைத் தீர்வாக எடுத்துக் கொண்டார்.

**30.J.B.சே விதியில் விளைவுகளைப் பற்றி குறிப்பு வரைக. (3.4.1)**

- ❖ **J.B.சே விதியில் விளைவுகள்:**

  1.அதிக உற்பத்திக்கோ, வேலையின்மைக்கோ வாய்ப்பில்லை.

  2.பயன்படுத்தாத வளங்கள் நாட்டில் இருந்தால், முழுவேலை வாய்ப்பு வரை அவற்றை பயன்படுத்துவது இலாபகரமாக இருக்கும்.

  3.விலைக்கருவி தானாக இயங்குவதால் அங்கு அரசின் தலையீடு தேவை இருக்காது.

  4.வட்டி வீத நெகிழ்வுத்தன்மை, சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் சமநிலையை உருவாக்கும்.

  5.பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் செயல்படும். பணத்தை மக்கள் கையிருப்பாக வைத்திருக்க மாட்டார்கள்.

**31.கீன்ஸின் கோட்பாட்டை தொடர் வரைபடம் மூலம் விளக்குக.**

**கீன்ஸின் கோட்பாட்டை விவரி. (3.5)**

1.முழு வேலை கருத்தை மட்டும் விளக்காமல், குறைந்த வேலை நிலைக்கும் வாய்ப்பு இருப்பதை சுட்டிக் காட்டுகிறது.

2.ஒரு பொதுக் கோபாடாகவே திகழ்ந்தது.


3.குறுகிய காலத்தை அடிப்படையாகக் கொண்டு இருந்தன.

4.வேலை வாய்ப்பின் அளவு நிர்ணயிக்கப்படும் போது உற்பத்திக் காரணிகளான மூலதனம், உழைப்பு, திறன், தொழில்நுட்பம் ஆகியவை மாறாமலேயே இருக்கும்.

P.THALAMPOORANI,M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com




**32.தொகு தேவை என்றால் என்ன? அதன் கூறுகளைக் கூறுக. (3.6.1)**

**தொகு தேவை:**

- ❖ உழைப்பாளர்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யபட்ட பொருட்களை விற்பதால் எவ்வளவு வருவாய் கிடைக்கும் என்று தொழில்முனைவோர் எதிர்பார்க்கிறார்களோ அதுவே மொத்த தேவை ஆகும்.

**கூறுகள்:**

1.நுகர்வுத் தேவை 2. முதலீட்டுத் தேவை

3.அரசுச் செலவு 4. நிகர ஏற்றுமதி

**33.தொகு அளிப்பை வரைபடம் மூலம் விளக்குக. (3.6.2)**

**தொகு அளிப்பு:**


- ❖ தொகு அளிப்பு விலை என்பது ஒரு குறிப்பிட்ட அளவு உழைப்பையும் இடுபொருட்களையும் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்ற பிறகு கிடைக்கும் எதிர்பார்க்கப்படும் மொத்த தொகை ஆகும். இங்கு விலை என்பது விற்பனையால் கிடைத்த வருவாயை குறிப்பிடுகிறது.

R.THALAMPOORAJAN M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai

❖ தொகு அளிப்புக் கோட்டின் சாய்வு என்பது வேலைவாய்ப்புக்கும் உற்பத்தித் திறனுக்கும் இடையே உள்ள தொடர்பைச் சார்ந்து அமைந்துள்ளது.

**வரைபடம்:**

மொத்த அளிப்பு வளைகோடு




**வரைபட விளக்கம்:**

❖ Z நேர்கோடு என்பது பணக்கூலி மாறாமல் இருக்கும் போது உள்ள நிலையையும்,
❖ Z1 வேலைவாய்ப்பைப் பொறுத்து பணக்கூலி மாறும் போது உள்ள நிலையையும் விளக்குகின்றன.
❖ ONf அளவில் பொருளாதாரம் முழுவேலை நிலையை அடைகிறது. அதற்குப் பின்னர் தொகு அளிப்புக்கோடு செங்குத்தாக நெகிழ்வற்றதாக உள்ளது.
❖ பொருளின் **விலை அதிகமாக இருந்து கூலி குறைவாக இருந்தால்,** உற்பத்தியாளர்கள் **கூடுதலாக உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவார்கள்.**
❖ மாறாக **பொருட்களின் விலை குறைவாக இருந்து கூலி அதிகமானால்,** முதலீடு **குறையும்.** இதனால் **உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனும் குறையும்.**

R.THALAMPOORAJAN,M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**34.தொன்மையியத்தையும் கீன்ஸியத்தையும் ஒப்பிடுக. (ஏதேனும் ஐந்து) (3.7)**

| வரிசை எண் | கீன்ஸியம் | தொன்மையியம் |
|---|---|---|
| 1. | குறுகிய காலச் சமநிலை | நீண்ட காலச் சமநிலை |
| 2. | சேமிப்பு கெடுதல் | சேமிப்பு நல்லது |
| 3. | பணத்தின் பணி என்பது ஒருபுறம் பரிமாற்றத்திற்கு உதவவும், மறுபுறம் சேமிக்க கூடியதாகவும் செயல்படும் | பரிவர்த்தனைக்குத் மட்டுமே பணம் உதவும் |
| 4. | நாட்டின் பிரச்சனைகளை தாக்க பேரியல் அணுகுமுறை தேவை | நுண்ணின அடிப்படையில் பெரிய சிக்கல்களுக்கு தீர்வு காணுதல் அணுகுமுறை |
| 5. | அ ர சு த் த லை யீ டு அனுமதிக்கப்படுகிறது | தலையிடாக் கொள்ளை வலியுறுத்தப்படுகிறது |
| 6. | எல்லா சூழ்நிலைக்கும் முழு வேலைவாய்ப்பு மற்றும் குறைமுழு வேலை வாய்ப்பு பொருத்தமானது | முழு வேலை வாய்ப்புச் சூழலுக்கு மட்டுமே பொருந்தக் கூடியது |
| 7. | முரண்பாடுகளைக் கொண்டது முதலாளித்துவம் | முதலாளித்துவம் சரியானது |
| 8. | பொருளாதாரத்தின் தேவைக்கு ஏற்ப வரவு – செலவு அறிக்கையை மாற்றிக் கொள்ளலாம் | சமநிலை வரவு – செலவு அறிக்கை ஆதரிக்கப்படுகிறது |
| 9. | வருமான மாற்றம் மூலம் சேமிப்பு – முதலீடு சமநிலை முன் வைக்கப்படுகிறது | வட்டிவீத மாற்றம் மூலம் சேமிப்பு – முதலீடு சமத்துவம் முன் வைக்கப்படுகிறது |
| 10. | பணத்திற்கான தேவை மற்றும் அளிப்பே வட்டி வீதத்தை நிர்ணயிக்கிறது | சேமிப்பு மற்றும் முதலீடு ஆகிய இரண்டும் வட்டி வீதத்தை நிர்ணயிக்கிறது |
| 11. | வட்டி வீதம் மாறிக்கொண்டே உள்ளது (Flow) | வட்டி வீதம் மாறாதது (Stock) |
| 12. | தேவையே அதன் அளிப்பை உருவாக்குகிறது | அளிப்பு தன் தேவையை தானே உருவாக்குகிறது |
| 13. | வட்டி என்பது ரொக்க இருப்பை விட்டுக் கொடுப்பதற்கான வெகுமதி | வட்டி என்பது சேமிப்பிற்கான வெகுமதி |

**35.வேலையின்மைகளின் வகைகளை விவரி. (3. 3)**

**வேலையின்மைகளின் வகைகள்:**

**1.வாணிபச்சூழல் வேலையின்மை:**

- கீழ்நோக்கிய பகுதியில் ஒரு பொருளாதாரம் இருக்கும் போது நிகழ்கின்ற வேலையின்மைக்கு **வாணிபச்சூழல் வேலையின்மை** என்று பெயர்.
- அரசு முதலீட்டை அதிகரிப்பதன் மூலமும், விரிவான பணவீக்கக் கொள்கைகளக் கடைப்பிடித்து இந்த சூழல் வேலையின்மையைக் குறைக்கலாம்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**2.பருவகால வேலையின்மை:**

- ஒரு வருடத்தில் சில காலங்களில் மட்டும் நிலவும், வேலையின்மைக்கு **பருவகால வேலையின்மை** என்று பெயர்.
- விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்கள் குறிப்பிட்ட பருவத்தில் மட்டுமே நடைபெறும்.
- **உதாரணம்:** கரும்பு, பருத்தி விளைச்சல்.

**3.தற்காலிக அல்லது உடன்பாடில்லா (பிறழ்ச்சி) வேலையின்மை:**

- உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் தற்காலிக அல்லது **பிறழ்ச்சி வேலையின்மை** ஏற்படுகிறது.
- உழைப்பாளர்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம் பெயராமை, திறமை, பற்றாக்குறை, இயந்திரங்களில் பழுது ஏற்படுதல் போன்ற காரணங்களால் **உடன்பாடில்லா அல்லது பிறழ்ச்சி வேலையின்மை** ஏற்படுகிறது.

**4.கற்றோர் அல்லது படித்தோர் வேலையின்மை:**

- சில நேரங்களில் படித்து கல்வித் தகுதி பெற்றவர்களுக்கு வேலை கிடைப்பது இல்லை அல்லது பகுதி நேர வேலை செய்கின்றனர்.

**5.தொழில்நுட்ப வேலையின்மை:**

- புதிய தொழில்நுட்பம் மூலதன செறிவு உடையதாக இருப்பதால், குறைந்த எண்ணிக்கையில் உழைப்பாளர்கள் தேவைப்படுகின்றனர்.
- உழைப்பை சேமிக்கின்ற புதிய கண்டுபிடிப்புகள் **தொழில்நுட்ப வேலையின்மை**யை உருவாக்கும்.

**6.அமைப்புசார் வேலையின்மை:**

- சமூக அமைப்பில் ஏற்படும் பெரிய மாற்றங்களால் **அமைப்புசார் வேலையின்மை** உருவாகிறது.
- இந்தியாவில் மூலதன பற்றாக்குறையால் மக்கள் வேலையின்றி இருக்கின்றனர்.

**7.மறைமுக வேலையின்மை:**

- தேவைக்கு அதிகமானவர்கள் ஒரு வேலையில் இருந்தால் அது **மறைமுக வேலையின்மை** ஆகும்.
- உதாரணம்: **விவசாயத்துறை**

R.THALAMPOORAJAN M.A.,B.Ed.,M.Phil., www.Padasalai.

**36.சேயின் அங்காடி விதியினை திறனாய்வு செய்க. (3.4.1)**

**சேயின் அங்காடி விதி:**

J.B.சேயின் கருத்துப்படி, “அளிப்பு அதன் தேவையை தானே உருவாக்கும்” (Supply creates its own demand)

**சேயின் அங்காடி விதி பற்றிய திறனாய்வு:**

1.கீன்ஸின் கருத்துப்படி, அளிப்பு அதற்கான தேவையை உருவாக்காது.

உற்பத்தி அதிகரிக்கும் அளவிற்கு தேவை அதிகரிக்காவிட்டால் இந்த விதி செயல்படாது.

2.பொருளாதாரத்தில் தானாக சரி செய்துகொள்ளும் அமைப்பு வேலையின்மையைக் குறைக்காது. மூலதன விகிதத்தில் அதிகரித்து வேலையின்மையைக் குறைக்கலாம்.

3.தனிநபர்கள் எதிர்பாராத சூழ்நிலைகளுக்காகவும், வியாபாரிகள் எதிர்கால நடவடிக்கைகளுக்காகவும் பணத்தை இருப்பாக வைத்திருப்பார்கள். ஆகவே பணம் நடுநிலையாக இருக்காது.

4.சேயின் சந்தை விதி, அளிப்பு தன் தேவையை தானே உருவாக்கும் என்ற அடிப்படையில் செயல்படுவதால், அதிக உற்பத்திக்கு வாய்ப்பு இல்லை என்று கூறுகிறது. ஆனால் கீன்ஸின் கூற்றுப்படி அளவுக்கு அதிகமான உற்பத்திக்கு வாய்ப்பு உள்ளது.

5.முதலாளித்துவ நாடுகளில் குறைவான வேலை உள்ளதால், முழு வேலை வாய்ப்பிற்குச் சாத்தியமில்லை என கீன்ஸ் கூறுகிறார்.

6.அளவுக்கு அதிகமான உற்பத்தியும், அதிக வேலையின்மையும் பல முதலாளித்துவ நாடுகளில் காணப்படுவதால் அரசு தலையிட அவசியம் என கீன்ஸ் கருதுகிறார்.

**37.ADF மற்றும் ASF க்கு இடையிலான சமநிலையை வரைபடம் மூலம் விவரி. (3.6.1)**

**ADF மற்றும் ASF க்கு இடையிலான சமநிலை:**

**கீன்ஸின் வேலைவாய்ப்பு கோட்பாடு:**


- ADF மற்றும் ASF சமநிலையை விளக்க, குடும்பங்கள் மற்றும் வியாபாரம் ஆகிய இருதுறைகள் எடுத்துக்கொள்ளப்படுகிறது.
- நுகர்வு குடும்பங்களுக்கும், முதலீடு வியாபார நிறுவனங்களுக்கு முடிவுகளாக அமைகின்றன.
- உற்பத்தி சமநிலையைத் தீர்மானிக்க தொகுதேவை கருத்து முக்கியத்துவம் வகிக்கிறது.
- நுகர்வுச் சார்பு நேர்கோடாகவும், முதலீடு தன்னிச்சையானது எனவும் கீன்ஸின் கோட்பாடு அனுமானிக்கிறது.

**AD = C+I+G+ (X-M)**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**வரைபடம்:**




**வரைபட விளக்கம்:**

வரைபடத்தின்படி,

- "E" என்ற புள்ளியில், தொகு தேவை = தொகு அளிப்பு ஆகும்.
- "$N_0$" = வேலைவாய்ப்பு
- $ON_1$ அளவு வேலைவாய்ப்பில், தொகு அளிப்பு = $N_1R_1$
- $M_1N_1$ = உற்பத்தி செய்ய முடியும் அளவு.
- $M_1R_1$ =இலாபம் அடைய வேண்டிய உற்பத்தி அளவு மற்றும் உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்தும் அளவு
- "E" என்ற புள்ளியில், சமநிலையை அடைந்த பின்பு உழைப்பாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படமாட்டார்கள்.
- $N_0$ நிலைக்குப் பிறகு வேலைவாய்ப்பு அதிகரித்தால், தொகு தேவை தொகு அளிப்பைவிட குறைவாக இருக்கும்.
- $N_0$ மற்றும் $N_1$ இடையே உள்ள வித்தியாசம் வேலையின்மை ஆகும்.

R.THALAMPOORANAN M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**38.தொன்மைக் கோட்பாடு மற்றும் கீன்ஸ் கோட்பாடு ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளை விளக்குக. (3.7)**

| வரிசை எண் | கீன்ஸியம் | தொன்மையியம் |
|---|---|---|
| 1. | குறுகிய காலச் சமநிலை | நீண்ட காலச் சமநிலை |
| 2. | சேமிப்பு கெடுதல் | சேமிப்பு நல்லது |
| 3. | பணத்தின் பணி என்பது ஒருபுறம் பரிமாற்றத்திற்கு உதவவும், மறுபுறம் சேமிக்க கூடியதாகவும் செயல்படும் | பரிவர்த்தனைக்குத் மட்டுமே பணம் உதவும் |
| 4. | நாட்டின் பிரச்சனைகளை தாக்க பேரியல் அணுகுமுறை தேவை | நுண்ணினை அடிப்படையில் பெரிய சிக்கல்களுக்கு தீர்வு காணுதல் அணுகுமுறை |
| 5. | அ ர சு த் த லை யீ டு அனுமதிக்கப்படுகிறது | தலையிடாக் கொள்ளை வலியுறுத்தப்படுகிறது |
| 6. | எல்லா சூழநிலைக்கும் முழு வேலைவாய்ப்பு மற்றும் குறைமுழு வேலை வாய்ப்பு பொருத்தமானது | முழு வேலை வாய்ப்புச் சூழலுக்கு மட்டுமே பொருந்தக் கூடியது |
| 7. | முரண்பாடுகளைக் கொண்டது முதலாளித்துவம் | முதலாளித்துவம் சரியானது |
| 8. | பொருளாதாரத்தின் தேவைக்கு ஏற்ப வரவு – செலவு அறிக்கையை மாற்றிக் கொள்ளலாம் | சமநிலை வரவு – செலவு அறிக்கை ஆதரிக்கப்படுகிறது |
| 9. | வருமான மாற்றம் மூலம் சேமிப்பு – முதலீடு சமநிலை முன் வைக்கப்படுகிறது | வட்டிவீத மாற்றம் மூலம் சேமிப்பு – முதலீடு சமத்துவம் முன் வைக்கப்படுகிறது |
| 10. | பணத்திற்கான தேவை மற்றும் அளிப்பே வட்டி வீதத்தை நிர்ணயிக்கிறது | சேமிப்பு மற்றும் முதலீடு ஆகிய இரண்டும் வட்டி வீதத்தை நிர்ணயிக்கிறது |
| 11. | வட்டி வீதம் மாறிக்கொண்டே உள்ளது (Flow) | வட்டி வீதம் மாறாதது (Stock) |
| 12. | தேவையே அதன் அளிப்பை உருவாக்குகிறது | அளிப்பு தன் தேவையை தானே உருவாக்குகிறது |
| 13. | வட்டி என்பது ரொக்க இருப்பை விட்டுக் கொடுப்பதற்கான வெகுமதி | வட்டி என்பது சேமிப்பிற்கான வெகுமதி |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## பயிற்சி வினாக்கள்

**1.J.B.சே பற்றி சிறு குறிப்பு வரைக. (3.1)**

**2.லர்னரின் கூற்றுப்படி முழு வேலைநிலை வரையறு. (3.2)**

**3.எவ்வகையான வேலையின்மை கிராம மற்றும் நகர்ப்புறங்களில் நிலவுகின்றது? (3.3)**

**4.கீன்ஸின் கூற்றுப்படி விளைவு விதியை வரையறு. (3.6)**

**5.முதலீட்டு அளவை நிர்ணயிக்கும் காரணிகளைக் குறிப்பிடுக. (3.6)**

**6.ரொக்க இருப்பு விருப்பத்தின் மூன்று அடிப்படை நோக்கங்கள் யாவை? (3.6)**

**7.தொகு தேவையில் நுகர்வுச் சார்பை நிர்ணயிக்கும் காரணிகளைக் குறிப்பிடுக. (3.6.1)**

**8.தொகு அளிப்பு விலை என்றால் என்ன? (3.6.2)**

**9.இறுதிநிலை நுகர்வு விருப்பம் என்றால் என்ன? (3.6.2)**

**10.பண அளிப்பு என்றால் என்ன? (3.6.2)**

**11.** முழு வேலைவாய்ப்பு **என்றால் என்ன?**

**12.** வேலையின்மை **என்றால் என்ன?**

**13.** வேலைக்குறைவு **என்றால் என்ன?**

R.THALAMPOORANAN.M.A.,B.Ed.,M.Phil., www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# அத்தியாயம் 4: நுகர்வு மற்றும் முதலீடு சார்புகள்

1.சராசரி நுகர்வு நாட்டம் கணக்கிடப்படுவது **C/Y**

2. இறுதிநிலை நுகர்வு நாட்டம் கூட்டினால்

**நுகர்வு சார்புக் கோடு செங்குத்தை நோக்கி செல்லும்**

3. கீன்ஸின் நுகர்வுச் சார்பு C = 10+0.8 ஆக இருந்து, செலவிடக் கூடிய வருவாய் ₹1000 ஆக இருந்தால், நுகர்வு எவ்வளவு? **₹810**

4.கீன்ஸின் நுகர்வுச் சார்பு 10+0.8Y ஆக இருந்து, செலவிடக் கூடிய வருவாய் 100 இருந்தால், இறுதிநிலை நுகர்வு நாட்டம் எவ்வளவு? **₹0.8**

5. கீன்ஸின் நுகர்வுச் சார்பு 10+0.8Yஆக இருந்து, செலவிடக்கூடிய வருவாய் 100 ஆக இருந்தால், சராசரி நுகர்வு நாட்டம் எவ்வளவு? **0.9**

6. தேசிய வருவாய் உயரும்போது

**APC யின் மதிப்பு குறைந்து சென்று MPC யின் மதிப்பு நெருங்கிவிடும்**

7. ஒரு குறிப்பிட்ட வருவாய் அளவில், நுகர்வு அதிகரித்தால்

**மொத்த தேவை உயரும்**

8.குறைவான வட்டி வீதம் **கடனையும் செலவையும் அதிகரிக்கும்**.

9 இறுதிநிலை நுகர்வு விருப்பு = $\frac{\text{நுகர்வு மாற்றம்}}{\text{வருவாய் மாற்றம்}}$

10. மொத்த வருவாய்க்கும் மொத்த நுகர்வு செலவுக்கும் உள்ள தொடர்பு

**நுகர்வுச் சார்பு**.

11.MPC ஐயும் MPS ஐயும் கூட்டினால் கிடைப்பது. 1

12. வருவாய் உயர்ந்தால், நுகர்வு **உயரும்.**

13 முதலீடு தன்னிச்சையானது என அனுமானிக்கப்பட்டால், ADயின் சாய்வை நிர்ணயிப்பது **இறுதிநிலை நுகர்வு நாட்டம்.**

14. **மொத்த தேவை** இடம் பெயர்ந்த பின்னர் வெளியீடு எவ்வளவு மாறுகிறது என்பதை பெருக்கி கூறுகிறது.

15. பெருக்கியின் மதிப்பு அ) 1/(1-MPC) ஆ) 1/MPS இ) 1/MPS **ஈ) அ மற்றும் ஆ**

16. MPC = 0.5 எனில், பெருக்கியின் மதிப்பு **2**

17. ஒரு திறந்து விடப்பட்ட (Open Economy) பொருளாதாரத்தில் இறக்குமதி, பெருக்கியின் மதிப்பை **குறைக்கிறது.**

18 கீன்ஸின் கருத்துப்படி முதலீடு MEC ஐயும் **வட்டி வீதத்தையும்** சார்ந்தது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

19 மிகைப் பெருக்கி (Super Multiplier) என்ற கருத்தை முதன் முதலில் பயன்படுத்தியவர் **J.R. ஹிக்ஸ்**

20 MEC என்ற கருத்துருவை அறிமுகப்படுத்தியவர் யார்? **J.M.கீன்ஸ்**

**21.நுகர்வுச் சார்பு என்றால் என்ன? (4.2.1)**

**நுகர்வுச் சார்பு:**

- வருவாய்க்கும் நுகர்வுக்கும் உள்ள தொடர்பையே **"நுகர்வுச் சார்பு"** அல்லது **"நுகர்வு நாட்டம்"** என்கிறோம்.
- மொத்த நுகர்வு மற்றும் மொத்த நாட்டு வருமானம் ஆகிய இரு ஒட்டு மொத்தத்திற்கு இடையேயான சார்பு தொடர்பாகும்.
- **C = f(y)**

**22." நுகர்வு நாட்டம்" என்றால் என்ன? (4.2.2)**

**நுகர்வு நாட்டம்:**

- பல்வேறு வருமான நிலைகளில் நுகர்விற்காக செலவிடப்பட்ட வருமானம் **நுகர்வு நாட்டம்** ஆகும்.
- வருவாய்க்கும் நுகர்வுக்கும் உள்ள தொடர்பையே **"நுகர்வுச் சார்பு"** அல்லது **"நுகர்வு நாட்டம்"** என்கிறோம்.

**23.சராசரி நுகர்வு நாட்டம் – வரையறு. (4.2.2)**

**சராசரி நுகர்வு நாட்டம்:**

- வருமானத்திற்கும் நுகர்வுக்குமான வீதமே சராசரி நுகர்வு நாட்டம் ஆகும்.

$$APC = \frac{C}{Y}$$

இங்கு

C – நுகர்வு

Y– வருமானம்

**24.இறுதிநிலை நுகர்வு நாட்டம் – வரையறு. (4.2.2)**

**இறுதிநிலை நுகர்வு நாட்டம்:**

- வருமான மாற்றத்திற்கும் நுகர்வு மாற்றத்திற்கும் இடையேயான வீதமே இறுதிநிலை நுகர்வு நாட்டம் ஆகும்.

$$MPC = \frac{\Delta C}{\Delta Y}$$

இங்கு

$\Delta C$ = நுகர்வு மாற்றம்

$\Delta Y$ = வருமான மாற்றம்

**25.சேமிப்பு நாட்டம் என்றால் என்ன? (4.2.2)**

**சேமிப்பு நாட்டம்:**

- நுகர்வோர் வருமானத்தை பண்டங்களுக்கும் பணிகளுக்கும் செலவழிக்காமல் சேமித்து வைப்பது ஆகும்.
- வருமான மாற்றத்தினால் சேமிப்பில் ஏற்படும் மாற்றம் ஆகும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**26.சராசரி சேமிப்பு நாட்டம் வரையறு. (4.2.2)**

**சராசரி சேமிப்பு நாட்டம்:**

- ❖ வருமானத்திற்கும், சேமிப்பிற்கும் இடையேயான வீதமே சராசரி சேமிப்பு நாட்டம் எனப்படும்.
- ❖ சராசரி சேமிப்பு நாட்டம் என்பது மொத்த சேமிப்பை மொத்த வருவாயால் வகுத்தால் கிடைக்கக் கூடியதாகும்.

$$APS = \frac{S}{Y}$$

இங்கு
S = சேமிப்பு
Y = வருமானம்

**27.இறுதிநிலை சேமிப்பு நாட்டம் வரையறு. (4.2.2)**

**இறுதிநிலை சேமிப்பு நாட்டம்:**

- ❖ வருமான மாற்றத்திற்கும் சேமிப்பு மாற்றத்திற்கும் இடையேயுள்ள வீதமே இறுதிநிலை சேமிப்பு நாட்டம் ஆகும்.
- ❖ இறுதிநிலை சேமிப்பு நாட்டத்தை அறிய சேமிப்பு மாற்றத்தை வருமான மாற்றத்தினால் வகுத்தால் கிடைக்கும்.

$$MPS = \frac{\Delta S}{\Delta Y}$$

இங்கு
= சேமிப்பு மாற்றம்
= வருமான மாற்றம்

**28.பெருக்கி வரையறு. (4.4)**

**பெருக்கி:**

- ❖ கோட்பாடு உருவாக்கியவர்: **F.A. கான்**
- ❖ தேசிய வருமானத்தின் மாற்றத்திற்கும் முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள வீதத்தை பெருக்கி என்று வரையறுக்கலாம்.
- ❖ ΔI என்பது முதலீட்டில் அதிகரிப்பையும், மற்றும் ΔY வருமானத்தில் அதிகரிப்பையும் குறிக்கிறது.
- ❖ $K = \Delta I / \Delta Y$

**29.முடுக்கி வரையறு. (4.5.1)**

**முடுக்கி:**

- ❖ "தூண்டப்பெற்ற முதலீட்டிற்கும் தொடக்கத்தில் நுகர்வுச் செலவில் ஏற்படும் மாற்றத்திற்கும் இடையேயுள்ள விகிதம்" – **கே.கே.குரிஹாரா**
- ❖ முடுக்கி என்பது அதிகரித்த நுகர்வு மற்றும் அதன் விளைவினால் ஏற்படும் அதிகரிக்கும் முதலீட்டுக்கான தொடர்பைக் குறிக்கும் எண் மதிப்பு ஆகும்.

$$\text{முடுக்கி } (\beta) = \frac{\Delta I}{\Delta C}$$



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**30.கீன்ஸின் நுகர்வு சார்ந்த உளவியல் விதியின் கருத்துக்களைக் கூறுக. (4.2.3)**

**கீன்ஸின் நுகர்வு சார்ந்த உளவியல் விதியின் கருத்துக்கள்:**

1.வருமானம் உயரும் போது, நுகர்வுச் செலவும் அதிகரிக்கும்.

2.அதிகரித்த வருமானம் நுகர்வுச் செலவிற்கும், சேமிப்பிற்கும் இடையே சில விகிதத்தில் பிரிக்கப்படுகின்றது.

3.அதிகரிக்கின்ற வருமானம் எப்பொழுதும் நுகர்வு மற்றும் சேமிப்பு இரண்டையும் அதிகரிக்கச் செய்யும்.

**31.தன்னிச்சையான முதலீடு மற்றும் தூண்டப்பட்ட முதலீடு ஆகியவற்றை வேறுபடுத்துக. (4.3.2)**

❖ **தன்னிச்சையான முதலீடு மற்றும் தூண்டப்பட்ட முதலீடு வேறுபாடு:**

| தொ எண் | தன்னிச்சையான முதலீடு | ஊக்குவிக்கப்பட்ட முதலீடு |
|---|---|---|
| 1 | தன்னிச்சையானது | திட்டமிடப்பட்டது |
| 2 | வருவாயைப் பொறுத்து நெகிழாதது | வருவாயைப் பொறுத்து நெகிழ்வது |
| 3 | நல நோக்கமுடையது | இலாப நோக்கமுடையது |

**32.நுகர்வுச் சார்பைப் பாதிக்கின்ற ஏதேனும் மூன்று அக மற்றும் புறக்காரணிகளை விளக்குக. (4.2.4)**

**அக மற்றும் புறக்காரணிகள்:**

**அகவய காரணிகள்:**

அகவய காரணிகள் உளவியல் சிந்தனைகளுடன் தொடர்புடையது.

கீன்ஸின் எட்டு நோக்கங்கள்:

1. முன்னெச்சரிக்கை நோக்கம்
2. எதிர்பார்க்கும் நோக்கம்
3. கணிக்கும் நோக்கம்
4. முன்னேறும் நோக்கம்
5. பணவியல் சுதந்திர நோக்கம்
6. வாணிப நோக்கம்
7. கர்வ நோக்கம்
8. பேராசை நோக்கம்

R.THALAMPOORAJAN.,M.A.,M.Ed.,M.Phil.,
www.Padasalai.Net

**புறவயக் காரணிகள்:**

**1.வருமான பகிர்வு:**

- சமநிலை வருவாயை பகிர்வுடைய சமூகத்தில் அதிகமான நுகர்வு விருப்பம் இருக்கும். V.K.R.V. ராவ் அவர்களால் இக்கருத்து வலியுறுத்தப்பட்டது.

**2.விலை அளவு:**

- விலை வீழ்ச்சியடையும் போது சமூகத்தில் நுகர்வு விருப்பம் அதிகரிக்கும்.

**3.கூலி அளவு:**

- கூலி அதிகரிக்கும் போது, நுகர்வுச் செலவும் அதிகரிக்கும்.

**4.வட்டி விகிதம்:**

- அதிக வட்டி விகிதம் பணத்தை சேமிக்க ஊக்கம் அளிக்கும் மற்றும் நுகர்வைக் குறைக்கும்.

**5.நிதி கொள்கை**

**6.நுகர்வோர் கடன்**

**7.மக்கள் தொகை காரணிகள்**

**33.முடுக்கிக்கும் பெருக்கிக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குக. (4.4)**

**முடுக்கிக்கும் பெருக்கிக்கும் உள்ள வேறுபாடுகள்:**

| முடுக்கி | பெருக்கி |
|---|---|
| "தூண்டப்பெற்ற முதலீட்டிற்கும் தொடக்கத்தில் நுகர்வுச் செலவில் ஏற்படும் மாற்றத்திற்கும் இடையேயுள்ள விகிதம்" – **கே.கே.குரிஹாரா** | தேசிய வருமானத்தின் மாற்றத்திற்கும் முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள வீதத்தை பெருக்கி என்று வரையறுக்கலாம். |
| முடுக்கி என்பது அதிகரித்த நுகர்வு மற்றும் அதன் விளைவினால் ஏற்படும் அதிகரிக்கும் முதலீட்டுக்கான தொடர்பைக் குறிக்கும் எண் மதிப்பு ஆகும். | ΔI என்பது முதலீட்டில் அதிகரிப்பையும், மற்றும் ΔY வருமானத்தில் அதிகரிப்பையும் குறிக்கிறது. |
| முடுக்கி $(\beta)= \frac{\Delta I}{\Delta C}$ | $K = \Delta Y / \Delta I$ |

R.THANAPPORAJAN M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**34.மிகைப் பெருக்கி – விளக்குக. (4.6)**

**மிகைப் பெருக்கி:**

- மிகைப் பெருக்கி எளிய பெருக்கியைவிட சிறந்ததாகும். ஏனெனில் எளிய பெருக்கி தன்னிச்சை முதலீட்டை மட்டும் உள்ளடக்கி இருக்கும்.
- ஆனால் மிகைப் பெருக்கி தன்னிச்சை முதலீடு மற்றும் தூண்டப்பட்ட முதலீடு ஆகிய இரண்டையும் கொண்டிருக்கும்.
- தூண்டப்பட்ட நுகர்வு மற்றும் தூண்டப்பட்ட முதலீடு ஆகியவை இணைந்து செயல்படுவதாகும்.

**35.பெருக்கி கருத்தின் குறைபாடுகளைக் குறிப்பிடுக. (4.4.5)**

**பெருக்கி கருத்தின் குறைபாடுகள்:**

**1.பழைய கடன்களை திரும்ப செலுத்துதல்:**

MPC குறைந்து அதன் காரணமாக பெருக்கியின் மதிப்பு தடைப்படும்.

**2.செல்வத்தை வாங்குதல்:**

பணம் மக்களிடையே சுழன்று கொண்டு இருப்பதால் பெருக்கியின் மதிப்பு பாதிக்கும்.

**3.பண்டங்களையும், பணிகளையும் இறக்குமதி செய்தல்:**

நாட்டின் குறிப்பிட்ட அளவு வருவாய் ஓட்டத்தில் பெருக்கியின் மதிப்பைக் குறைக்கும்.

**4.நுகர்வு பொருட்கள் கிடைக்காமை.**

**5.முழு வேலை வாய்ப்பு நிலை.**

**36.கீன்ஸின் நுகர்வுச் சார்பின் உளவியல் விதியினை வரைபடம் மூலம் விளக்குக. (4.2.3)**

**கீன்ஸின் நுகர்வுச் சார்பின் உளவியல் விதி:**

"உளவியல் விதியின் அடிப்படையாக மனிதன் தன் முன் அறிவு அனுபவம் மற்றும் விரிவான உண்மை ஆகியவற்றின் அடிப்படையில் பெரும் நம்பிக்கையுடன் வருவாய் உயரும் போது நுகர்வை அதிகமாக்குவார்கள்; ஆனால் வருவாய் கூடிய அளவுக்கு நுகர்வு அதிகரிக்காது".

**அனுமானங்கள்:**

1. மற்றவை மாறாது
2. சுமூகமான சூழல் நிலவுகிறது.
3. முதலாளித்துவ பொருளாதாரத்தில் தலையிடாக் கொள்கை கடைப்பிடிக்கப்படுகிறது.

P.THALAMPOORAJAN M.A.,B.Ed.,M.Phil., www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**விதியின் கருத்துக்கள்:**

1.வருமானம் உயரும் போது, நுகர்வுச் செலவும் அதிகரிக்கும்.

2.அதிகரித்த வருமானம் நுகர்வுச் செலவிற்கும், சேமிப்பிற்கும் இடையே சில விகிதத்தில் பிரிக்கப்படுகின்றது.


3.அதிகரிக்கின்ற வருமானம் எப்பொழுதும் நுகர்வு மற்றும் சேமிப்பு இரண்டையும் அதிகரிக்கச் செய்யும்.

**அட்டவணை:**

விதியின் மூன்று கருத்துரைகள்.

| வருமானம் Y | நுகர்வு C | சேமிப்பு S = Y – C |
|---|---|---|
| 120 | 120 | 0 |
| 180 | 170 | 10 |
| 240 | 220 | 20 |

**வரைபடம்:**



வரைபடம் 4.2

**விதியின் மூன்று கருத்துரைகள்:**

**கருத்துரை (1):**

- 120 லிருந்து 180 ஆக வருமானம் அதிகரிக்கும் பொழுது நுகர்வும் 120 லிருந்து 170 ஆக அதிகரிக்கின்றது. நுகர்வு அதிகரித்த வருமானத்தைக் காட்டிலும் 10 குறைவு. அது சேமிக்கப்படுகிறது.

**கருத்துரை (2):**

- 180 லிருந்து 240 ஆக வருமானம் அதிகரிக்கும் பொழுது இது இரண்டு பகுதிகளாக நுகர்வு 170 லிருந்து 220 ஆகவும், சேமிப்பாக 10 லிருந்து 20 ஆகவும் முறையே பிரிகின்றது.

**கருத்துரை (3):**

- வருமானம் 180 லிருந்து 240 உயரும்போது நுகர்வை 170 லிருந்து 220 ஆகவும், சேமிப்பை 10 லிருந்து 20 ஆகவும் அதிகரிக்கச் செய்கிறது.
- C கோட்டிற்கும் $45^0$ கோட்டிற்கும் இடையேயுள்ள அகன்ற பகுதி சேமிப்பைக் காட்டுகிறது.

R.THILAMPOORAJA M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**37.நுகர்வுச் சார்பின் அக மற்றும் புறக் காரணிகளை விளக்குக. (4.2.4)**

**நுகர்வுச் சார்பின் அக மற்றும் புறக் காரணிகள்:**

**அகவய காரணிகள்:**

அகவய காரணிகள் உளவியல் சிந்தனைகளுடன் தொடர்புடையது. கீன்ஸ் எட்டு நோக்கங்களைப் பட்டியலிட்டுள்ளார்.

1. **முன்னெச்சரிக்கை நோக்கம்:**
   எதிர்பாராமல் ஏற்படும் நிகழ்விற்காக கையில் ரொக்கமாக வைப்பது.
2. **எதிர்பார்க்கும் நோக்கம்:**
   எதிர்காலத் தேவைக்கான நோக்கம்.
3. **கணிக்கும் நோக்கம்:**
   விருப்பம் மற்றும் பாராட்டை அனுபவிப்பதற்கான விருப்பம்.
4. **முன்னேறும் நோக்கம்:**
   வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற விரும்புதல் சார்ந்த விருப்பம்.
5. **பணவியல் சுதந்திர நோக்கம்:**
6. **வாணிப நோக்கம்:**
   வியாபாரத்தை முன்னேற்றுவதற்கான நோக்கம்
7. **பேராசை நோக்கம்:**
   முற்றிலும் மோசமான உள்ளுணர்வு
8. **கர்வ நோக்கம்:**
   விட்டுச் செல்வதற்கான நோக்கம்

**புறவயக் காராணிகள்:**

புறவயக் காராணிகள் உண்மையான மற்றும் அளவிடக் கூடியது.

**1.வருமான பகிர்வு:**

சமநிலை வருவாயை பகிர்வுடைய சமூகத்தில் அதிகமான நுகர்வு விருப்பம் இருக்கும். V.K.R.V. ராவ் அவர்களால் இக்கருத்து வலியுறுத்தப்பட்டது.

**2.விலை அளவு:**

விலை வீழ்ச்சியடையும் போது சமூகத்தில் நுகர்வு விருப்பம் அதிகரிக்கும்.

**3.கூலி அளவு:**

கூலி அதிகரிக்கும் போது, நுகர்வுச் செலவும் அதிகரிக்கும்.

**4.வட்டி விகிதம்:**

அதிக வட்டி விகிதம் பணத்தை சேமிக்க ஊக்கம் அளிக்கும் மற்றும் நுகர்வைக் குறைக்கும்.

**5.நிதி கொள்கை:**

- ❖ வளர்வீத வரிக் கொள்கையானது ஏழைகளுக்கு சாதகமான வருமான பகிர்வை தருவதால், ஏழைகளின் நுகர்வு விருப்பம் மாறும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**6.நுகர்வோர் கடன்:**

- சுலபத் தவணைகளாக நுகர்வுக் கடன் அளிக்கும் போது நுகர்வு அதிகரிக்கும்.

**7.மக்கள் தொகை காரணிகள்:**

- மற்றவை மாறாமல் இருக்கும் போது குடும்ப அளவு அதிகமாக இருந்தால், நுகர்வு அதிகமாக இருக்கும்.
- கிராமப்புற குடும்பங்களைவிட நகர்ப்புற குடும்பங்கள் அதிகமாக செலவு செய்யும்.

**8.எதிர்பாராத இலாபம் அல்லது நஷ்டம்:**

**38.பெருக்கி இயங்கும் விதத்தினை விவரி. (4.4.3)**

**பெருக்கி:**

- தேசிய வருமானத்தின் மாற்றத்திற்கும் முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள வீதத்தை பெருக்கி என்று வரையறுக்கலாம்.
- ΔI என்பது முதலீட்டில் அதிகரிப்பையும், மற்றும் ΔY வருமானத்தில் அதிகரிப்பையும் குறிக்கிறது.
- K =ΔY/ΔI.

**பெருக்கி இயங்கும் விதம்:**

- பெருக்கி செயல்படும் விதத்தினை உதாரணத்துடன் காணலாம்.
- அரசின் பொதுப்பணிக்காக கூலி + இதர பொருட்கள் வாங்குவதற்கான செலவு =₹100 கோடி
- உழைப்பாளார்களுக்கும், பொருட்களை அளித்தவர்களுக்கும் வருமானமாக=₹100 கோடி
- இறுதிநிலை நுகர்வு நாட்டம் 0.8 (80%) எனில்,
- நுகர்வுச் செலவு = ₹80 கோடி; சேமிப்பு = ₹20 கோடி
- மேற்காண் வருமானம் பெற்றவர்களின் இறுதிநிலை நுகர்வு நாட்டம் 0.8 எனில்,

**₹ 80கோடியில்,** நுகர்வுச் செலவு = ₹64 கோடி; சேமிப்பு = ₹16 கோடி

$\Delta Y = 100 + 100 \times 0.8 + 100 \times (0.8)^2 + 100 \times (0.8)^3 ......$

$= 100 + 80 + 64 + 51.2 ..........$

= 500 கோடிகள்

உதாரணமாக,

C = 100 + 0.8Y,   I= 100 (Y = C + I)

$Y = 100 + 0.8y + 100$

$Y = 200 + 0.8Y$

$Y - 0.8Y = 200$



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

0.2Y = 200

Y = 200/0.2 = 1000 (புள்ளி B)

I யின் மதிப்பு 110 அதிகரிக்கப்பட்டால், 0.2Y = 210

Y = 210 / 0.2 = 1050 (புள்ளி D)

I **₹10** அதிகரித்தால், Y **= ₹50** அதிகரிக்கும். இது பெருக்கியின் விளைவு.

புள்ளி Aயில், Y = C = 500

C = 100 + 0.8 (500) = 500, (**S = 0)**

புள்ளி Bயில், Y = 1000

C = 100 + 0.8 (1000) = 900, (**S = 100)**

புள்ளி Dயில், Y = 1000

C = 100 + 0.8 (1050) = 940, (**S = 110)**

I யின் மதிப்பு ₹10 அதிகரிக்கும்போது,

Y யின் மதிப்பு ₹50 அதிகரிக்கும்.

இதுவும் பெருக்கியின் விளைவு ஆகும்.

**39.முடுக்கி இயங்கும் விதத்தினை விவரி. (4.5.4)**

**முடுக்கி:**

- "தூண்டப்பெற்ற முதலீட்டிற்கும் தொடக்கத்தில் நுகர்வுச் செலவில் ஏற்படும் மாற்றத்திற்கும் இடையேயுள்ள விகிதம்" – **கே.கே. குரிஹாரா**
- முடுக்கி என்பது அதிகரித்த நுகர்வு மற்றும் அதன் விளைவினால் ஏற்படும் அதிகரிக்கும் முதலீட்டுக்கான தொடர்பைக் குறிக்கும் எண் மதிப்பு ஆகும்.

$$\text{முடுக்கி } (\beta) = \frac{\Delta I}{\Delta C}$$

**முடுக்கி இயங்கும் விதம்:**

1000 நுகர்வுப் பொருட்கள் தயாரிக்க தேவைப்படும் இயந்திரங்கள் = 1000

இயந்திரங்களின் வாழ்நாள் = 10 வருடங்கள்

ஒவ்வொரு வருடமும் மாற்றியமைக்கப்படும் இயந்திரங்கள் = 10

காரணம், நிலையான 1000 நுகர்வுப் பொருட்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

இப்போது, நுகர்வுப் பொருட்களின் தேவை அதிகரிப்பு = 10% (1000 to 1100)

தேவையான இயந்திரங்கள் மேலும் 10

R.THALAMPOORANAN M.A.,B.Ed.,M.Phil., www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

∴ மொத்த இயந்திரத் தேவை = 20 (மாற்றியமைக்க 10 + அதிகரித்த தேவை 10)


இங்கு, 10% நுகர்வுப்பொருள் தேவை அதிகரிப்பு

100% இயந்திர தேவையை அதிகரிகிறது.

**ஒரு சிறிய நுகர்வுப் பொருளின் தேவையில் மாற்றம் அதிகப்படியான முதலீடு மாற்றத்திற்கு வழிவகுக்கிறது.**

**வரைபடம்:**

முருக்கியின் செயல்பாடு




வரைபடம்.4.7

**வரைபட விளக்கம்:**

- OX - வருமானம்; OY - சேமிப்பு மற்றும் முதலீடு
- SS - சேமிப்பு கோடு; II - முதலீட்டுக் கோடு
- **$E_1$ புள்ளியில்,** சேமிப்பும், முதலீடும் சமநிலை ($OY_1 = OI_2$) முதலீடு OI4 அளவு அதிகரிக்கும் போது வருமானம் $OY_3$ ஆக அதிகரிக்கிறது.
- **$E_3$ புள்ளியில்,** $I_2$ $I_4$ ஆக முதலீடு முழுவதுமாக வெளிப்புறக் காரணியில் அதிகரிக்கின்றது.
- வருமானம் $Y_1Y_3$ ஆக முடுக்கியின் விளைவாக அதிகரிக்கும். அதிகரித்த வருமானம், $Y_1Y_2$ ஆனது பெருக்கியின் விளைவாலும், மற்றும் அதிகரித்த வருமானம் $Y_2Y_3$ஆனது முடுக்கியின் விளைவாலும் ஏற்படுகின்றது.

R.THALAMPOORAJAN,M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net

**40.மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கும், முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (4.3.6)**

| மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறன் (MEC) | முதலீட்டின் இறுதி நிலை உற்பத்தித் திறன் (MEI) |
|---|---|
| 1) இது மூலதனத்தின் அளிப்பு விலையைப் பொறுத்து அமைகிறது | 1) மூலதனத்தின் தேவையில் ஏற்பட்ட மாற்றங்கள், விலையை தூண்டும் மாற்றத்தைப் பொறுத்து அமைகிறது. |
| 2) ஆரம்பத்தில் உள்ள மூலதனத்தை கணக்கில் கொள்ளாமல் ஒவ்வொரு மூலதன அலகிலிருந்து கிடைக்கும் விளைவைக் குறிக்கிறது. | 2) ஆரம்ப மூலதனத்திற்குப் பின்னர் வந்த மூலதனத்தின் விளைவு விகிதத்தைக் காட்டுகிறது. |
| 3) வரைபடத்தில் படுக்கை அச்சில் மூலதன இருப்பு அளக்கப்படுகிறது | 3) வரைபடத்தில் படுக்கை அச்சில் முதலீடு அளவு அளக்கப்படுகிறது. |
| 4) இது ஒரு "இருப்பு" கருத்துரு (stock) | 4) இது ஒரு ஓட்டக் (FLOW) கருத்துரு |
| 5) ஒவ்வொரு வட்டிவீத அளவிலுமான உத்தம மூலதன இருப்பை இது நிர்ணயிக்கிறது | 5) கொடுக்கப்பட்ட மூலதன இருப்பில், ஒவ்வொரு வட்டி வீத அளவிலும் நிகர முதலீடு எவ்வளவு என்பதை நிர்ணயிக்கிறது. |

R.THALAMOORAIAN.M. www.Padasalai.Net

## பயிற்சி வினாக்கள்

1.பங்குச் சந்தையில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் **பெருக்கி என்பது எதனைக் காட்டுகிறது? (4.1)**


**2.பெருக்கியின் மதிப்பு எதனைச் சார்ந்து அமைகிறது? (4.1)**

**3.நுகர்வுச் சார்பு என்பது எதனுடன் உள்ள தொடர்புடையதாகும்? (4.1)**

**4.முடுக்கி கோட்பாடு எதனை விளக்குகிறது? (4.1)**

**5.முடுக்கி கோட்பாடு விளக்குவது:**

**6.வருமானம் – நுகர்வு அட்டவணையைக் குறிப்பிடுக. (4.2)**




**7.மேற்காணும் வரைபடத்தில்**

**அ) நுகர்வு வளைகோடு ஏன் 'Y'அச்சிலிருந்து தொடங்குகிறது?**

**ஆ)45$^0$ கோட்டின் முக்கியத்துவம் என்ன? (4.2)**

**8.நுகர்வு நாட்ட கருத்துருக்களைக் கூறுக. (4.2.2)**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**9.சராசரி நுகர்வு நாட்டம், இறுதிநிலை நுகர்வு நாட்டம் வேறுபடுத்துக. (4.2.2)**

**10.அட்டவணையில் உள்ளவற்றைக் கணக்கிடுக. (4.2.2)**

அட்டவணை. 2 APC, MPC, APS மற்றும் MPS யை கணக்கிடுதல்

| வருமானம் Y | நுகர்வு C | APC % C/Y | APS % S/Y | MPC ΔC/ΔY | MPS ΔS/ΔY |
|---|---|---|---|---|---|
| 120 | 120 | (120/120)100 = 100 | (0/120)0 | - | - |
| 180 | 170 | (170/180)100 = 94 | (10/180)100 | 50/60 = 0.83 | 0.17 |

11.**V.K.R.V. ராவ் அவர்களின் வருமானப் பகிர்வு கருத்து யாது? (4.2.4)**

**12.டூசன் பெரியின் அனுமானத்தை விளக்குக. (4.2.4)**

**13.முதலீட்டுச் சார்பு என்றால் என்ன? (4.3)**

**14.முதலீடு என்றால் என்ன? (4.3.1)**

**15.தன்னிச்சையான முதலீடு என்றால் என்ன? (4.3.2)**

**16.தூண்டப்பட்ட முதலீடு என்றால் என்ன? (4.3.2)**

**17.முதலீட்டுச் சார்பின் காரணிகள் யாவை? (4.3.3)**

**18.மூலதன இறுதிநிலை ஆக்கத் திறனை வரையறு. (4.3.5)**

**19.MEC சார்ந்துள்ள இரண்டு காரணிகள் யாவை? (4.3.5)**

**20.மூலதன முடிவை மேற்கொள்ளும் போது எக்காரணிகளை கவனத்தில் கொள்ள வேண்டும்? (4.3.5)**

**21.முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தித்திறன் என்றால் என்ன? (4.3.6)**

**22.பெருக்கியின் எடுகோள்களை எழுதுக. (4.4.1)**

**23.பெருக்கி செயல்படும் விதத்தின் அட்டவணையை விளக்குக. (4.4.2)**

**24.பெருக்கியின் வகைகள் யாவை? (4.4.4)**

**25.பெருக்கியின் பயன்கள் யாவை? (4.4.6)**

**26.முடுக்கி கோட்பாடு உருவாக்கியவர்கள் யாவர்? (4.5)**

**27.முடுக்கியின் எடுகோள்கள் யாவை? (4.5.3)**

**28.முடுக்கியின் வரையறைகள் யாவை? (4.5.5)**

**29.நெம்புகோல் இயக்க விளைவு என்றால் என்ன? (4.6.1)**

R.THALAMPOORANAN M.A.,B.Ed. www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# அத்தியாயம் 5: பணவியல் பொருளியல்

1.ஆர்பிஐ-ன் தலைமையகம் அமைந்துள்ள இடம் **மும்பை**

2.பணம் என்பது **உள்ளவற்றில் அதிக நீர்மைத்தன்மை கொண்ட சொத்து ஆகும்.**

3.காகிதப் பணமுறையை மேலாண்மை செய்வது **மைய பணவியல் அமைப்பு**

4.M1 மற்றும் M2 ஆகிய இரண்டிற்கும் உள்ள வித்தியாசம்

**அஞ்சலக சேமிப்பு வங்கியின் சேமிப்பு வைப்புகள்**

5.இர்விங் ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு பிரபலமான ஆண்டு **1911.**

6.MV என்பது **சட்ட பூர்வ பண அளிப்பு**.

7.பணவீக்கம் என்பது **விலைகள் அதிகரிப்பு**.

8.**உயர்** பணவீக்கம் பணமதிப்பில் தீவிர மதிப்பு குறைவினை ஏற்படுகிறது.

9.கூலி மற்றும் மூலம் பொருட்கள் செலவு கூடுவதால் பொருட்களின் பொது விலை மட்டம் அதிகரிப்பது **செலவு உந்து** பணவீக்கம் ஆகும்.

10.பணவீக்கத்தின் பொழுது பயனடைபவர் யார்? **கடன் பெற்றோர்கள்**

11. **எதிர் பண வீக்கம்**என்பது பணவீக்க விகிதம் குறைந்து செல்வது ஆகும்.

12. தேக்க வீக்கத்தில் பணவீக்க விகிதத்துடன் இணைந்திருப்பது **தேக்கம்**

13. பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை **வணிக சுழற்சி** அழைக்கின்றோம்.

14. மந்த காலத்தில் பொருளியல் நடவடிக்கைகள் இவ்வாறு இருக்கும் **மிக குறைந்தபட்சமாக**

15."பரிவர்த்தனைகளில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும் ஒரு இணையீட்டு கருவியாகவும் அளவீடு மற்றும் மதிப்பினை இருப்பு வைத்தல் ஆகியவற்றினை செய்யும் ஒரு பொருள் பணம்" என்ற இலக்கணத்தை வழங்கியவர். **கிரௌதர்**

16. பற்று அட்டை என்பது **நெகிழி பண** உதாரணம் ஆகும்.

17. ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு பணத்தின் இந்தப் பணியின் அடிப்படையில் அமைக்கப்பட்டது. **பரிவர்த்தனை கருவி**

18.MV = PT என்ற சமன்பாட்டில், V என்பது **பணத்தின் சுழற்சி வேகம்**

19. விலைவாசி மெதுவாக உயரும்பொழுது அது அழைக்கப்படுகிறது **மிதமான பணவீக்கம்.**

20.**தவழும்** பணவீக்கம் பொருளாதாரத்தினை எந்த வகையிலும் பாதிக்காது



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**21.பணத்தின் இலக்கணம் வரைக. (5.2.2)**

**பணத்தின் இலக்கணம்:**

- "பணம் எதைச் செய்கிறதோ, அதுதான் பணம்" – வாக்கர்
- "பரிவர்த்தனைகளில் பொது ஏற்புத்தன்மை கொண்ட ஒரு இடையீட்டுக் கருவியாகவும், மதிப்பளவை மற்றும் மதிப்புனை இருப்பு வைத்தல் ஆகியவற்றினைச் செய்யும் ஒன்றாகவும் இருப்பது பணம் ஆகும்". - கிரௌதர்

**22.பண்டமாற்று என்றால் என்ன? (5.2.3)**

**பண்டமாற்று:**

- பொருட்களை பொருட்களுக்கு மாற்றிக் கொள்ளும் முறையே **பண்டமாற்று முறை** என அழைக்கப்பட்டது.
- மெசபடோமியா பழங்குடியினரால் பண்டமாற்று முறை பயன்படுத்தப்பட்டது.

**23.பண்டப்பணம் என்றால் என்ன? (5.2.3)**

**பண்டப்பணம்:**

- பண்டமாற்று முறையில் பொருட்களை வாங்குபவர்களும் விற்பவர்களும் நிறைய சிக்கல்களை சந்தித்து வந்தனர்.
- பணம் என்ற இடையீட்டுக்கருவி தேவைப்பட்டது. அந்நிலையில் பொது இடையீட்டுக் கருவிகளாக விலங்கின் தோல், உரோமம், உப்பு, அரிசி, கோதுமை, பாத்திரங்கள், ஆயுதங்கள் போன்ற பொருட்கள் பணமாக பயன்படுத்தப்பட்டு வந்தன.
- இதுவே பண்டப்பணம் ஆகும்.

**24.பொன் திட்டம் என்றால் என்ன? (5.2.3)**

**பொன் திட்டம்:**

- ஒரு பணத்தின் அலகு ஒரு குறிப்பிட்ட எடையிலான பொன் அளவினால் வரையறுக்கப்பட்டிருந்தது.
- ஒரு பண அலகின் வாங்குதிறன் அப்பொன் பணத்தின் எடை அளவுக்கு சமமாக நிர்வகிக்கப்பட்டு வந்தது.

**25.நெகிழிப் பணம் என்றால் என்ன? உதாரணம் தருக. (5.2.3)**

**நெகிழிப் பணம்:**

- நெகிழிப்பணம் நடைமுறையிலுள்ள காகிதப் பணத்திற்கு ஒரு மாற்றாகும்.
- தினந்தோறும் பயன்படுத்தும் வகையில் நெகிழி அட்டையால் உருவாக்கப்பட்டிருப்பதால் இது நெகிழிப் பணம் என்று அழைக்கப்படுகிறது.
- **உதாரணம்:** ரொக்க அட்டை, கடன் அட்டை, பற்று அட்டை

R.THALAMPOORAN M.A.,B.Ed.,M.Phil., www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**26.பணவீக்கம் என்பதன் இலக்கணம் தருக. (5.5.1)**

**பணவீக்கம்:**

- "குறைந்த அளவு பண்டங்களை அதிக அளவு பணம் துரத்துவதாகும்" – கோல்பர்ன்
- "வாங்கும் சக்திகான அளவின் அசாதாரண குறைவு நிலையாகும்" - கிரிகெரி

**27.தேக்கவீக்கம் என்றால் என்ன? (5.6)**

**தேக்கவீக்கம்:**

- தேக்கவீக்கம் என்பது பொருளாதார வளர்ச்சியில் தேக்க நிலையும், வேலைவாய்ப்பின்மையும், அதிக அளவிலான பணவீக்கமும் ஒன்றிணைந்த சூழ்நிலை ஆகும்.

**28.உலோகப் பணம் பற்றி ஒரு குறிப்பு வரைக. (5.2.3)**

**உலோகப் பணம்:**

- பணமுறையில் முன்மையானது உலோகப் பணத்திட்டம் ஆகும்.
- உலோகத்திட்டத்தில் தங்கம், வெள்ளி போன்ற ஏதாவது ஒரு உலோகம் பணத்தின் திட்ட மதிப்பினை நிர்ணயிக்கப் பயன்படுத்தப்பட்டது.
- இந்த நாணயங்கள் முழு மதிப்பு பணமாக அல்லது முழு நிறையுடைய சட்டமுறை பணமாக இருந்து வந்தன.
- அந்நாணயங்களின் முக மதிப்பு மற்றும் உள்ளடக்க மதிப்பு ஆகிய இரண்டும் சமமாக இருந்தன.

**29.பண அளிப்பு என்றால் என்ன? (5.3)**

**பண அளிப்பு:**

- ஒரு பொருளாதாரத்தில் உள்ள மொத்தப் பண அளவே பண அளிப்பு ஆகும்.
- ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நாட்டில் புழக்கத்திலுள்ள பண அளவைக் குறிப்பதே பண அளிப்பு ஆகும்.
- வட்டி விகிதம், விலைவாசி போன்றவற்றை நிர்ணயிப்பதில் பண அளிப்பு முக்கிய பங்காற்றுகின்றது.
- இந்திய ரிசர்வ் வங்கி பண அளிப்பில் M1, M2, M3 மற்றும் M4 என நான்கு வகையிலான அளவீடுகளை செய்கின்றது.

**30.பண அளிப்பினைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை? (5.3)**

**பண அளிப்பினைத் தீர்மானிக்கும் காரணிகள்:**

**1.ரொக்க வைப்பு வீதம்:**

பொது மக்கள் கையில் வைத்திருக்கும் பணம்.

**2.ரொக்க இருப்பு வைப்பு வீதம்:**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

வங்கி தனது பாதுகாப்பு பெட்டகத்தில் வைத்திருக்கும் இருப்பு.

**3.ரொக்க இருப்பு வீதம்:**

வங்கிகளில் செலுத்தப்பட்ட மொத்த வைப்புகள்

**4.சட்டபூர்வ நீர்மை விகிதம்:**

வணிக வங்கிகளில் இருக்கும் மொத்த கேட்பு மற்றும் கால வைப்புகள்.

**31.பணவீக்கத்தின் வகைகள் பற்றி எழுதுக. (5.5.2)**

**பணவீக்கத்தின் வகைகள்:**

**பணவீக வேகத்தின் அடிப்படையில்:**

1. தவழும் பணவீக்கம்
2. நடக்கும் பணவீக்கம்
3. ஓடும் பணவீக்கம்
4. தாவும் பணவீக்கம்
5. தேவை – இழுப்பு பணவீக்கம்
6. செலவு - உந்து பணவீக்கம்
7. கூலி – வேலை பணவீக்கம்

**32.தேவை-இழுப்பு மற்றும் செலவு உந்து பணவீக்கத்தினை விளக்குக. (5.5.2)**

**தேவை-இழுப்பு பணவீக்கம்:**

- அளிப்பு நிலையாக உள்ள நிலையில், பொருட்களுக்கான தேவை அதிகரிக்கும் பொழுது விலைவாசி உயருகின்றது.
- இது **தேவை-இழுப்பு பணவீக்கம்** என்று அழைக்கப்படுகின்றது.

**செலவு உந்து பணவீக்கம்:**

- உற்பத்தியில் மூலப்பொருட்கள் மற்றும் இதர இடுபொருட்களுக்கான செலவு உயருகின்ற பொழுது உற்பத்தி செலவு கூடி பொருட்களுக்கான விலை அதிகரிக்கின்றது.
- இது **செலவு உந்து பணவீக்கம்** எனப்படுகிறது.

**33.பணமதிப்பு பற்றிய கேம்பிரிட்ஜ் சமன்பாடுகளை விளக்குக. (5.4)**

**பணமதிப்பு பற்றிய கேம்பிரிட்ஜ் சமன்பாடுகள்:**

**மார்ஷலின் சமன்பாடு:**

- மார்ஷல் கூற்றுப்படி, பணஅளவு (M) என்ற காரணியைவிட மக்கள் தங்கள் கையில் ரொக்கமாக வைத்திருக்க விரும்பும் உண்மை வருமானத்தின் பகுதி (K என்ற கெழு) பணமதிப்பினை தீர்மானிப்பதில் மிக முக்கிய பங்கினை வகிக்கிறது.
- **M = KPY**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**கீன்ஸின் சமன்பாடு:**

- **கீன்ஸின்** கூற்றுப்படி, மக்களின் ரொக்க விருப்பத்தினை(k) பணவியல் அமைப்புகள் மாற்ற இயலாது.
- ஆகவே, பணத்தின் அளவை (n) நெறிப்படுத்துவதன் மூலம் விலைவாசியை கட்டுப்படுத்தலாம், பணத்தின் மதிப்பினை நிலைப்படுத்தலாம், என்கிறார்.
- **n = pk or p= n/k**

**34.மீள் பணவீக்கம் பற்றி விளக்குக. (5.6)**

**மீள் பணவீக்கம்:**

- "வேலையின்மையை ஏற்படுத்தாமலும் உற்பத்தி அளவுகள் குறையாமலும் பணவீக்கத்தை திருப்பும் செயல் முறையே **மீள் பணவீக்கம்** ஆகும்"
- வேலை வாய்ப்பை பாதிக்காத கடன்களை கட்டுப்படுத்துவதன் மூலமும் பணவீக்கத்தினை குறைத்து வருவது மீள் பணவீக்கம் ஆகும்.

**35.இர்விங் ஃபிஷரின் பண அளவுக் கோட்பாட்டினை விளக்குக. (5.4)**

**1.பண அளவுக் கோட்பாடு:**

- பண அளவுக் கோட்பாடுகள் பணத்தின் அளவிற்கும், பணத்தின் மதிப்பிற்கும் இடையேயான தொடர்பினை எடுத்துரைப்பதாகும்.
- பண அளிப்பின் அளவு மாற்றம் அடையும் போது விலையும் மாற்றம் அடையும்.

**2.இர்விங் ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு:**

**வேறு பெயர்:** பரிவர்த்தனைக்கான சமன்பாடு மற்றும்

ரொக்க பரிவர்த்தனை சமன்பாடு

MV = PT or P = MV / T

M = பண அளிப்பின் அளவு

V = பணத்தின் சுழற்சி வேகம்

P = பொது விலை மட்டம்

T = வாணிபத்தின் அளவு

இச்சமன்பாடு காகிதப் பணத்தை மட்டுமே கணக்கில் கொண்டுள்ளது.


- தற்காலத்தில் பணஅளிப்பின் பெரும்பகுதி காசோலைகள், மாற்றுச்சீட்டுகள் மற்றும் ஏனைய கடன் கருவிகள் உள்ளடங்கி இருக்கிறது. ஆகவே ஃபிஷர் தனது சமன்பாட்டினை கீழ்க்கண்டவாறு விரிவாக்கினார்.
- PT = MV + M'V' or P = MV + M'V' / T
- M' – வங்கிக்கடன் பணத்தின் அளவு



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

❖ V′ - வங்கிக்கடன் பணத்தின் சுழற்சி

**வரைபடம்:**




**வரைபட விளக்கம்: வரைபடம் (A)**

OX அச்சு – பண அளவு OY அச்சு- பணமதிப்பு OM – பண அளவு

OP – விலை மட்டம் $OM_2$ – இரட்டிப்பு பண அளவு

$OM_4$ – நான்கு மடங்கு பண அளவு $OR_1$ – நான்கு மடங்கு விலை மட்டம்

**$45^0$ தோற்றுவாய் கோடு:**


பண அளவு – விலைமட்டம் நேரடி சமவிகித உறவு.

**வரைபடம் (B)**

பண மதிப்புச் சார்பு O/P = f(M)க்கான வளைகோடு மேலிருந்து கீழ்நோக்கி சரிந்து பண அளவிற்கும் பணமதிப்பிற்கும் உள்ள எதிர்மறையான மற்றும் சமவிகித தொடர்பினை சுட்டிக்காட்டுகிறது.

**36.பணத்தின் பணிகளை விளக்குக. (5.2.4)**

**பணத்தின் பணிகள்:**




**முதல்நிலை பணிகள்:**

**i)பணம் ஒரு பரிவர்த்தனை கருவியாக:**

- ❖ பணம் பொது ஏற்புத் தன்மை கொண்டது.
- ❖ இது அனைத்து பரிவர்த்தனைகளிலும் தவறாது இடம் பெறுகிறது.
- ❖ நவீன பரிவர்த்தனைகளில் பணம் ஒரு இடையீட்டு கருவியாக செயல்பட்டு வருகிறது.

R.THALAMPOORAJAN M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**ii)பணம் ஓர் மதிப்பின் அளவுகோலாக:**

- பொருட்கள் மற்றும் பணிகளை மதிப்பளவை செய்வது பணத்தின் பணியாகும். பணம் ஒரு பொது அளவுகோலாகப் பார்க்கப்படுகிறது.

**இரண்டாம் நிலை பணிகள்:**

**i)பணம் ஒரு மதிப்பு நிலைகலனாக:**

- பணம் கண்டுபிடிக்கப்பட்ட பின் பொருள் மற்றும் பணியினை சேமித்து வைப்பதில் உள்ள சிக்கல்கள் மறைந்து விட்டன.
- பணம் மிகச் சிறந்த மதிப்பின் நிலைகலனாக செயல்படுகிறது.

**ii)பணம் வருங்கால செலுத்துதல்களுக்கான ஓர் அடிப்படை:**

- நவீன பொருளாதாரத்தில் கடன்களைப் பெறுவதையும், திரும்பச் செலுத்துவதையும் பணம் எளிதாக்குகிறது.

**iii)பணம் வாங்குதிறனை மாற்றிக்கொள்ளும் ஒரு கருவியாக:**

- ஓரிடத்தில் இருக்கும் வாங்கு திறன் மற்றொரு இடத்திற்கு மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.
- இந்தப் பணியினை எளிதாகவும் விரைவாகவும் பணம் செய்கிறது.

**துணைப்பணிகள்:**

**i)கடனுக்கான அடிப்படை:**

- வணிக வங்கிகள் வாடிக்கையாளர் கணக்குகளிலுள்ள ரொக்க இருப்பின் அளவை பொறுத்தே கடன்களை உருவாக்குகின்றன. ஆகவே, ரொக்க பணமே கடனுக்கான அடிப்படையாக அமைகிறது.

**ii)பணம் தேசிய வருவாய் பங்கீட்டிற்கு உதவுகிறது:**

- பணம் என்ற கருவி கண்டறியப்பட்ட பின் வாரம், கூலி, வட்டி மற்றும் இலாபம் என காரணிகளுக்கான வருமானத்தை அதாவது தேசிய வருவாயை எளிதாக பகிர்ந்தளிக்க முடிகிறது.

**iii)இறுதிநிலைப் பயன்பாடுகளை ஒப்பிடவும், இறுதிநிலை உற்பத்தி திறன்களை ஒப்பிடவும் பணம் பயன்படுகிறது.**

**iv)பணம் மூலதனத்தின் உற்பத்தி திறனை உயர்த்துகிறது.**

**இதர பணிகள்:**

**i)திரும்பச் செலுத்தும் திறனை தக்க வைக்க பணம் உதவுகிறது.**

**ii)பணம் பொதுமைப்படுத்தப்பட்ட வாங்கு திறனைக் குறிக்கிறது.**

**iii)பணம் மூலதனத்திற்கு நீர்மைத் தன்மையை தருகிறது.**

R.THALAMPOORAJAN,M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**37.ஒரு பொருளாதாரத்தில் பணவீக்கத்திற்கான காரணங்கள் மற்றும் விளைவுகள் யாவை? (5.5.3)**

**பணவீக்கம்:**

- "குறைந்த அளவு பண்டங்களை அதிக அளவு பணம் துரத்துவதாகும்" – கோல்பர்ன்
- "வாங்கும் சக்திகான அளவின் அசாதாரண குறைவு நிலையாகும்" - கிரிகெரி

**காரணங்கள்:**

**i)பண அளிப்பு உயர்வு:**

காகித பண அளிப்பு உயர்வினால் மொத்த தேவை அதிகரித்து பணவீக்கம் ஏற்படுகிறது.

**ii)செலவிடத் தகுந்த வருவாயில் உயர்வு:**

செலவிடத் தகுந்த வருவாய் உயர்வு, தேசிய வருவாய் அதிகரிப்பினாலோ அல்லது வரிவிகித குறைப்பினாலோ ஏற்படும். இதன் காரணமாக பணவீக்கம் ஏற்படும்.

**iii)உயர்ந்து வரும் பொதுச் செலவுகள்:**

அரசின் செயல்பாடுகள் விரிவடைந்து வருவதால் பொதுச் செலவுகளின் அளவு கூடி வருகிறது.

**iv)நுகர்வோர் செலவு அதிகரித்தல்:**

நுகர்ச்சிப் பொருட்கள் மற்றும் பணிகளுக்கான தேவை அதிகரிப்பதால் அதன் காரணமாக விலைவாசி அதிகமாகிறது.

**v)மலிவு பணக் கொள்கை:**

மலிவுப் பணக் கொள்கை கடன் அளவை அதிகப்படுத்தும்.

**vi)பற்றாக்குறை நிதியாக்கம்:**

அரசின் வரவு – செலவு திட்டத்தில் பற்றாக்குறை ஏற்படுகிறது. இதன் விளைவாக தொகு அளிப்பை விட தொகு தேவையின் அளவு அதிகரித்து, விலைவாசி உயர்ந்து பணவீக்கம் ஏற்படுகிறது.

**vii)கணக்கில் காட்டப்படாத சொத்துக்கள், நடவடிக்கைகள் மற்றும் கறுப்புப் பணம்:**

கருப்புச் சந்தையும், பதுக்கலும் தொகு அளிப்பனை குறைத்து, விலைவாசி உயர்ந்து பணவீக்கம் ஏற்படுகிறது.

**viii)பொதுக் கடனை மீளச் செலுத்துதல்:**

பொதுக் கடனை அரசு திரும்பச் செலுத்தும் பொழுது மொத்த பண அளிப்பில் அதிகரிப்பு ஏற்படுகிறது.

**ix)ஏற்றுமதி உயர்வு:**

ஏற்றுமதியை ஊக்கப்படுத்தும் பொழுது உள்நாட்டில் பொருள் அளிப்பு குறைந்து, விலைவாசி உயர்வு ஏற்படுகிறது.

K.THALAMPORAJAN M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**விளைவுகள்:**

**1.உற்பத்தியின் மீதான விளைவுகள்:**

- மிதமான விலைவாசி உயர்வினால் ஏற்படும் இலாபத்தினால் தூண்டப்பட்டு உற்பத்தி மற்றும் வணிகத்தின் மீதான முதலீடுகள் அதிகரிக்கும்.
- மக்களின் சேமிப்பை குறைக்கும்.
- வெளிநாட்டு மூலதனங்கள் திரும்பிச் செல்லும்.
- மூலதன திரட்சி குறையும்.
- பதுக்கல்காரர்களும் நுகர்வோரும் பொருட்களை பதுக்கி வைக்க பணவீக்கம் காரணமாக அமைகிறது.

**பகிர்வின் மீதான விளைவுகள்:**

**i)கடன் பெற்றோர் கடன் வழங்கியோர்:**

- பணவீக்க காலத்தில் கடன் பெற்றோர் ஆதாயமும், கடன் வழங்கியோர் இழப்பையும் சந்திக்கின்றனர்.

**ii)நிலையான வருவாய் பிரிவினர்:**

- விலைவாசி உயர்வினால் ஏற்படும் வாழ்க்கைச் செலவு உயர்வுடன், நிலையான வருவாய் பொருந்திச் செல்வதில்லை.
- **உதாரணம்:** ஓய்வூதியம் பெறுவோர், வட்டி பெறுவோர்

**iii)தொழில் முனைவோர்கள்:**

- எவ்வகையானவராக இருந்தாலும் விலையேற்றத்தால் அவர்களுக்கு எதிபாரா ஆதாயம் கிடைக்கும்.

**iv)முதலீட்டாளர்கள்:**

- கடன் பத்திரங்களில் முதலீடு செய்தோருக்கு நிலையான வட்டியை பெறுவதால் அவர்கள் பணவீக்க காலத்தில் இழப்பினை சந்திப்பார்கள்.

R.THALAMPOORAJAN.M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**38.வணிகச் சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்க. (5.7.2)**

**வணிகச் சுழற்சி:**

- ❖ வேலைவாய்ப்பு, உற்பத்தி, வருமானம் போன்றவற்றை உள்ளடக்கிய ஒட்டு மொத்த பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும் அலைவுகளே **வணிகச் சுழற்சி** என குறிப்பிடப்படுகிறது.

**வணிகச் சுழற்சியின் கட்டங்கள்:**




**1.பூரிப்பு கட்டம்:**

- ❖ இக்காலகட்டத்தில் பொருள் உற்பத்தி, பணக்கூலி, லாபம், மற்றும் வட்டி விகிதங்கள் உயரும்.
- ❖ வளர்ச்சிக் கட்டத்தின் உச்சத்தில் பூரிப்பு நிலையில் தோன்றும். பூரிப்பு நிலையில் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளும் உச்சநிலையில் இருக்கும்.

**2.பின்னிறக்கம்:**

- ❖ பூரிப்பில் வெடிப்பு நிலை ஏற்பட்டு நடவடிக்கைகள் பின்னோக்கி திரும்புவதை பின்னிறக்கம் என்கிறோம்.
- ❖ நம்பிக்கைகள் இருந்த இடத்தில் அவநம்பிக்கைகள் தோன்ற ஆரம்பிக்கும்.
- ❖ முதலீட்டை பெருமளவுக்கு குறைக்க ஆரம்பிப்பார்கள்.
- ❖ வணிக நடவடிக்கைகள் சுணக்கமடையும்.

**3.மந்தம்:**

- ❖ நிறுவனங்கள் நட்டமடைவதும், மூடப்படுவதும் பொது இயல்புகளாக இருப்பதுடன் வேலையின்மையை ஏற்படுத்தும்.
- ❖ விவசாயிகளும், கூலிவேலை செய்வோரும் அதிக பாதிப்புக்குள்ளாவார்கள்.
- ❖ வணிக சுழற்சியின் மிக மோசமான கட்டம் மந்தம் ஆகும்.
- ❖ மந்தத்தின் கீழ் நிலை **"தொட்டி"** என்றழைக்கப்படுகிறது.

**4.மீட்சி:**

- ❖ மந்தத்திலிருந்து பொருளாதார நடவடிக்கைகள் மேல்நோக்கி திரும்பும் நிகழ்வாகும்.
- ❖ கிடங்குகளில் தேக்கமடைந்த பொருட்கள் காலியாக துவங்குகிறது.
- ❖ வேலைவாய்ப்பு, உற்பத்தி, வருவாய், கூலி, லாபம் ஆகியன மீட்சி பெறுகின்றன.

RTHIAIAMPOORANAN M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net

## பயிற்சி வினாக்கள்

**1.பண்டமாற்று முறையின் வரலாற்றைக் கூறுக. (5.2.3)**

2.வெள்ளித் திட்டம் என்றால் என்ன? **(5.2.3)**
**3.காகிதப்பணத்திட்டம் என்றால் என்ன? (5.2.3)**

**4.மெய்நிகர் பணம் என்றால் என்ன? (5.2.3)**

**5.இந்தியாவில் காகிதப் பணம் மற்றும் நாணயங்கள் யாரால் வெளியிடப்படுகின்றது? (5.3)**

**6.பண அளிப்பின் நான்கு வகைகளைக் குறிப்பிடுக. (5.3)**

**7.இந்திய பணக்குறியீடு (₹) குறிப்பு வரைக. (5.3)**

**8.இர்விங் ஃபிஷர் குறிப்பு வரைக. (5.4)**

**9.டாவன்ஷட்டி குறிப்பு வரைக. (5.4)**

**10.பணவீக்க அளவு மிக அதிக சதவீதமாக எந்த நாட்டில் இருந்தது? (5.5.2)**

**11.தவழும் பணவீக்கம் என்றால் என்ன? (5.5.2)**

**12.நடக்கும் பணவீக்கம் என்றால் என்ன? (5.5.2)**

**13.ஓடும் பணவீக்கம் என்றால் என்ன? (5.5.2)**

**14.தாவும் பணவீக்கம் என்றால் என்ன? (5.5.2)**

**15.காகிதப் பணவீக்கம் என்றால் என்ன? (5.5.2)**

**16.கடன் பணவீக்கம் என்றால் என்ன? (5.5.2)**

**17.வரவு-செலவு பற்றாக்குறை தூண்டல் பணவீக்கம் என்றால் என்ன? (5.5.2)**

**18.இலாபத் தூண்டல் பணவீக்கம் என்றால் என்ன? (5.5.2)**

**19.பொருள் பற்றாக்குறை தூண்டல் பணவீக்கம் என்றால் என்ன? (5.5.2)**

**20.வரி தூண்டல் பணவீக்கம் என்றால் என்ன? (5.5.2)**

**21.பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் யாவை? (5.5.5)**

**22.பணவாட்டம் என்றால் என்ன? (5.6)**

**23.வணிகச் சுழற்சி என்றால் என்ன? (5.7.1)**

**24.வணிகச் சுழற்சியின் வேறு பெயர்கள் யாவை? (5.7)**

**25.வணிகச் சுழற்சியின் பண்புகள் யாவை? (5.7.1)**

R.THALAMPOORAJAN M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# அத்தியாயம் 6: வங்கியியல்

1. ஒரு வங்கி என்பது **நிதி நிறுவனம்.**

2. ஒரு வணிக வங்கி செய்யும் சேவை அ) வைப்புகளை ஏற்றுக் கொள்வது ஆ) கடன் வழங்குவது **இ) அ மற்றும் ஆ**

3. வணிக வங்கிகளின் பணிகளின் இருபெரும் பிரிவு அ) முதன்மைப் பணிகள் ஆ) இரண்டாம் நிலைப் பணிகள் இ) மற்ற பணிகள் **ஈ) மேற்சொன்ன அனைத்தும்**

4. வங்கிக் கடன் என்பது எதைக் குறிக்கிறது? **கடன் பணம் மற்றும் முன்பணம்**

5 கடன் உருவாக்கம் என்பதன் பொருள் **கடன் மற்றும் முன்பண பெருக்கம்**

6. வங்கி அல்லா நிதி நிறுவனங்கள் **வங்கி உரிமம்** வைத்திருப்பதில்லை.

7. மைய வங்கி நாட்டின் **பணவியல்** அதிகார அமைப்பு.

8. வங்கிகளின் வங்கி என அழைக்கப்படுவது **இந்திய ரிசர்வ் வங்கி**.

9. கடைசி நேரத்தில் உதவும் உற்ற நண்பன் என்ற பணியினைச் செய்வது **மைய வங்கி**

10. வங்கி விகிதம் என்பது **முதல் நிலை பத்திரங்களை மறு தள்ளுபடி செய்வது.**

11. ரெப்போ விகிதம் என்பதன் பொருள் **ரிசர்வ் வங்கி வணிக வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்**

12. நெறிமுறை தூண்டல் என்பது **தூண்டுதல் நடவடிக்கை**

13. விவசாய மறுநிதி மேம்பாட்டுக் கழகம் துவங்கப்பட்டது **ஜூலை 1, 1963**

14. நபார்டு வங்கி எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது? **ஜூலை 1982**

15. ஏற்றுமதி-இறக்குமதி வங்கி துவங்கப்பட்டது? **மார்ச் 1982**

16. மாநில நிதிக் கழகம் எந்த சட்டத்தின் கீழ் துவங்கப்பட்டது? **இந்தியஅரசு**

17. பணவியல் கொள்கையை வடிவமைப்பது **மைய வங்கி**

18. நிகழ்நிலை வங்கியகம் என்பது எவ்வாறு அழைக்கப்படுகிறது? **இணைய வங்கி**

19. ஏ.டி.எம். (ATM) என்பதன் விரிவாக்கம் என்ன? தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம்

20. 2016 இல் பணமதிப்பு நீக்கம் எந்தெந்த மதிப்பு பணங்களுக்கு ஏற்படுத்தப்பட்டது? **₹500 மற்றும் ₹1000**

R.THALAMPOORAJAN,M.A.,B.Ed.,M.Phil., www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**21.வணிக வங்கிகள் என்பதனை வரையறு. (6.3)**

**வணிக வங்கிகள்:**

- வணிக வங்கிகள் மக்களிடமிருந்து வைப்புகளை பெற்று, பேரளவில் உற்பத்தி செய்வோர் பெரிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு கடனை அளிக்கும் ஒரு நிதி அமைப்பு ஆகும்.

**22.கடன் உருவாக்கம் என்றால் என்ன? (6.3.1)**

**கடன் உருவாக்கம்:**

- கடன் உருவாக்கம் என்பது கடன்களையும், முன்பண அளிப்பினையும் அதிகரிக்கும் ஒரு செயல்.
- வங்கிகளின் கடனளிப்பு பணத்தை உருவாக்கும்.

**23.மைய வங்கி என்பதனை வரையறு. (6.5)**

**மைய வங்கி:**

- மைய வங்கி, ரிசர்வ் வங்கி அல்லது பணவியல் அதிகார அமைப்பு என்பது அரசின் பணம், பண அளிப்பு, மற்றும் வட்டிவிகிதம் ஆகியவற்றை மேலாண்மை செய்யும் ஒரு நிறுவனம் ஆகும்.
- மேலும் நாட்டிலுள்ள வணிக வங்கிகளை மேற்பார்வையிடுவதும் இதன் பணியாகும்.
- P.A.சாமுவேல்சன், "மைய வங்கியானது வங்கிகளின் வங்கியாகும். மேலும் நாட்டின் பண அளிப்பினைக் கட்டுப்படுத்துவது மீப்பெரு மதிப்பு பணத்தை கொண்ட அமைப்பாகும்".

**24.CRR மற்றும் SLR ஆகியவற்றினை வேறுபடுத்துக. (6.5.3)**

**CRR மற்றும் SLR வேறுபாடு:**

**அ) ரொக்க இருப்பு விகிதம்:**

- வணிக வங்கிகளிடம் வந்து சேரும் கேட்பு மற்றும் கால வைப்புகளின் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை அவைகள் மைய வங்கியில் இருப்பாக வைக்க வேண்டும்.

**ஆ) சட்டபூர்வ நீர்மை விகிதம்:**

- சட்டபூர்வ விகிதமான இதில் வங்கிகள் தன்னகத்தே எப்பொழுதும் வைத்திருக்க வேண்டிய ரொக்கம், தங்கம் மற்றும் ஒப்புதல் பெற்ற பத்திரங்கள் உள்ளடக்கிய நீர்மை தன்மை கொண்ட சொத்துக்கள் ஆகும்.

**25.வெளி அங்காடி நடவடிக்கை என்பதன் பொருள் கூறு. (6.5.3)**

**வெளி அங்காடி நடவடிக்கை:**

- மைய வங்கியானது பொதுச் சந்தையில் அரசின் கடன் பத்திரங்களை வெளியிடுவதும் திரும்பப்பெறும் வெளிச்சந்தை நடவடிக்கை எனப்படுகின்றது.
- மைய வங்கி அரசின் கடன் பத்திரங்களை மட்டுமல்லாமல் தனியார் நிறுவனங்களின் தகுதி படைத்த பத்திரங்களையும் விற்பனை செய்வதும், திரும்பப் பெறுவதும் ஆகும்.

R.THALAIMPORAJAN,M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**26.கடன் விநியோகப் பகிர்வு என்றால் என்ன? (6.5.3)**

**கடன் விநியோகப் பகிர்வு:**

- இது ஒரு பழமையான கடன் கட்டுப்பாட்டு முறையாகும்.
- வணிக வங்கிகள் வழங்கும் கடன்கள் பல்வேறு நோக்கங்களுக்காக வழங்கப்படுகிறது.
- நாட்டின் பண அளிப்புச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப அக்கடன் நோக்கங்களைப் பட்டியலிட்டு வரையறை செய்வதன் மூலம் கடன் கட்டுப்பாட்டினை ஏற்படுத்துவது ஆகும்.

**27.விவசாய கடன் வழங்கும் துறையின் பணிகளை குறிப்பிடுக. (6.5.6)**

**விவசாய கடன் வழங்கும் துறையின் பணிகள்:**

- நிபுணத்துவம் பெற்ற அலுவலரை நியமித்து விவசாய கடன் தொடர்பான அனைத்து வினாக்களையும் ஆய்வு செய்வது.
- இதர வங்கி நடவடிக்கைகளின் நிபுணத்துவம் வாய்ந்த ஆலோசனைகளை வழங்குவது.
- ஊரகத் துறைக்கு தகுதி வாய்ந்த நிறுவனங்கள் மூலமாக விவசாயக் கடன் வழங்குவது மேலும் அவைகளை ஒருங்கிணைப்பது ஆகியவையாகும்.

**28.வணிக வங்கிகளின் கடன் உருவாக்க முறை நுட்பத்தினை எழுதுக. (6.3.2)**

**வணிக வங்கிகளின் கடன் உருவாக்க முறை:**

- வங்கிக்கடன் என்பது வாடிக்கையாளர்களின் வைப்புகளிலிருந்து தேவைப்படுவோருக்கு அவர்களின் விண்ணப்பம் மற்றும் ஒப்பந்தத்தின் பேரில் கடன் மற்றும் முன்பணம் கொடுப்பது ஆகும்.
- வங்கிகள் **வழங்கும் கடன்கள் பொருளாதாரத்தில் நிகர பண அளிப்பினை அதிகப்படுத்தும்**.
- இது முதல்நிலை வைப்பு அல்லது செயல்படா வைப்பு என அழைக்கப்படுகிறது.

**29.வங்கியல்லா நிதியமைப்புகளைப் பற்றி சிறு குறிப்பு தருக. (6.4)**

**வங்கியல்லா நிதியமைப்புகள்:**


- ஒரு நிதி நிறுவனம் முழு வங்கிக்கான உரிமம் கொண்டதும் அல்ல, மற்றும் மைய வங்கியால் கண்காணிக்கப்படுவதும் இல்லை.
- வைப்புகளைப் பெற்றுக் கொண்டு கடன்களை வழங்குகிறது.
- கடன் பெற்று கடன் வழங்குகின்றது.
  அவை பண அங்காடியிலும் செயல்படுகின்றன.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**30.கடன் கட்டுப்பாட்டு முறைகளைக் கூறுக. (6.5.2)**

**கடன் கட்டுப்பாட்டு முறைகள்:**




**31.நபார்டின் பணிகள் யாவை? (6.8.1)**

**நபார்டின் பணிகள்:**

- நபார்டு வங்கி ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் அனைத்து வகையான உற்பத்தி மற்றும் முதலீட்டுக்கான மறுகடனை வழங்குகிறது.
- இது மாநில கூட்டுறவு வங்கிகள், வட்டார ஊரக வங்கிகள், நில வள வங்கிகள், குறுகிய கால, மத்தியகால மற்றும் நீண்டகால கடன்களை வழங்குகிறது.
- மாநில அரசுக்கு 20 ஆண்டு நீண்ட கால கடன்களை வழங்குகிறது.

**32.இந்திய தொழில் நிதிக் கழகத்தின் பணிகளைக் குறிப்பிடுக. (6.9.2)**

**இந்திய தொழில் நிதிக் கழகத்தின் பணிகள்:**

பாராளுமன்ற சட்டப்படி இது 1948ஆம் ஆண்டு ஜூலை 1ல் அமைக்கப்பட்டது.

**பணிகள்:**

- இந்திய ரூபாய் மற்றும் வெளிநாட்டு பணத்தில் நீண்ட காலக் கடன்களை வழங்குகிறது.
- வெளியிடப்பட்ட சம உரிமைப் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களுக்கு ஒப்புறுதியளிக்கிறது.
- சம உரிமைப் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களை வாங்குகிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**33.பணச்சந்தையையும், மூலதனச்சந்தையையும் வேறுபடுத்துக. (6.12)**

| பணச்சந்தை | மூலதனச்சந்தை |
|---|---|
| அதிக நீர்மைத் தன்மையை கொண்டதும் குறுகியகாலத்தில் முதிர்ச்சியுறுவதுமான நிதிக் கருவிகளை கையாளும் சந்தையே **பணச்சந்தை** எனப்படுகிறது. | நீண்டகால நிதிக்கருவிகளை வாணிபம் செய்யும் சந்தை **மூலதனச்சந்தை** எனப்படுகிறது. |
| ஒருநாள் முதற்கொண்டு ஒரு வருடத்திற்குள் முதிர்ச்சியடையும் நிதிக்கருவிகள் இச்சந்தையில் கையாளப்படுகிறது. | உற்பத்தி நோக்கில் நிறுவனங்கள் மற்றும் அரசுக்கு தேவைப்படும் நிதியினை திரட்டும் இடமாக **மூலதனச்சந்தை** இருக்கிறது. |
| **கையாளப்படும் நிதிக்கருவிகள்:** அரசுப் பத்திரங்கள், வணிகப் பத்திரங்கள், வைப்புச் சான்றுகள், மாற்றுச் சீட்டுகள். | பாரம்பரியமான நிதிக்கருவிகள், கடன் பத்திரங்களும் சமபங்குகளும் ஆகும். |

**34.பணமதிப்பு நீக்கத்தின் நோக்கங்களை குறிப்பிடுக. (6.14.1)**

**பணமதிப்பிழப்பு:**

குறிப்பிட்ட மதிப்புள்ள காகித பணித்தின் சட்டச் செலாவணி அந்தஸ்த்தை நீக்குதல்.

**பணமதிப்பு நீக்கத்தின் நோக்கங்கள்:**

- ❖ கருப்புப் பணத்தினை ஒழிப்பது.
- ❖ இலஞ்சத்தை தடுப்பது.
- ❖ தீவிரவாதத்திற்கு பணம் செல்வதைத் தடுப்பது மற்றும் கள்ளப் பணத்தினை தடுப்பது ஆகியன.

**35.நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் வணிக வங்கிகளின் பங்கினை விளக்குக. (6.3.3)**

**நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் வணிக வங்கிகளின் பங்கு:**

**1.மூலதன திரட்சி:**

- ❖ வணிக வங்கியானது பொது மக்களின் சேமிப்புகளை வைப்புகளாக திரட்டி அவைகளை உற்பத்தி நோக்கத்திற்காக கடன்களாக வழங்குகின்றன.
- ❖ வங்கிகளின் சேமிப்புகள் முறைப்படுத்தப்பட்ட பணச் சந்தைக்கு வருகின்றன.

P.THALAMPOORAJAN M.A.,B.Ed.,M.Phil., www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**2. கடன் உருவாக்கம்:**

- கடன் உருவாக்கம் என்பது கடன்களையும், முன்பண அளிப்பினையும் அதிகரிக்கும் ஒரு செயல்.
- வங்கிகளின் கடனளிப்பு பணத்தை உருவாக்கும்.

**3.நிதியை முறைப்படுத்துதல்:**

- வங்கிகள் உற்பத்தி நோக்கில் பணத்தை முதலீடு செய்கிறது. வெறுமனே வங்கிகள் மூலதன ஆக்கத்தை மட்டும் செய்யவில்லை.
- இதனால் பொருளாதாரத்தில் முதலீட்டின் ஒட்டு மொத்த உற்பத்தி திறன் கூடுகிறது.

**4.சரியான தொழிற்சாலைகளை ஊக்குவித்தல்:**

- உற்பத்தியாளர்கள் தங்களது உற்பத்தி முறைகளில் நவீனத்தைப் புகுத்தி தேசிய வருவாய் உயர்வதற்கு வழி செய்கின்றனர்.
- சில சமயங்களில் முக்கியத்துவம் குறைந்த துறைகளுக்கும் கடன் வழங்குகிறது.
- இதனால் அமெரிக்காவில் 2007-2008ம் ஆண்டுகளில் ஏற்பட்டது போன்ற பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்படும்.

**5.கடனை பணமாக்குகிறது:**

- கடன் விற்பனையில் கடனுக்கான உத்தரவாதமாக மாற்றுச்சீட்டுகளை வங்கிகள் கழிவு செய்வதால், வர்த்தக நிறுவனங்கள் எந்த இடையூறுமின்றி பொருளாதார நடவடிக்கைகளைத் தொடர முடிகின்றது.

**6.அரசிற்கு நிதி வழங்குகிறது:**

- தொழில் வளர்ச்சியை மேம்படுத்த வணிக வங்கிகள் அரசிற்கு நீண்ட கால கடன்களை மற்றும் குறுகியகால கடன்களை வழங்குகிறது.

**7.வேலைவாய்ப்பினை உருவாக்குதல்:**

- வங்கிகள் தேசியமயமாக்களுக்குப் பின் வங்கித்துறை பெருமளவுக்கு வளர்ந்துள்ளது.
- நிறைய எண்ணிக்கையில் கிளைகள் திறக்கப்பட்டு கடன் பெருக்கத்தினைச் செய்வதால் வேலைவாய்ப்புகள் உருவாகிறது.


**8.தொழில்முனைவோரை ஊக்கப்படுத்துதல்:**

- தொழில்நுட்ப ரீதியாக சாத்தியமானதாகவும் மற்றும் பொருளாதார ரீதியாக பயனளிக்கத்தக்க மிகச் சிறந்த திட்டங்களுக்கு வங்கிகள் 100 சதவீத கடன்களை அளித்து நாட்டின் மேம்பாட்டிற்கான சீரிய பணியினைச் செய்து வருகின்றன.

R.THIALAMPOORAJAN.M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net

**36.வணிக வங்கிகளின் பணிகளை விளக்குக. (6.3.1)**

**வணிக வங்கிகளின் பணிகள்:**




**அ) முதன்மைப் பணிகள்:**

**1.வைப்புகளை ஏற்றுக்கொள்ளுதல்:**

- ❖ பொதுமக்களால் செலுத்தப்படும் வைப்புகளை ஏற்றுக்கொள்ளுதல் ஆகும். இது வங்கி வணிகத்திற்கான முக்கிய நிதி ஆதாரம் ஆகும். இது இரு வகைப்படும்.

**i)கேட்பு வைப்புகள்:**

- ❖ இவை வங்கிகளில் வைப்புகளை வைத்திருக்கும் வாடிக்கையாளர் முன்னறிவிப்பின்றி எப்பொழுது வேண்டுமானாலும் பணத்தை தனது கணக்கிலுருந்து எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படும் ஒரு வைப்பாகும்.

**கேட்பு வைப்புகளின் இரு வகைகள்:**

- ❖ சேமிப்பு வங்கிக் கணக்கு
- ❖ நடப்புக் கணக்கு

**ii)கால வைப்புகள்:**

- ❖ ஒரு குறிப்பிட்ட காலவரையறை வரை வங்கிகளிடமிருந்து மீளப் பெறப்படாமல் இருக்கும் வைப்புகளாகும்.

**வகைகள்:**

- ❖ நிலை வைப்பு
- ❖ தொடர் வைப்பு

**2.கடன் வழங்கல்:**

- ❖ ரொக்கக் கடன், மாற்றுச்சீட்டு தள்ளுபடி, மிகைப்பற்று ஆகிய முறைகளில் கடன்களை வழங்குகின்றன.

**ஆ) இரண்டாம் நிலை பணிகள்:**

இவைகள் மூன்றாகப் பிரிக்கப்படுகின்றன.

**1.முகமைப்பணிகள்:**

- ❖ வங்கி வாடிக்கையாளர்களுக்கு முகவராக இருந்து செய்யும் பணிகளை முகமைப்பணிகள் எனப்படும்.

RTHALAMPOORAJAN.M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**i)காசோலைகளை பணமாக்குதல்:**

- வாடிக்கையாளர்களுக்காக காசோலைகள் வசூல் செய்து கொடுக்கின்றன.

**ii)வருமானத்தை பெறுதல்:**

- வாடிக்கையாளர்களுக்கு வர வேண்டிய ஓய்வூதியம், சம்பளம், வாடகை, வட்டி ஆகியவற்றினை வசூலித்து தருகின்றன.

**iii)செலவுகளை செலுத்துகிறது:**

- தொலைபேசி கட்டணம், காப்பீட்டு பிரிமியம், கல்விக் கட்டணம் போன்றவற்றை வாடிக்கையாளர்களுக்காக செய்கிறது.

**2.பொதுப் பயன்பாட்டு பணிகள்:**

- வாடிக்கையாளர்களுக்கான கூடுதல் பயன்பாட்டுப் பணிகள் ஆகும்.

**i)பாதுகாப்பு பெட்டக வசதி:**

- மதிப்புமிக்க பொருட்களை பாதுகாக்க பெட்டக வசதியை வணிக வங்கிகள் தருகின்றன. பெட்டகத்தில் உள்ள பொருட்களுக்கு வங்கிகள் பொறுப்பல்ல.

**ii)பயணக் காசோலைகளை வழங்குதல்:**

- பயணக் காசோலைகளை வழங்குவதன் மூலம் வெளிநாட்டு பயணத்தின் போது பணப்பாதுகாப்பினை வழங்குகிறது.

**iii)அந்நியச் செலவாணியைக் கையாளுதல்:**

- ஏற்றுமதி, இறக்குமதி வாணிகத்தில் அந்நியச் செலாவணி வசதியைச் செய்து தருகிறது.

**3.கடன் உறுதியளிப்புக் கடிதம்:**

- வாடிக்கையாளரின் கடன் நம்பகத் தன்மையை சான்றளிக்கும் விதமாக வங்கிகள் கடன் உறுதியளிப்புக் கடிதங்களை வழங்குகின்றன.

**4.பத்திரங்களுக்கு எழுத்துறுதி வழங்குதல்:**

- பொதுமக்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையினால் இப்பணி எளிமையாகிறது.

**5.மின்னணு வங்கி:**

- பற்று அட்டை, கடன் அட்டை மற்றும் இணைய வங்கி மூலம் விரைவான பணப்பரிவர்த்தனைகள் மேற்கொள்ள உதவுகின்றன.

R.THALAMPOORANAN,M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**இ) இதர பணிகள்:**

**i)பண அளிப்பு:**

- அதிகமாக பணம் அச்சடிக்கப்படாமல் பண அளிப்பு அதிகரிக்கின்றது.

**ii)கடன் உருவாக்கம்:**

- கடன் உருவாக்கம் என்பது கடன்களையும், முன்பண அளிப்பினையும் அதிகரிக்கும் ஒரு செயல்.
- வங்கிகளின் கடனளிப்பு பணத்தை உருவாக்கும்.

**iii) புள்ளி விவரங்களை திரட்டுதல்:**

- அரசு அதிகாரிகளுக்கு புள்ளி விவரங்கள் மூலம் தங்களது ஆலோசனைகளை வணிக வங்கிகள் வழங்குகின்றன.

**37.இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விளக்குக. (6.5.1)**

**இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகள்:**

**1.பண அதிகார அமைப்பு:**

- இந்தியாவில் பண அளிப்பினைக் கட்டுப்படுத்துவதன் மூலம் அந்நியச் செலாவணி பரிவர்த்தனை விகிதத்தினை நிலைப்படுத்துதல், பணவீக்கத்தை கட்டுப்படுத்துதல், மற்றும் வங்கியமைப்பை உறுதியாக்குதல் ஆகியவற்றை செய்கிறது.

**2.காகிதபண வெளியீடு:**

- அனைத்து வகையான காகிதப் பணத்தை வெளியிடுவதில் முற்றுரிமை பெற்ற நிறுவனம் ரிசர்வ் வங்கியாகும்.

**3.வங்கி உரிமங்கள் வழங்குபவர்:**

- இந்தியாவில் வங்கித் தொழில் செய்ய மைய வங்கியிடம் உரிமம் பெற வேண்டியது அவசியம் ஆகும்.

**4.அரசுக்கான வங்கி:**

- இது மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கான வங்கி ஆகும்.
- அரசுகளுக்கு குறுகிய கால கடன்களைத் தருகிறது.
- அரசுக்கு வங்கி மற்றும் நிதி தொடர்பான ஆலோசனைகளை வழங்குகிறது.

**5.வங்கிகளின் வங்கி:**

- இந்திய ரிசர்வ் வங்கி அனைத்து வங்கிகளுக்கும் தலைமை வங்கியாகும்.
- வங்கிகளுக்கு வேண்டிய கடன்களை அளிக்கிறது.
- அவைகளின் வைப்புகளை ஏற்கிறது.
- மாற்றுச் சீட்டுகளை மறு தள்ளுபடி செய்கிறது.
- அதனால் இது வங்கிகளின் வங்கி எனப்படுகிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**6.கடைசி நிலைக்கடன் ஈவோன்:**

- ❖ வணிக வங்கிகளுக்கு தீர்க்க இயலாத நிதிச் சிக்கல்கள் ஏற்படும்பொழுது, நிதிக்கான மற்ற ஆதாரங்கள் இல்லாத சூழ்நிலையில் அச்சிக்கலிருந்து மீள்வதற்கு இந்திய ரிசர்வ் வங்கி ஈட்டுக்கடனை அளித்து உதவுகிறது.

**7.தீர்வாக செயல்படுகிறது:**

- ❖ பரிவர்த்தனை தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குகிறது.

**8.அந்நிய செலாவணி பாதுகாவலன்:**

- ❖ வெளிநாட்டு பணங்களை அவ்வப்பொழுது வாங்கி விற்கும் நடவடிக்கையில் ஈடுபடுகிறது.

**9.பொருளாதாரத்தை நெறிப்படுத்துகிறது:**

- ❖ தேசிய வருவாய், வேலைவாய்ப்பு போன்ற குறியீடுகளை தொடர்ந்து கண்காணித்து நெறிப்படுத்தும்.

**10.செலுத்துதல் மற்றும் தீர்வு செய்வதில் நெறியாளராகவும், மேலாளராகவும் செயல்படுகிறது:**

- ❖ ரிசர்வ் வங்கி பாதுகாப்பான மேம்பாட்டிற்கு உதவுகிறது.

**11.மேம்பாட்டு பணி:**

- ❖ நிதிச் சேவைகள் மற்றும் நிதிக் கல்வியறிவு ஆகியவற்றை விரிவாக்கும் பணியினையும் செய்கிறது.

**12.வங்கி குறைதீர்ப்பாயத் திட்டம்:**

- ❖ இணைய வழியில் வரும் புகார்கள் உள்பட அனைத்து வழிகளில் வரும் புகார்களையும் இந்த குறை தீர்ப்பாயம் கணக்கில் எடுத்துக் கொள்கிறது.

**13.பணவியல் மற்றும் இதர தகவல்களை வெளியிடுகிறது:**

- ❖ பணம், வங்கி மற்றும் முக்கிய பொருளாதாரப் புள்ளி விவரங்களை வெளியிடுகிறது.

**14.இந்திய வங்கி மற்றும் நெறிமுறை மற்றும் மதிப்பீடுகள் வாரியம்:**

- ❖ வங்கிகளின் திறனை அளவிடும் விதமாக அமைக்கப்பட்டது.


R.THALAMPOORAJAN,M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**38.பணவியல் கொள்கையின் நோக்கங்கள் யாவை? விளக்குக. (6.10.3)**

**பணவியல் கொள்கையின் நோக்கங்கள்:**




**1.பணத்தின் நடுநிலைத்தன்மை:**

- ❖ முக்கிய பொருளியல் நிபுணர்கள்: விக்ஸ்டெட், ஹெயக் மற்றும் ராபர்ட்சன்
- ❖ பணநடுநிலையாளர்களின் கூற்றுப்படி, பணவியல் மாற்றங்கள் சரியான பாதையில் சென்று கொண்டிருக்கும். நாட்டின் பொருளாதார அமைப்பில் விலகலையும், இடையூறுகளையும் ஏற்படுத்தும் என்றனர்.

**2.விகித நிலைத்தன்மை:**

- ❖ "எப்பொழுது தங்கம் உள்வருகிறதோ அப்பொழுது பணமும் கடனும் விரிவடைகிறது; எப்பொழுது தங்கம் வெளிச்செல்கிறதோ அப்பொழுது பணமும் கடனும் சுருங்குகிறது."
- ❖ பரிவர்த்தனை விகிதங்களில் நிலையற்ற தன்மை இருந்தால், பரிவர்த்தனை விகிதங்களில் நிலைத்தன்மையை ஏற்படுத்துவது பன்னாட்டு வாணிபத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**3.விலை நிலைத்தன்மை:**

- ❖ காஸன், கீன்ஸ் போன்றவர்கள் இதனை முக்கிய நோக்கம் என்கின்றனர்.
- ❖ ஒரு மிதமான விலையேற்றம் என்பது பொருளாதார வளர்ச்சியின் ஊக்க சக்தியாக இருக்கும். இந்த மிதமான விலையேற்றம் என்பது கிட்டத்தட்ட நிலையான விலையின் பெரும்பாலான பண்புகளையும் தன்னகத்தே கொண்டதாக இருக்கும்.

**4.முழு வேலைவாய்ப்பு:**

- ❖ உலக பெருமந்தத்தின் பொழுது, வேலையின்மை மிக வேகமாக அதிகரித்தது.
- ❖ முழுவேலை வாய்ப்பு என்பது பணவியல் கொள்கையின் முக்கிய குறிக்கோளாக இருந்தது.

**5.பொருளாதார வளர்ச்சி:**

- ❖ நீடித்த பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்துவது பணவியல் கொள்கையின் குறிக்கோளாக அமைகிறது.

R.THAI AMPOORANAN M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net

**6.செலுத்துச் சமநிலையில் சமநிலையை பேணுதல்:**

- குறைவளர்ச்சி நாடுகள் தங்களுடைய இறக்குமதியினை குறைப்பதால் அதன் வளர்ச்சி நடவடிக்கைகள் பாதிக்கப்படும் பாதகமான நிலைக்கு தள்ளப்படுகிறது.
- ஆகவே, பணவியல் கொள்கை செலுத்துச் சமநிலையில் சமமான நிலையினை பேணுவதை தனது குறிக்கோளாக கொண்டிருக்கிறது.

R.THALAMPOORAJAN,M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net

**பயிற்சி வினாக்கள்**

**1."நவீன வாணிபத்தின் முதுகெலும்பு" குறிப்பு வரைக. (6.1)**

**2.ரிக்ஸ் வங்கி – குறிப்பு வரைக. (6.2)**

**3.பணம் வெளியிட்ட முதல் மைய வங்கி பற்றி எழுதுக. (6.2)**

**4.1921 முதல் 1954 வரையிலான காலகட்ட மைய வங்கி அமைப்புகள்: (6.2)**

**5.இந்திய வங்கிகளின் வரலாற்றைக் கூறுக. (6.2)**

**6.இந்திய ரிசர்வ் வங்கிகளின் வரலாற்றைக் கூறுக. (6.5.1)**

**7.FEMAன் விரிவாக்கம் தருக. (6.5.1)**

**8.PSS Act விவரிக்க. (6.5.1)**

**9.வங்கி விகிதக் கொள்கையை விவரி. (6.5.3)**

**10.கடன் பங்கீடு (Rationing of Credit) என்றால் என்ன? (6.5.3)**
**11.ரெப்போ விகிதம் என்றால் என்ன? (6.5.3)**

**12.மீள் ரெப்போ விகிதம் என்றால் என்ன? (6.5.3)**

**13.ARDC (விவசாய மறுகடன் மேம்பாட்டுக் கழகம்) பற்றி விவரிக்க. (6.6)**

**14.விவசாய மறுகடன் மேம்பாட்டுக் கழகத்தின் நோக்கங்கள் யாவை? (6.6.1)**
**15.RRBs பற்றி விவரிக்க. (6.7)**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**16.NABARD பற்றி விவரிக்க. (6.8)**

**17.நபார்டு வங்கியின் பணிகள் யாவை? (6.8.1)**

**18.அனைத்திந்திய அளவிலான தொழில்நிதிக்கான அமைப்புகள் யாவை? (6.9.1)**

**19.மாநில அளவிலான தொழில்நிதிக்கான அமைப்புகள் யாவை? (6.9.1)**

**20.இந்திய தொழிற்கடன் மற்றும் முதலீட்டுக் கழகம் [Industrial Credit and Investment Corporation of India (ICICI)] பணிகள் யாவை? (6.9.2)**

**21.இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி [Industrial Development Bank of India (IDBI)] பற்றி குறிப்பு வரைக. (6.9.2)**

**22.மாநில நிதிக் கழகங்கள் [State Financial Corporations (SFCs)] பற்றிக் குறிப்பிடுக. (6.9.3)**

**23.மாநில தொழில் மேம்பாட்டுக் கழகங்கள் [State Industrial Development Corporations (SIDCOs)] பற்றிக் குறிப்பிடுக. (6.9.3)**

**24.விரிவாக்க (அ) மலிவுப் பணக் கொள்கை என்றால் என்ன? (6.10.1)**

**25.சுருக்க (அ) அருமைப் பணக் கொள்கை என்றால் என்ன? (6.10.1)**

**26.பணக் கொள்கையின் இரண்டு நிலைகள் யாவை? (6.10.1)**

27.**மின்னணு வங்கி முறை என்றால் என்ன? (6.11.1)**

**28.RTGS பற்றி விவரிக்க. (6.11.2)**

**29.NEFT பற்றி விவரிக்க. (6.11.2)**

**30.ATM பற்றி விவரிக்க. (6.11.3)**

**31.Paytm பற்றி கூறுக. (6.11.4)**

**32.NEFT மற்றும் RTGSன் வேறுபாடுகள் யாவை? (6.11.2)**

**33.பற்று அட்டை (Debit Card) என்றால் என்ன? (6.11.5)**

**34.கடன் அட்டை (Credit Card) என்றால் என்ன? (6.11.5)**

**35.செயல்படாத சொத்து (Non-Performing Assets) என்றால் என்ன? (6.11.6)**

**36.ஏப்ரல் 1, 2017 முதல் ஸ்டேட் வங்கியுடன் இணைக்கப்பட்ட வங்கிகள் யாவை? (6.11.7)**

**37.பணமதிப்பு நீக்கம் (Demonetization) என்றால் என்ன? (6.14)**

R.THALAMPOORAJAN M.A.,B.Ed.,M.Phil., www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# அத்தியாயம் 7: பன்னாட்டுப் பொருளியல்

1. இரண்டு நாடுகளுக்கிடையிலான வாணிகம் என்பது **வெளிவாணிகம்**.

2. கீழ்கண்டவற்றுள் வாணிகத்தை தீர்மானிக்கும் காரணி எது?

அ) ஒரு பொருளின் மேம்பாட்டு காலகட்டம்

ஆ) உற்பத்தி காரணிகளின் ஒப்பீட்டு விலை

இ) அரசாங்கம் **ஈ) மேற்கண்ட அனைத்தும்**

3. பன்னாட்டு வாணிகம் உள்நாட்டு வாணிகத்திலிருந்து வேறுபடக் காரணம்

அ) வணிகக் கட்டுப்பாடுகள்

ஆ) உற்பத்தி காரணிகள் இடம் பெயர இயலாமை

இ) நாடுகளின் கொள்கை வேறுபாடுகள் **ஈ) மேற்சொன்ன அனைத்தும்**

4. நாடுகள் பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபட அடிப்படை காரணம் **உற்பத்தி வளங்கள் நாடுகளுக்கிடையே ஏற்றத்தாழ்வுடன் பகிரப்பட்டுள்ளது.**

5. புதிய பன்னாட்டு வாரிய கோட்பாடு எதன் அடிப்படையில் அமைந்தது? **உற்பத்திக் காரணி கோட்பாடு.**

6. பணமாற்று வீதம் நிர்ணயமாகும் சந்தை **அந்நிய செலாவணி**

7. கீழ்க்கண்ட எந்த பணமாற்று நிர்ணய முறையில் சந்தை விலைகளான தேவையும் அளிப்பும் பண மாற்ற வீதத்தை நிர்ணயிக்கிறது **மாறுகின்ற பணமாற்று வீதம்**

8. ஏற்றுமதி நிகரம் என்பது **ஏற்றுமதி - இறக்குமதி**

9. கீழ்கண்டவர்களில் யார் ஒற்றை காரணி வாணிப வீதத்தை வடிவமைத்தவர் **ஜேக்கப் வைனர்**.

10. வாணிப வீதம் **ஏற்றுமதி விலை இறக்குமதி விலை விகிதம்** பற்றி குறிப்பிடுகின்றது.

11. சாதகமான வாணிக சூழலில் ஏற்றுமதி இறக்குமதியை விட **அதிகமாக** இருக்கும்.

12. இறக்குமதி ஏற்றுமதியைவிட அதிகமாக இருத்தலை கீழ்க்கண்ட வழிகளில் எது சரி செய்யும் **ஏற்றுமதி வரியை அதிகரித்தல்.**

13. அயல்நாட்டுச் செலுத்துநிலை உள்ளடக்கிய இனங்கள்

அ) புலனாகும் பொருட்கள் மட்டும் ஆ) புலன் ஆகாத பணிகள் மட்டும்

**இ) அ மற்றும் ஆ**

RTHALAMOORTHY M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

14. அயல்நாட்டுச் செலுத்து நிலை கூறுகள் கீழ்கண்டவைகளில் எவை?

அ) நடப்பு கணக்கு ஆ) மைய வங்கி இருப்பு

இ) மூலதன கணக்கு <u>**ஈ) அ, ஆ, இ மூன்றும்**</u>

15. வாணிபக் கொடுப்பல் நிலை அறிக்கையில்

<u>**பொருள் பரிவர்த்தனை மட்டும் பதிவாகிறது.**</u>

16. சுற்றுலா மற்றும் வெளிநாட்டுப் பயணம் தொடர்புடைய பரிவர்த்தனைகள் அயல்நாட்டு செலுத்து நிலையின் எந்த கணக்கீட்டின் கீழ் பதிவாகிறது? <u>**பணிகள் வாணிகக் கணக்கு**</u>

17. சுழற்சி அயல்நாட்டு செலுத்துநிலை சமமற்ற நிலைக்கான காரணம்

அ) வாணிக சுழற்சியின் மாறுபட்ட காலகட்டம்

ஆ) வருவாய் மற்றும் விலை தேவை நெகிழ்ச்சி நாடுகளுக்கிடையே வேறுபடுதல் <u>**அ மற்றும் ஆ**</u>

18. கீழ்கண்டவைகளில் எவை வெளிநாட்டு நேரடி மூலதனத்திற்கான உதாரணமாக கூற முடியாது?

<u>**வெளிநாட்டு துணி நிறுவனம் வெளியிட்ட பங்கு அல்லது கடன் பத்திரத்தை வாங்குவது**</u>

19. இந்தியாவில் வெளிநாட்டு நேரடி மூலதனம் அனுமதிக்க படாத துறை?

<u>**அணு ஆற்றல்**</u>

20. கோட்பாடு அடிப்படையில் வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நன்மைகளாவன

அ) பொருளாதார வளர்ச்சி ஆ) பன்னாட்டு வாணிப வளர்ச்சி

இ) வேலைவாய்ப்பு மற்றும் திறன் அதிகரித்தல் <u>**ஈ)மேற்கண்ட அனைத்தும்**</u>

**21.பன்னாட்டுப் பொருளியல் என்றால் என்ன? (7.2)**

**பன்னாட்டுப் பொருளியல்:**

- ❖ பன்னாட்டுப் பொருளியல் என்பது பொருட்கள் மற்றும் பணிகள் நாடுகளுக்கிடையே பரிமாற்றம் செய்வது பற்றிய பொருளியலின் ஒரு பாடப்பிரிவாகும்.

**22.பன்னாட்டு வாணிகம் வரைவிலக்கணம் தருக. (7.4.2)**

**பன்னாட்டு வாணிகம் வரைவிலக்கணம்:**

- ❖ பொருட்கள் மற்றும் பணிகளை இரு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகள் பரிமாறிக் கொள்வதை பன்நாட்டு வாணிகம் எனலாம்.
- ❖ இது நாடுகளின் எல்லைகளை கடந்து நடைபெறும் வாணிகம்.
- ❖ **வேறு பெயர்கள்:** வெளிவர்த்தகம், அயல் வாணிகம், மண்டலங்களுக்கிடையிலான வாணிகம்.

R.THALAMPOORAJAN.M.A.,B.Ed.,M.Phil., www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**23.பன்னாட்டு வாணிகத்தின் நன்மைகளில் ஏதேனும் இரண்டு குறிப்பிடுக. (7.6)**

**பன்னாட்டு வாணிகத்தின் நன்மைகள்:**

**1.திறனுடைய உற்பத்தி:**

- ❖ உற்பத்தி வளங்களை சிறப்பாக பயன்படுத்துதல்
- ❖ உற்பத்தி தொழில்நுட்பம் மேம்படுத்துதல்
- ❖ உற்பத்தி அளவு அதிகரித்தல்.

**2.நாடுகளிடையே விலை சமனடைதல்:**

- ❖ உற்பத்தி காரணிகளின் விலையும் நாடுகளிடையே சமமாகும்.
- ❖ போக்குவரத்து செலவில் மட்டும் வேறுபாடு காணப்படும்.

**3.பற்றாக்குறையுள்ள வளங்களை சமமாகப் பகிர்தல்.**

**4.நாடுகளுக்கிடையேயான உறவு மேம்பட வாய்ப்பு உள்ளது.**

**5.பின்தங்கிய நாடுகள் தொழில்மயமாகலாம்.**

**6.வேலைவாய்ப்பு அதிகரிக்கச் செய்கிறது.**

**24.பன்னாட்டு வாணிகத்தின் அடிப்படைகளை விளக்குவதில் ஆடம் ஸ்மித்துக்கும், டேவிட் ரிக்கார்டோவுக்கும் உள்ள வேறுபாடு என்ன? (7.5.2)**

**ஆடம் ஸ்மித்தின் கோட்பாடு:**

- ❖ ஆடம் ஸ்மித்தின் கருத்துப்படி குறைந்த தனி அடக்கச் செலவில் பொருளுற்பத்தி செய்யும் தேர்ச்சியை நாடுகள் பெற்றிருப்பதே பன்னாட்டு வாணிகம் நடைபெறுவதற்கான அடிப்படையாகும்.

**25.வாணிப வீதத்தினை விளக்குக. (7.7)**

**வாணிப வீதம்:**

- ❖ ஏற்றுமதி பொருளின் விலைக்கும் இறக்குமதி பொருளின் விலைக்குமிடையான விகிதமே வாணிப வீதம் எனப்படும்.

$$\text{வாணிப வீதம்} = \frac{\text{ஏற்றுமதி விலைக்குறியீடு}}{\text{இறக்குமதி விலைக் குறியீடு}} \times 100$$

**26.வாணிபச் செலுத்துநிலை பற்றி நீவிர் அறிவது யாது? (7.8.2)**

**வாணிபச் செலுத்துநிலை:**

- ❖ ஒரு நாடு ஒரு குறிப்பட்ட காலத்தில் உலக நாடுகளுடன் மேற்கொள்ளும் பொருளாதார பரிவர்த்தனை அறிக்கையை அயல்நாட்டுச் செலுத்துநிலை என்கிறோம்.
- ❖ இது இரட்டைப் பதிவு கணக்கியல் முறையில் தயாரிக்கப்படும் அறிக்கையாகும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**27.செலாவணி மாற்று வீதம் என்றால் என்ன? (7.9.3)**

**செலாவணி மாற்று வீதம்:**

- ❖ அயல் பண அளவில் உள்நாட்டு பணத்தின் மதிப்பாகும்.
- ❖ ஒரு அலகு அயல்பணத்தை பெறுவதற்கு எத்தனை அலகு உள்நாட்டு பணத்தை கொடுக்கிறோம் என்பதே பணமாற்று வீதமாகும்.

**உதாரணம்:** $1 = ₹75

**28.பன்னாட்டுப் பொருளியலின் உள்ளடக்கத்தைப் பட்டியலிடுக. (7.3)**

**பன்னாட்டுப் பொருளியலின் உள்ளடக்கம்:**

**1.தூய வாணிபக் கோட்பாடு:**

- ❖ நாடுகள் ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கான காரணங்கள் அறியப்படுகின்றன.
- ❖ எந்தெந்த வகையான நாடுகளுக்கு ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படுகின்றன என்ற விவரம்,
- ❖ அயல் வாணிக செலுத்து நிலை ஆகியவற்றை விவரிக்கும் பிரிவே தூய வாணிபக் கோட்பாடு ஆகும்.

**2.கொள்கைச் சச்சரவுகள்:**

- ❖ தடைகளற்ற வாணிகத்தை அனுமதிப்பதா போன்றவற்றை விவாதிக்கிறது.

**3.பன்னாட்டு வாணிகக் கூட்டமைப்பும் ஒன்றியங்களும்:**

- ❖ பன்னாட்டு வாணிக நிறுவங்களின்செயல்பாடுகளை விவாதிக்கிறது.

**4.பன்னாட்டு நிதி மற்றும் வாணிப ஒழுங்குபடுத்தும் நிறுவனங்கள்**

**29.பன்னாட்டு வாணிகத் தொன்மைக் கோட்பாட்டிற்கும் புதிய கோட்பாட்டிற்குமிடையிலான வேறுபாடுகளை எழுது. (7.5.5)**

| வ. எண் | தொன்மைப் பன்னாட்டு வாணிபக் கோட்பாடு | புதிய பன்னாட்டு வாணிபக் கோட்பாடு |
|---|---|---|
| 1. | பன்னாட்டு வாணிபத்தை விளக்குவதற்கு உழைப்பைச் சார்ந்த மதிப்புக்கோட்பாட்டைஅடிப்படையாகக் கொண்டது. | பன்னாட்டு வாணிபத்தை விளக்குவதற்கு பொது மதிப்புக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது |
| 2. | இது ஒரு காரணி (உழைப்பு) மாதிரியாகும் | இது இரு காரணி (உழைப்பு, மூலதனம்) மாதிரியாகும். |
| 3. | ஒப்புமைச் செலவு வேறுபாட்டிற்கு உழைப்பாளர்களின் உற்பத்தி திறன் வேறுபாடுகள் காரணம் என்கிறது | ஒப்புமைச் செலவு வேறுபாட்டிற்கு உற்பத்தி காரணிகளின் கிடைப்பளவு வேறுபாடே காரணம் என நம்புகிறது. |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**30.மொத்த மற்றும் நிகர பண்ட பரிமாற்று வாணிப வீதத்தை சுருக்கமாக எழுதுக. (7.7.2)**

**மொத்த பண்ட மாற்று வாணிப வீதம்:**

மொத்த ஏற்றுமதி பொருட்களின் குறியீட்டெண்ணிற்கும் மொத்த இறக்குமதி பொருட்களின் குறியீட்டெண்ணிற்கும் இடையேயான விகிதம் ஆகும்.

**நிகர பண்ட மாற்று வாணிப வீதம்:**

நிகர பண்டமாற்று வீதத்தை F.W. தாசிக் 1927ல் வடிவமைத்தார்.

ஏற்றுமதி விலைக்கும் இறக்குமதி விலைக்கும் இடையேயான விகிதமே நிகர பண்டமாற்று வீதம் என்கிறார்.

$$T_n = (P_x / P_m) \times 100$$

இங்கு $T_n$ = நிகர பண்டமாற்று வாணிப வீதம்

$P_x$ = ஏற்றுமதி விலைக் குறியீட்டெண்

$P_m$ = இறக்குமதி விலைக் குறியீட்டெண்

**31.வாணிபக் கொடுப்பல் நிலைக்கும் (Balance of Trade) அயல்நாட்டுச் செலுத்து நிலை (Balance of Payment) க்குமிடையிலான ஏதேனும் மூன்று வேறுபாடுகளைப் பட்டியலிடுக. (7.8.1)**

**வாணிபக் கொடுப்பல் நிலை - அயல்நாட்டுச் செலுத்து நிலை வேறுபாடு:**

| **வாணிபக் கொடுப்பல் நிலை** | **அயல்நாட்டுச் செலுத்து நிலை** |
|---|---|
| ஒரு நாட்டின் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் பண்டங்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்பு ஆகும். | நாடுகளுக்கிடையே பொருட்கள் மட்டுமல்லாமல் பணிகள், மூலதனம், பணம் போன்றவை பரிமாறிக் கொள்ளப்படுகிறது. |
| ஒரு நாட்டின் வாணிப கொடுப்பல் நிலை அறிக்கையில் பண்டங்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி விவரம் மட்டுமே தொகுத்தளிக்கப்படும். | ஒரு நாடு ஒரு குறிப்பிட்ட காலத்தில் உலக நாடுகளுடன் மேற்கொள்ளும் பொருளாதார பரிவர்த்தனை அறிக்கையாகும். |
| புலப்படும் வாணிகம் | இது இரட்டைப்பதிவு கணக்கியல் முறையில் தயாரிக்கப்படும் அறிக்கை ஆகும். |

**32.இறக்குமதி பங்களவு என்றால் என்ன? (7.8.7)**

**இறக்குமதி பங்களவு:**

- ❖ இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் வழிமுறை ஆகும்.
- ❖ பங்களவு நிர்ணயித்து இறக்குமதியைக் குறைக்கலாம்.
- ❖ பங்களவு என்பது இறக்குமதி அளவை நிர்ணயித்தலாகும்.
- ❖ கட்டுப்பாடு அல்லது தவிர்ப்பு என்ற முறையில் அத்தியாவிசயமற்ற பொருட்களை குறைப்பது. ஆனால் இது கடத்தலை ஊக்குவிக்கும்.

R.THIALAMPOORAJAN M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**33.மாறுகின்ற பணமாற்று வீதத்தின் பொருள் தருக. (7.9.6)**

**மாறுகின்ற/நிலையற்ற பணமாற்று வீதம்:**

- அந்நிய செலாவணி சந்தை விசைகளான மாறுகின்ற அந்நிய செலாவணிக்கான தேவையும் அளிப்பும் பணமாற்று வீதத்தை நிர்ணயிக்கும் முறை மாறுகின்ற பணமாற்று வீதமாகும்.
- இது **மிதக்கும் பணமாற்று வீதம்** என்றும் அழைக்கப்படும்.

**34.வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்களை குறிப்பிடுக. (7.10.2)**

**வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்கள்:**

1. விற்பனையை விரிவுபடுத்துதல்
2. இயற்கை வளங்களை கையகப்படுத்துதல்
3. வாணிக பரவலாக்கம்
4. போட்டி இடர்களை குறைத்தல்.

**35.உள்நாட்டு வாணிகத்துக்கும் பன்னாட்டு வாணிகத்துக்குமிடையிலான வேறுபாடுகளை விவாதிக்கவும். (7.4.3)**

**உள்நாட்டு வாணிகத்துக்கும் பன்னாட்டு வாணிகத்துக்குமிடையிலான வேறுபாடுகள்:**

| வ. எண். | உள்நாட்டு வாணிகம் | பன்னாட்டு வாணிகம் |
|---|---|---|
| 1 | ஒரு நாட்டிற்குள் மக்கள் மற்றும் நிறுவனங்களுக்கிடையே நடைபெறும் வாணிகம். | பல நாட்டின் மக்கள் மற்றும் நிறுவனங்களுக்கிடையே நடைபெறும் வாணிகம். |
| 2 | உழைப்பு மற்றும் மூலதனம் ஒரு நாட்டின் பகுதிகளுக்கிடையே தடையில்லாமல் இடம்பெயர்தல். | உழைப்பு மற்றும் மூலதனம் நாடுகளுக்கிடையே இடம்பெயர்தல் தடைகளுக்குட்பட்டது. |
| 3 | பொருட்கள் மற்றும் பணிகள் இடம்பெயர்தலில் தடை ஏதுமில்லை. | பொருட்கள் மற்றும் பணிகள் இடம் பெயர்தலை சுங்கவரி மற்றும் பங்களவு போன்ற தடைகள் கடினமாக்குகின்றன. |
| 4 | விற்றல் வாங்களில் ஒரே ஒரு பணம் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. | பல நாட்டு பணம் பயன்படுத்தப்படுகிறது. |

R.THAMPORAJAN,M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

| | | |
|---|---|---|
| **5** | புவியமைப்பு மற்றும் காலநிலை சூழல் கிட்டத்தட்ட ஒரே மாதிரி இருக்கும். | புவியமைப்பு மற்றும் காலநிலை வேறுபடும் இயல்பு கொண்டவை. |
| **6** | வாணிக மற்றும் நிதி நடைமுறைகள் ஒரே மாதிரியானவை. | வாணிக மற்றும் நிதி நடைமுறைகள் வேறுபடும் போக்கு கொண்டவை. |
| **7** | அரசமைப்பு முறை மக்களின் பழக்க வழக்கங்கள் மற்றுமு அரசின் கொள்கைகளில் வேறுபாடில்லை. | அரசமைப்பு முறை மக்களின் பழக்க வழக்கங்கள் மற்றுமு அரசின் கொள்கைகளில் வேறுபாடிருக்கும். |

**36.ஒப்புமைச் செலவுக் கோட்பாட்டினை விவரி. (7.5.3)**

**ஒப்புமைச் செலவுக் கோட்பாடு:**

❖ ரிக்கார்டோ இரண்டு பொருட்களை ஒரு நாடு குறைந்த தனி அடக்க செலவில் உற்பத்தி செய்ய முடிந்தாலும் அந்த நாடு மற்ற நாட்டு உற்பத்தி செலவுடன் ஒப்பிட்டு குறைந்த செலவில் உற்பத்தி செய்ய இயலும் பொருளுற்பத்தியில் தனித் தேர்ச்சி அடைந்து ஏற்றுமதி செய்யலாம்.

**எடுகோள்கள்:**

1. இரண்டு நாடுகள் இரண்டு பொருட்களை உற்பத்தி செய்கின்றன. (2 X 2 மாதிரி)
2. கூலிச் செலவு மட்டுமே உற்பத்தி செலவாகும்.
3. உழைப்பாளர்கள் அனைவரும் சமமான திறன் பெற்றவர்கள்.
4. உற்பத்தி அளவு மாறா விளைவு விதிக்குட்பட்டது.
5. உற்பத்தி தொழில் நுட்பத்தில் மாற்றங்கள் நிகழ்வதில்லை.
6. போக்குவரத்து செலவு கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை.
7. நாட்டின் சந்தையில் நிறைவுப் போட்டி நிலவுகிறது.
8. உற்பத்தி வளங்கள் முழுவதும் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படுகின்றன.

**எடுத்துக்காட்டு விளக்கம்:**

❖ ரிக்கார்டோவின் ஒப்புமைச் செலவு கோட்பாட்டினை அமெரிக்காவும் இந்தியாவின் துணி மற்றும் கோதுமை உற்பத்தி செலவுகளை கற்பனை உதாரணங்களாக கொண்டு புரிந்து கொள்ளலாம்.


R.THAIAMPOORAJAN, M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

ஒப்புமைச் செலவு
(ஒரு அலகு உற்பத்தி செய்ய தேவைப்படும் உழைப்பின் அளவு)

| நாடு | துணி | கோதுமை | உள்நாட்டு பரிமாற்ற விகிதம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 100 | 120 | 1 மூட்டை கோதுமை = 1.2 மீட்டர் துணி |
| இந்தியா | 90 | 80 | 1 மூட்டை கோதுமை = 0.88 மீட்டர் துணி |



வரைபடம் 7.2

குறிப்பு: வளைகோட்டின் சாய்வுகள் வேறுபாடனவை

**விளக்கம்:**

- ❖ பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபடாமல் இந்தியாவும் அமெரிக்காவும் துணி மற்றும் கோதுமையை அவரவர்களே உற்பத்தி செய்ய இந்தியா 170 அலகு உழைப்பையும் அமெரிக்கா 220 அலகு உழைப்பையும் பயன்படுத்த வேண்டி வரும்.
- ❖ பன்னாட்டு வாணிகத்தை அனுமதித்தால் 80 அலகு உழைப்பாளர்களைக் கொண்டு உற்பத்தி செய்த ஒரு மூட்டை கோதுமையை அமெரிக்காவிடம் கொடுத்து 90 அலகு உழைப்பு தேவைப்படுகிற ஒரு மீட்டர் துணியை வாங்கிவிட முடியும்.
- ❖ ஆக இந்தியா 160 அலகு மட்டுமே உழைப்பைப் பயன்படுத்தி இரண்டு மூட்டை கோதுமையை உற்பத்தி செய்து அதில் ஒரு மூட்டை கோதுமையை அமெரிக்காவிடம் ஒரு மீட்டர் துணி பரிமாறிக் கொள்ளலாம். இதுவே பன்னாட்டு வாணிபத்தால் இந்தியாவுக்கு கிடைக்கும் பலனாகும்.
- ❖ பத்து அலகு உழைப்பு மிச்சப்படுவதே பன்னாட்டு வாணிகத்தின் பலன் என்கிறார் ரிக்கார்டோ.
- ❖ இதே போன்று 200 அலகு உழைப்பை மட்டுமே உற்பத்தியில் ஈடுபடுத்தி அமெரிக்கா துணி ஒரு மீட்டர் கோதுமை ஒரு மூட்டையை பெறமுடியும். துணி ஒரு மீட்டர் கோதுமை ஒரு மூட்டை உற்பத்தி செய்தால் 220 அலகு உழைப்பு தேவைப்படும்.
- ❖ அமெரிக்காவுக்கு 20 அலகு உழைப்பு மிச்சப்படுவதையே பன்னாட்டு வாணிகத்தின் பலன் எனலாம்.

**திறனாய்வு:**

1. உழைப்பு செலவு அடிப்படையில் விவரிக்கப்பட்டுள்ள கோட்பாடு உண்மையை பிரதிபலிக்கவில்லை.
2. பல்வேறு நாட்டுத் தொழிலாளிகள் ஒரே அளவு திறன் பெற்றவர்கள் அல்லர்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**37.புதிய பன்னாட்டு வாணிகக் கோட்பாட்டினை விவாதிக்கவும். (7.5.4)**

**புதிய பன்னாட்டு வாணிகக் கோட்பாடு:**

**விளக்கியவர்:** சுவீடன் நாட்டு பொருளியல் அறிஞர் **இலி ஹெக்சர்** (1919).

**எடுகோள்கள்:**

1.இரண்டு நாடுகள் இரண்டு பொருட்களை உற்பத்தி செய்கின்றன. (2 X 2 மாதிரி)

2.நாடுகள் வெவ்வேறு அளவுகளில் உற்பத்திக் காரணிகளைப் பெற்றுள்ளது.

3.பொருட்கள் அவற்றின் உற்பத்தியில் உற்பத்தி காரணியின் தேவைப்படும் அளவு தீவிரத்தன்மையை பொறுத்து வகைப்படுத்தப்படுகிறது.

4.இரண்டு நாடுகளும் ஒரே விதமான உற்பத்தி தொழில் நுட்பத்தை பயன்படுத்துகின்றன.

5.இரண்டு நாடுகளும் ஒரே இயல்பான தேவையை பெற்றுள்ளன.

6.இரண்டு நாட்டின் பொருள் மற்றும் உற்பத்தி காரணிகளுக்கான சந்தையில் நிறைவுப் போட்டி நிலவுகிறது.

உதாரண விளக்கம்

| விபரங்கள் | இந்தியா | அமெரிக்கா |
|---|---|---|
| உழைப்பின் அளிப்பு | 50 | 24 |
| மூலதனத்தின் அளிப்பு | 40 | 30 |
| மூலதன உழைப்பு விகிதம் | 40/50 = 0.8 | 30/24 = 1.25 |

இந்தியா அதிக மூலதனம் உள்ள நாடு போன்று தோன்றினாலும் அமெரிக்காவே மூலதனம் மிகுந்த நாடாகும் என்பது அமெரிக்காவின் உழைப்பு விகிதமான 1.25 இந்தியாவின் 0.8 விட அதிகமிருப்பது புரிகிறது.

கீழ்க்கண்ட வரைபடம் புதிய வாணிபக் கோட்பாட்டின்படி உலக வாணிகத்தில் பொருள் கலவை எப்படி இருக்கும் என விளக்குகிறது.






Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**38.ஜேக்கப் வைனரால் வடிவமைக்கப்பட்ட வாணிபவீத வகைகளை விவரி. (7.7.3)**

**ஜேக்கப் வைனரால் வடிவமைக்கப்பட்ட வாணிபவீத வகைகள்:**

உற்பத்தி காரணிகள் பரிமாற்றத்தின் அடிப்படையில் இரண்டு வகையான வாணிப வீதங்கள் உள்ளன. அவை இரண்டும் கீழே குறிக்கப்பட்டுள்ளன.

**1.ஒற்றைக் காரணி வாணிப வீதம்:**

- ஜேக்கப் வைனர் ஒற்றைக் காரணி வாணிப வீதத்தை வடிவமைத்தார். பண்ட பரிமாற்ற வாணிப வீதத்தை விரிவுபடுத்தி இந்த வாணிப வீத சூத்திரத்தை உருவாக்கினார்.
- ஏற்றுமதி விலை குறியீட்டெண்ணிற்கும் இறக்குமதி விலை குறியீட்டெண்ணிற்கும் இடையேயான விகிதத்தில் ஏற்றுமதிக்கான உற்பத்தித் திறன் குறியீட்டெண்ணின் மதிப்பினால் மாற்றம் செய்யப்பட்ட வீதமே ஒற்றைக் காரணி வீதமாகும்.

**சூத்திர வடிவம்:**

$$T_f = (P_x / P_m)\ F_x$$

இங்கு $T_f$ = ஒற்றைக் காரணி வாணிப வீதம்

$P_x$ = ஏற்றுமதி விலை குறியீட்டெண்

$P_m$ = இறக்குமதி விலை குறியீட்டெண்

$F_x$ = ஏற்றுமதிக்கு பொருள் உற்பத்தி செய்யும் தொழில் துறையின் உற்பத்தி திறன் குறியீட்டெண் ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யபப்பட்ட பொருட்களின் மொத்த எண்ணிக்கையை இந்தகாரணிகளுக்கு செய்த மொத்த செலவால் வகுத்துப் பெறுவதே உற்பத்தித் திறன் குறியீடு.

**2.இரட்டைக் காரணி வாணிப வீதம்:**

**வடிவமைத்தவர்:** ஜேக்கப் வைனர்

**சூத்திர வடிவம்:**

$$T_{ff} = (P_x / P_m)\ (F_x / F_m)$$

இங்கு $T_{ff}$ = இரட்டைக் காரணி வாணிப வீதம்

$P_x$ = ஏற்றுமதி விலை குறியீட்டெண்

$P_m$ = இறக்குமதி விலை குறியீட்டெண்

$F_x$ = ஏற்றுமதி பொருள் உற்பத்தி தொழில் உற்பத்தி திறன் குறியீட்டெண்

$F_m$ = இறக்குமதி பொருள் உற்பத்தி செய்யும் நாட்டில் அத்துறையின் உற்பத்திதிறன் குறியீட்டெண் .



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**39.அயல்நாட்டுச் செலுத்துநிலையின் கூறுகளை அட்டவணை வடிவில் விளக்குக. (7.8.3)**

**அயல்நாட்டுச் செலுத்துநிலையின் கூறுகள்:**

| **நடப்பு கணக்கு** | **மூலதன கணக்கு** |
|---|---|
| பன்னாட்டு பண்ட பரிவர்த்தனைகள், பன்னாட்டு பணி பரிவர்த்தனைகள், உற்பத்தி காரணி வருவாய் மற்றும் பரிசுத் தொகை பரிவர்த்தனைகள் இந்த கணக்கின் கீழ் பதியப்படுகிறது. | வெளிநாட்டுக்கடன், அந்நிய முதலீடு, பன்னாட்டுப் பண மற்றும் நிதிச் சந்தை விற்றல் வாங்ககல் பரிவர்த்தனைகள் இந்த கணக்கின் கீழ் பதிவு செய்யப்படுகிறது. |
| **மைய வங்கி நிதி சொத்து கையிருப்புக் கணக்கு:** மைய வங்கியின் கையிருப்பில் உள்ள செலவாணி சொத்துக்களின் பரிவர்த்தனை இந்த கணக்கில் பதிவு செய்யப்படுகிறது. உபரி கையிருப்புக் கணக்கில் பற்றாக்குறை கையிருப்பிலிருந்து எடுத்து செலவிடப்படுகிறது. | |

**40.அயல்நாட்டுச் செலுத்துநிலை சமமின்மையின் வகைகளை விவரி. (7.8.5)**

**அயல்நாட்டுச் செலுத்துநிலை சமமின்மையின் வகைகள்:**

**மூன்று வகைகள்:**

1. சுழற்சி சமனற்ற நிலை
2. நீண்ட கால சமனற்ற நிலை
3. கட்டமைப்பு சமனற்ற நிலை

**1.சுழற்சி சமனற்ற நிலை:**

- ❖ வாணிப சுழற்சியின் விளைவாக எழும் அயல்நாட்டு செலுத்து சமனற்ற நிலையை சுழற்சி சமனற்ற நிலை என்கிறோம். இரண்டு காரணங்களால் இது நிகழ்கிறது.

a. முதலாவது, நாடுகளின் வாணிப சுழற்சியின் வெவ்வேறு கட்டங்களிலிருப்பது
b. இரண்டாவது, நாடுகளுக்கிடையே தேவை நெகிழ்வு அளவு மாறுபடுவது.

**2.நீண்டகால சமனற்ற நிலை:**

- ❖ நாடுகள் பொருளாதார வளர்ச்சி படிநிலைகளின் முன்னேறும் பொழுது நீண்டகால தலைகீழ் மாற்றங்கள் நிகழ்வதால் உண்டாகும்.
- ❖ அயல்நாட்டு செலுத்து சமனற்ற நிலையை நீண்ட கால சமனற்ற நிலை எனலாம்.
- ❖ இந்தியாவில் 1951லிருந்தே இந்த சூழ்நிலை உருவாகிறது.

R.THALAMPOORAJAN,M.A.,B.Ed.,M.Phil., www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**3.கட்டமைப்பு சமனற்ற நிலை:**

- ❖ நாட்டின் பொருளாதார கட்டமைப்பு மாற்றங்களினால் நிகழும் அயல்நாட்டு செலுத்து சமநிலையே கட்டமைப்பு சமனற்ற நிலையாகும்.
- ❖ மாற்று வழங்கல் ஆதாரங்களைக் கண்டுபிடித்தல், செயற்கையான பதிலீட்டுப் பொருட்களை கண்டுபிடித்தல், உற்பத்தி வளங்கள் தீர்ந்துபோதல் அல்லது போக்குவரத்து வழிகளும் செலவும் மாற்றமடைதல் போன்றவையே பொருளாதார கட்டமைப்பு மாற்றம் என்கிறோம்.

**41.பணமாற்று வீதம் எவ்வாறு இரண்டு முறைகளில் நிர்ணயமாகிறது என்பதை உதாரணத்துடன் விளக்குக. (7.9.6)**

**பண மாற்று வீதம் நிர்ணய முறைகள்:**

பணமாற்று வீதம் இரண்டு முறைகளில் நிர்ணயமாகிறது.

1. நிலையான பண மாற்று வீதம்
2. மாறுபடும் நிலையற்ற பண மாற்று வீதம்

**1.நிலையான பண மாற்று வீதம்:**

- ❖ மாறாத பணமாற்ற வீதத்தை நிலையான பண மாற்று வீதம் எனலாம்.
- ❖ ஒரு நாட்டின் அரசாங்கம் மைய வங்கியின் மூலம் பணமாற்று வீதம் நிர்ணயித்தால் அதை மாறாத பண மாற்று வீதம் என்கிறோம்.

**வேறு பெயர்:** நிலைநிறுத்தப்பட்ட பண மாற்று வீதம்

**உதாரணம்:**

தங்க மாற்று பன்னாட்டு பணவியல் முறையில் நாடுகளின் பணமாற்று மதிப்பு தங்கத்தின் அளவில் நிர்ணயிக்கப்பட்டது.

**2.மாறுகின்ற/நிலையற்ற பணமாற்று வீதம்:**

- ❖ அந்நிய செலாவணி சந்தை விசைகளான மாறுகின்ற அந்நிய செலாவணிக்கான தேவையும் அளிப்பும் பணமாற்று வீதத்தை நிர்ணயிக்கும் முறை மாறுகின்ற பணமாற்று வீதமாகும்.

**வேறு பெயர்:** மிதக்கும் பணமாற்று வீதம்.

R.THALAMPOORAJAN,M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net

**42.பொருளாதார முன்னேற்றம் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கும் இடையேயுள்ள தொடர்பினை விளக்குக. (7.10)**

**பொருளாதார முன்னேற்றம் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கும் இடையேயுள்ள தொடர்பு:**

1.பன்னாட்டுப் பொருளாதாரத்தில் அன்னிய நேரடி முதலீடு முக்கிய பங்கு வகிக்கிறது.

2.வெளிநாட்டு நேரடி மூலதனமும் பன்னாட்டு வணிகமும் மிகவும் நெருக்கமுடையவை.

3.வளரும் நாடுகளின் இயற்கைவளங்கள் மற்றும் தோட்டப்பயிர் துறைகளில் மிக அதிக அளவு வெளிநாட்டினர் முதலீடு செய்து பன்னாட்டு வாணிகத்தின் வளர்ச்சிக்கு துணைபுரிந்தனர்.

4.வெளிநாட்டு நேரடி முதலீட்டுடன் இயந்திரங்கள், தொழில்நுட்பம், இடுபொருட்கள் மற்றும் அரிதான நுகர்வு பொருட்கள் போன்றவையும் ஒரு நாட்டுக்குள் வரும்.

5.ஏற்றுமதி செய்து ஈட்டிய அன்னிய செலாவணி இறக்குமதி மீது செலவழிக்க போதவில்லையென்றால் வெளிநாட்டு நேரடி மூலதனத்தைக் கொண்டு ஈடு செய்ய முடியும்.

6.அன்னிய செலாவணி பற்றாக்குறையை போக்குதல், வேலைவாய்ப்பை உருவாக்குதல்.

7.பொருளாதார வளர்ச்சி வேகத்தை அதிகரித்தல் போன்ற காரணங்களுக்காகவும் வெளிநாட்டு நேரடி முதலீடு விரும்பப்படுகிறது.

R.THALAMPOORANAN M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## பயிற்சி வினாக்கள்

**1.தூய வாணிபக் கோட்பாடு என்றால் என்ன? (7.3)**

**2.வாணிகம் என்றால் என்ன? (7.4)**

**3.உள்நாட்டு வாணிகம் என்றால் என்ன? (7.4.1)**

**4.தடையில்லா வாணிபக் கோட்பாடுகள் எவை? (7.5.2)**

**5.தடையில்லா வாணிபம் சரிசெய்த கோட்பாடுகள் எவை? (7.5.2)**

**6.டேவிட் ரிக்கார்டோ பற்றி குறிப்பு வரைக. (7.5.3)**

**7.இலி ஹெக்சர் பற்றி குறிப்பு வரைக. (7.5.4)**

**8.பன்னாட்டு வாணிபத்தின் பொதுவான நன்மைகள் யாவை? (7.6)**

9.**வாணிப வீதத்தின் வகைகள் யாவை? (7.7.2)**

**10.அயல்நாட்டுச் செலுத்துநிலை சமமின்மைக்கான காரணங்களைக் கூறுக. (7.8.6)**

**11.அயல்நாட்டுச் செலுத்துநிலை சமமின்மையை நீக்கும் வழிமுறைகள் யாவை? (7.8.7)**

**12.இந்தியாவில் செலாவணி மதிப்பு குறைப்பு நிகழ்வுகளைக் குறிப்பிடுக. (7.8.7)**

**13.அந்நியச் செலாவணி (FOREX) வரைவிலக்கணம் தருக. (7.9.1)**

**14.சமநிலை பணமாற்றுவீதம் வரைவிலக்கணம் தருக. (7.9.4)**

**15.பணமாற்றுவீத வகைகள் யாவை? (7.9.7)**

**16.பணமாற்றுவீதங்களை உதாரணத்துடன் விளக்குக. (7.9.7)**

**17.பணமாற்று வீதத்தை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை? (7.9.8)**

18.**வெளிநாட்டு நிதி மூலதனம் என்றால் என்ன? (7.10.1)**

19.**வெளிநாட்டு நிதி நிறுவன முதலீடு (FII – Foreign Institutional Investment) என்றால் என்ன? (7.10.2)**

20.**வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நன்மைகள் யாவை? (7.10.3)**

**21.வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் தீமைகள் யாவை? (7.10.4)**

**22.வெளிநாட்டு மூலதனத்தால் பலனடைந்த இந்தியத் துறைகள் யாவை? (7.10.5)**

**23.வெளிநாட்டு மூலதனம் தடை செய்யப்பட்ட இந்தியத் துறைகள் யாவை? (7.10.5)**

**24.வேறுபடுத்துக. முழுச் செலவு வேறுபாடுகள் - ஒப்புமைச் செலவு வேறுபாடுகள்**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# அத்தியாயம் 8: பன்னாட்டு பொருளாதார அமைப்புகள்

1. பன்னாட்டு பண நிதியம் கீழ்க்கண்ட இந்த மாநாட்டில் உருவாக்கப்பட்டது? **பிரிட்டன் வூட்ஸ் மாநாடு**

2. பன்னாட்டு பண நிதியத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம் **வாஷிங்டன் டி.சி.**

3. ஐ.பி.ஆர்.டி இவ்வாறாகவும் அழைக்கப்படுகிறது **உலக வங்கி**

4. சிறப்பு எடுப்பு உரிமையின் மற்றொரு பெயர் **தாள் தங்கம்**

5. நீண்டகாலக் கடன் வழங்கும் நிதி நிறுவனம் **உலக வங்கி.**

6. கீழ்க்கண்ட நாடுகள் எது சார்க் அமைப்பின் உறுப்பினர் இல்லை? **ஜப்பான்**

7. பன்னாட்டு மேம்பாட்டு அமைப்பு கீழ்கண்ட இதன் துணை அமைப்பாகும் **உலக வங்கி**

8. காப்புரிமை, பதிப்புரிமை, வாணிக ரகசியம் போன்றவை **வணிகம் சார் சொத்துரிமை** உடன் தொடர்புடையவை.

9. உலக வர்த்தக அமைப்பின் முதலாவது அமைச்சர்கள் அளவிலான மாநாடு நடைபெற்ற இடம் **சிங்கப்பூர்**

10. ஆசியான் கூட்டங்கள் **3** ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும்.

11. கீழ்க்கண்டவைகளில் எது சார்க் உறுப்பினர் நாடு அல்ல? **சீனா**

12 சார்க் உச்சி மாநாடு **2** ஆண்டுகளுக்கொருமுறை நடைபெறுகிறது.

13. ஆசியான் அமைப்பின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம் **ஜகார்த்தா.**

14. பிரிக் (BRIC) என்ற சுருக்கச் சொல் கோர்க்கப்பட்ட ஆண்டு **2001**

15. ஏசியான் அமைப்பு நிறுவப்பட்ட ஆண்டு **1967**

16. பத்தாவது பிரிக்ஸ் அமைப்பின் உச்சி மாநாடு ஜூலை 2018ல் நடைபெற்ற இடம் **ஜோகனஸ் பர்க்.**

17. புதிய மேம்பாட்டு வங்கி இந்த அமைப்புடன் தொடர்புடையது **பிரிக்ஸ்**

18. ஆசியான் விவாதத்தில் பங்கெடுக்கும் ஆறு நாடுகளில் சேராத நாடு **வடகொரியா**

19. சார்க் வேளாண் தகவல் மையம் துவங்கிய ஆண்டு **1988**

20. பெனிலக்ஸ் (BENELUX) என்பது இதன் வடிவமாகும். **சுங்கவரி ஒன்றியம்**

P.THALAMPOORAJAN,M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**21.சிறப்பு எடுப்புரிமைகள் என்பதன் பொருளை எழுதுக. (8.2.3)**

**சிறப்பு எடுப்புரிமைகள்:**

- ❖ பன்னாட்டு நீர்மைத்தன்மையை 1969ல் நிதியம் பன்னாட்டு இருப்புகளை ஏற்படுத்தியது.
- ❖ இதன் மூலம் சிறப்பு எடுப்புரிமைகள் பன்னாட்டு மதிப்பளவைகளாகவும் செலுத்து நிலையாகவும் செயல்படுகின்றது.

**22.ஆசியானின் இரண்டு நோக்கங்களைக் குறிப்பிடுக. (8.7.1)**

**ஆசியானின் இரண்டு நோக்கங்கள்:**

1.பொருளாதார வளர்ச்சி, சமூக வளர்ச்சி மற்றும் பண்பாட்டு மாற்றத்தை துரிதப்படுத்துவது.

2.ஐ.நா. சபையின் கொள்கைகளைக் கடைப்பிடித்து தென்கிழக்காசியப் பகுதியில் அமைதி மற்றும் உறுதியான அரசியல் சூழ்நிலையை மேம்படுத்துவது.

3.அரசுத் துறையில் தணிக்கையில் உள்ள அறிவையும் அனுபவத்தையும் பரிமாறிகொள்வதன் மூலம் உறுப்பினர்களை ஒன்றிணைத்து செயல்பட வைப்பது.

4.கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக்கு பொருத்தமான சூழ்நிலையையும் வசதிகளையும் உறுப்பு நாடுகளில் அமைத்துக் கொடுப்பது.

5.தகவல் மையமாக செயல்படுதல் மற்றும் மற்ற பன்னாட்டு நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட வசதிகளைச் செய்தல்.

**23.ஐபிஆர்டி யின் ஏதேனும் இரண்டு கடன் திட்டங்களின் பெயர்களைச் சுட்டிக் காட்டுக. (8.3.1)**

**ஐபிஆர்டி யின் கடன் திட்டங்களின் பெயர்கள்:**

1.வங்கியின் இருப்பில் உள்ள சொந்த நிதியிலுருந்து கடன் வழங்குவது.
2.கடன் நிதியிலிருந்து கடன் வழங்குவது.
3.ஈட்டுறுதி கடன் பெற்றுத் தருவது.

**24.பொது சந்தை வரையறு. (8.1)**

**பொது சந்தை:**

- ❖ புவியின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் அமைந்துள்ள நாடுகள் தடையற்ற வாணிகம் மற்றும் உற்பத்திக் காரணிகள் இடப்பெயர்வுக்காக அமைக்கும் அமைப்பே பொது சந்தை ஆகும்.



R.THALAMPOORANAM.M.A.B.Ed.,M.Phil., www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**25.தடையற்ற வாணிகப் பகுதி என்றால் என்ன? (8.1)**

**தடையற்ற வாணிகப் பகுதி:**

- ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட உறுப்பினர் நாடுகளின் மண்டலம், வாணிகத் தடைகளை குறைக்க ஒத்துழைக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே ஒப்பந்தம் போடப்படுகிறது.

**26.எங்கு மற்றும் எப்பொழுது சார்க் தலைமை அலுவலகம் துவங்கப்பட்டது? (8.6)**

**சார்க் தலைமை அலுவலகம்:**

நேபாள் தலைநகரம் காத்மண்டு

**துவங்கிய ஆண்டு:**

டிசம்பர் 8, 1985

**27.உலக வங்கிக் குழுமத்தின் கீழ் செயல்படும் இரண்டு துணை நிறுவனங்களின் பெயர்களை குறிப்பிடுக. (8.3)**

**உலக வங்கிக் குழுமத்தின் கீழ் செயல்படும் துணை நிறுவனங்கள்:**

1.மறுகட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான பன்னாட்டு வங்கி
2.பன்னாட்டு மேம்பாட்டு அமைப்பு
3.பன்னாட்டு நிதிக் கழகம்
4.பன்முக முதலீட்டு ஒப்புறுதி முகமை
5.முதலீட்டு பிரச்சனைகளை தீர்ப்பதற்கான பன்னாட்டு மையம்

**28.பொருளாதார ஒருங்கிணைப்பின் பல்வேறு வடிவங்களைக் குறிப்பிடுக. (8.5)**

**பொருளாதார ஒருங்கிணைப்பின் பல்வேறு வடிவங்கள்:**
**1.தடையற்ற வாணிகப்பகுதி:**
இரண்டு அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே ஒப்பந்தம் போடப்படுகிறது.
**உதாரணம்:** SAFTA, EFTA
**2.சுங்க வரி ஒன்றியம்:**
பொது வரி விதிக்கும் அமைப்பு சுங்கவரி ஒன்றியம் ஆகும்.
**உதாரணம்: BENELUX** (பெல்ஜியம், நெதர்லாந்து மற்றும் லக்ஸம்பர்க்)
**3.பொதுச் சந்தை:**
தடையற்ற வாணிபத்திற்காக அமைக்கப்படும் அமைப்பு ஆகும்.
**உதாரணம்:** ஐரோப்பிய பொது அங்காடி
**4.பொருளாதார ஒன்றியம்:**
பொதுச் சந்தை + சுங்கவரி ஒன்றியம் = பொருளாதார ஒன்றியம்
**உதாரணம்:** ஐரோப்பிய பொருளாதார ஒன்றியம்

R.THALAMPOORANAN.M.A.,B.Ed.,M.Phil., www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**29.வாணிக ஒத்துழைப்புத் தொகுதிகள் என்றால் என்ன? (8.5)**

**வாணிக ஒத்துழைப்புத் தொகுதிகள்:**

- சில நாடுகள் வாணிகத்தில் போட்டியைத் தவிர்க்க பிறநாட்டுப் பொருளாதாரத்துடன் தங்களுடைய பொருளாதாரத்தை இணைத்து புதிய வாணிக வாய்ப்புகளை உருவாக்கி கொள்கிறது.
- சமூக நன்மைக்காக நாடுகள் அமைக்கும் வாணிப தொகுதிகள் பரஸ்பர நல்லிணக்கத்திற்கு உதவுகிறது.

**30.ஐஎம்எப் – ன் கடன் வழங்கும் திட்டங்களில் ஏதேனும் மூன்றினைக் குறிப்பிடுக. (8.2.3)**

**ஐஎம்எப் – ன் கடன் வழங்கும் திட்டங்கள்:**

**1.விரிவாக்கப்பட்ட நிதி வசதி:**

- அடிப்படை கடன் தொகைக்குமேல் அதிகமாக கடன் பெற அனுமதிப்பதே விரிவாக்கப்பட்ட கடன் திட்டம்.

**2.தாங்கிருப்பு வசதி:**

- உணவுப் பொருள் விலை கட்டுப்படுத்தும் நோக்கத்தில் வழங்கப்படும் கடனே தாங்கிருப்பு வசதிக் கடன்.

**3.துணை நிலை வசதி:**

- அயல்நாட்டு செலுத்து நிலை சிரமங்களிலிருந்து விடுபட நிதியம் உதவும்.

**4.அடிப்படைக் கடன் வசதி. 5.ஈடுசெய் நிதி வசதி.**

**6.கட்டமைப்பு சரி செய்தல் வசதி.**

**31.பல தரப்பு ஒப்பந்தம் என்றால் என்ன? (8.5)**

**பல தரப்பு ஒப்பந்தம்:**

- பன்னாட்டு வாணிக ஒத்துழைப்புத் தொகுதிகள் பன்னாட்டு வாணிகத்தில் ஒரே குழுவாக ஒன்றிணைந்து செயல்படும் நாடுகளின் கூட்டமைப்பு வழக்கமாக தடையற்ற வாணிக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு செயல்படுபவர்கள்.

**32.பிரிக்ஸ் மாநாடு 2018ன் நிகழ்ச்சி நிரல் பற்றி எழுதுக. (8.8)**

**பிரிக்ஸ் மாநாடு 2018ன் நிகழ்ச்சி நிரல்:**

- பத்தாவது உச்சி மாநாடு தென் ஆப்பிரிக்காவில் ஜூலை 2018ல் நடைபெற்றது.
- உள்ளடக்கிய வளர்ச்சி, வாணிகப் பிரச்சனைகள், உலகளாவிய அரசு நிர்வாகம், பகிரத்தக்க வளமை, நாடுகளின் அமைதி மற்றும் பாதுகாப்பு ஆகியவையே இந்த உச்சி மாநாட்டின் விவாதத் தலைப்புகள் ஆகும்.



R.THALAMPOORAJAN,M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net

**33.சார்க்கின் பணிகளை சுருக்கமாக கூறுக. (8.6.2)**

**சார்க் தலைமை அலுவலகம்:**

நேபாள் தலைநகரம் காத்மண்டு

**துவங்கிய ஆண்டு:** டிசம்பர் 8, 1985

**சார்க்கின் பணிகள்:**

1. தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்பை பராமரித்தல்
2. உறுப்பினர் நாடுகளின் பொதுவான பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதல்
3. உறுப்பினர் நாடுகளுக்கிடையிலான உறவை மேம்படுத்துதல்.
4. வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மூலம் ஏழ்மையை ஒழிப்பது.
5. பயங்கரவாத செயல்களை தடுப்பது.

**34.ஆசியான் அமைப்பின் சாதனைகளைப் பட்டியலிடுக. (8.7.2)**

**ஆசியான் அமைப்பின் சாதனைகள்:**

1. உறுப்பு நாடுகளின் வணிக நிறுவனங்களின் போட்டித் திறனை மேம்படுத்துவது மற்றும் பொருளாதார மேம்பாட்டு இடைவெளியை குறைப்பது.
2. உறுப்பு நாடுகளுக்கு சந்தை மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை பெற்றுத் தருவது.
3. தொழில் மற்றும் வணிகம் உள்ளிட்ட பல துறைகளில் ஒத்துழைப்பை வளர்த்தல்.

**35.பன்னாட்டுப் பணநிதியத்தின் நோக்கங்களை விளக்குக. (8.2.1)**

**பன்னாட்டுப் பணநிதியத்தின் நோக்கங்கள்:**

1. உறுப்பு நாடுகளிடையே பன்னாட்டு பரிவர்த்தனையில் பணவியல் ஒத்துழைப்பை மேம்படுத்துவது.
2. பன்னாட்டு வாணிபம் வேகமாகவும் சமச்சீராகவும் வளர உதவுவது.
3. உறுப்பு நாடுகள் போட்டி போட்டுக் கொண்டு பண மதிப்பிறக்கம் செய்வதை தடுத்து நாணய மாற்று விகிதம் நிலையாக இருக்கச் செய்தல்.
4. உறுப்பு நாடுகள் விதிக்கும் செலாவணிக் கட்டுப்பாடுகளை குறைத்தல் அல்லது நீக்குதல்.
5. இருதரப்பு வாணிக ஒப்பந்தங்களுக்கு பதிலாக அனைத்து நாடுகளுக்கு இடையேயான பலதரப்பு நடப்பு கணக்கு மற்றும் பண பரிவர்த்தனை முறையை நிறுவுவது.
6. வளர்ந்த நாடுகள் வளரும் நாடுகளில் மூலதனம் செய்வதை எளிதாக்குவதன் மூலம் வளரும் நாடுகளின் உற்பத்தி வளங்களையும் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துவது.
7. பன்னாட்டு நீர்மைப் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பது.

R.THALAMPOORANJAN M.A.,B.Ed.,M.Phil., www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**36.உலக வங்கியின் பணிகளை வெளிக் கொணர்க. (8.3.2)**

**உலக வங்கி:**

**துவங்கப்பட்ட ஆண்டு:** 1944

**வேறுபெயர்:** மறுகட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கானபன்னாட்டு வங்கி

**உலக வங்கியின் பணிகள்:**

**1.உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் முதலீட்டுக்கான கடன் உதவி:**

- ❖ உறுப்பு நாடுகளின் நில எல்லைக்குட்பட்ட பகுதிகளின் மறுகட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கு உதவி செய்யும் பணியை உலக வங்கி செய்கிறது.
- ❖ பின் தங்கிய நாடுகளில் உற்பத்தி வளர்ச்சிக்கான திட்டங்களுக்கு உதவுகின்றது.

**2.பன்னாட்டு வாணிகத்தின் சரிவிகித வளர்ச்சி:**

- ❖ பன்னாட்டு கடன் மூலதனம் வழங்கி உறுப்பு நாடுகள் அனைத்தும் சரிவிகித பன்னாட்டு வாணிப நீண்டகால வளர்ச்சியடைய உதவும் பணியை வங்கி செய்கிறது.
- ❖ இதன் விளைவாக உறுப்பு நாடுகளின் அயல்நாட்டுச் செலுத்துநிலை சமநிலையை அடையும்.

**3.கடன் மற்றும் ஈட்டுறுதி வழங்குதல்:**

- ❖ முக்கியமான திட்டங்களுக்கு கடன் வழங்குவது மற்றும் பிற வழிகளில் கடன் பெற ஈட்டுறுதி வழங்குவது ஆகிய பணிகளையும் வங்கி செய்கிறது.

**4.வெளிநாட்டுத் தனியார் முதலீட்டிற்கு ஊக்கமளித்தல்:**

- ❖ இந்தப்பணியின் மூலம் தனியார் மூலதனத்துடன் ஒன்று சேர்ந்து சொந்த நிதியிலிருந்து மட்டும் கடன் வழங்காமல் கடன் நிதியிலிருந்தும் கடன் வழங்க முடிகிறது.

**5.தொழில் நுட்ப சேவைகள்:**

- ❖ உலக வங்கி வாஷிங்டனில் அமைந்துள்ள பணியாளர் கல்லூரி நிபுணர்களைக் கொண்டு தொழில்நுட்ப ஆலோசனைகளையும் உறுப்பு நாடுகளுக்கு வழங்குகிறது.

R.THALAMPOORANAN,M.A.,B.Ed.,M.Phil., www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**37.இந்திய சமூக பொருளாதார மேம்பாட்டில் W.T.O – ன் பங்கினை விவாதிக்க. (8.4.4)**

**இந்தியாவும் பன்னாட்டு வர்த்தக அமைப்பும்:**

பன்னாட்டு வர்த்தக அமைப்பு செயல்பட தொடங்கிய ஆண்டிலிருந்தே இந்தியா அதன் உறுப்பு நாடாகும்.

பன்னாட்டு வர்த்தக நிறுவனத்தின் உறுப்பினரானதால் இந்தியாவுக்கு கீழ்கண்ட விதங்களில் நன்மைகளைப் பெற்றுள்ளது.

1. இறக்குமதி வரி குறைக்கப்பட்டதால் இடு பொருட்கள், உதிரி பாகங்கள் மற்றும் இயந்திரங்கள் இந்தியாவுக்கு குறைவான விலையில் அதிகமாக கிடைத்துள்ளது.
2. நாடுகளுடன் தனித்தனியே ஒப்பந்தம் போடாமல் பலநாடுகளில் இந்தியா பொருட்களை விற்பனை செய்ய முடிகிறது.
3. குறைந்த செலவில் உயர்வகை தொழில்நுட்பம் கிடைத்துள்ளது.
4. பன்னாட்டு பரிவர்த்தனை தொடர்புள்ள புகார்களுக்கு எளிதில் தீர்வு கிடைக்கும் நிலை உருவாகியுள்ளது.
5. பரந்த சந்தை தகவலிலிருந்து இந்திய ஏற்றுமதியாளர்கள் பலனடைகின்றனர்.

**38.குறிப்பு எழுதுக. அ) சார்க் (8.6.1) ஆ) ப்ரிக்ஸ் (8.8)**

**அ) சார்க் (அல்லது) தெற்காசிய மண்டல ஒத்துழைப்பு சங்கம்:**

**துவங்கப்பட்ட நாள்:** ஜனவரி 16, 1987

**தலைமை இடம்** : நேபாள் தலைநகரம் காட்மண்டு

**உறுப்பு நாடுகள்** : இந்தியா, வங்காளதேசம், பூடான், மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை.

**எட்டாவது இணைந்த நாடு:** ஆப்கானிஸ்தான் (ஏப்ரல் 2007)

**நோக்கங்கள்:**

I. தெற்காசிய மக்களின் பொதுநலம் காத்தல் மற்றும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல்.
II. தெற்காசிய மண்டலத்தில் பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு வளர்ச்சியை துரிதப்படுத்துதல்.
III. தெற்காசிய நாடுகளின் கூட்டு தற்சார்பை உறுதிப்படுத்துதல்.
IV. மண்டலத்தில் உள்ள நாடுகள் ஒருவருக்கொருவர் மீது நம்பிக்கை ஏற்பட, புரிந்து கொள்ள மற்றும் பிரச்சினைகளை உணர்ந்து கொள்ள இயன்றதைச் செய்தல்.
V. பொருளாதார, சமூக, பண்பாடு, தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் துறைகளில் ஒருவருகொருவர் உதவிக்கொள்ளுதல் மற்றும் செயல் திறத்துடன் ஒத்துழைத்தல்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

VI. உறுப்பினரல்லாத வளரும் நாடுகளுடன் ஒத்துழைப்பை உறுதிப்படுத்துதல்.

VII. ஒரே நோக்கங்களுடன் செயல்படும் பிராந்திய மற்றும் உலக நாடுகளுடன் ஒத்துழைப்பு நல்குதல்.

**ஆ) பிரிக்ஸ் நாடுகள்:**

**உறுப்பு நாடுகள்:** பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆப்பிரிக்கா

**தலைமையிடம்** : சீனாவின் ஷாங்காய் நகரம்

**வங்கி** : புதிய மேம்பாட்டு வங்கி **(The New Development Bank)**

**உச்சி மாநாடுகள் துவங்கப்பட்ட ஆண்டு:** 2009

**முதல் மாநாடு** : ரஷ்யா தலைநகர் மாஸ்கோ

**நான்காவது மாநாடு:** இந்தியா 2012

**எட்டாவது மாநாடு:** இந்தியா 2016

**நோக்கங்கள்:**

1. வணிக ஒத்துழைப்பு தொகுதியை அமைத்து ஒத்துழைப்பை மேம்படுத்துதல்.
2. பன்னாட்டு பரிவர்த்தனைகளில் அமெரிக்க நாட்டுப் பணமான டாலருக்குப் பதிலாக வேறு நாட்டுப் பணத்தை புழக்கத்துக்குக் கொண்டுவர தேவையானவற்றைச் செய்தல்.
3. மண்டல ஒத்துழைப்பை மேம்படுத்துவது.

வளரும் நாடுகளுக்கென தனியான பன்னாட்டு வாணிக ஒத்துழைப்பு அமைப்பை உருவாக்கி அவற்றை ஒன்றிணைந்து செயல்பட வைப்பது.

R.THALAMPOORANI M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## பயிற்சி வினாக்கள்

1.ஹேரிடெக்ஸ்டர் பற்றி குறிப்பு வரைக. (8.1)

2.பன்னாட்டு பண நிதியம் [(International Monetary Fund (IMF)] குறிப்பு வரைக. (8.2)

3.பணநிதியத்தின் பணிகள் யாவை? (8.2.2)

4.பணநிதியத்தின் சாதனைகள் யாவை? (8.2.4)

5.பன்னாட்டு நிதியத்தில் இந்தியாவின் பங்கு யாது? (8.2.5)6.

6.மறுகட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான பன்னாட்டு வங்கி அல்லது

7. உலக வங்கி [International Bank for Reconstruction and Development (IBRD) or (World Bank)] குறிப்பு வரைக. (8.3)

8.உலக வங்கியின் நோக்கங்கள் யாவை? (8.3.1)

9.உலக வங்கி ஊரக மேம்பாட்டுக்கு உறுதுணையாக இருக்கும் எந்த நடவடிக்கைகளுக்கு கடன் வழங்க கவனம் செலுத்துகிறது? (8.3.1)

10.உலக வர்த்தக மையம் [World Trade Center (WTC)] குறிப்பு வரைக. (8.4)

11.உலக வர்த்தக அமைப்பு [World Trade Organisation (WTO)] குறிப்பு வரைக. (8.4)

12.உலக வர்த்தக அமைப்பின் நோக்கங்கள் யாவை? (8.4.1)

13.GATT, TRIPS, TRIMs, GATS, MFA, AOA, DSB விரிவாக்கம் தருக. (8.4.1)

14.உலக வர்த்தக அமைப்பின் சாதனைகள் யாவை? (8.4.3)

15.SAARC (South Asian Association for Regional Cooperation) சார்க் அமைப்பின் சாதனைகள் யாவை? (8.6.3)

16.ASEAN (Association of Southeast Asian Nations) தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பு குறிப்பு வரைக. (8.7)

17.BRICS (Brazil, Russia, India, China and South Africa) பிரிக்ஸ்ன் பணிகள் யாவை? (8.8)

18.பிரிக்ஸ் நோக்கங்கள் யாவை? (8.8.1)
19.பிரிக்ஸ்சின் சாதனைகள் யாவை? (8.8.3)

P.THALAMPOORANAN.M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# அத்தியாயம் 9: நிதிப் பொருளியல்

1.நவீன அரசு எனப்படுவது **<u>நலம் பேணும் அரசு</u>**

2. கீழ் வருவனவற்றுள் தனியார் நிதியில் பண்புகளில் இல்லாதது **<u>விளம்பரப்படுத்துதல்</u>**

3. வரி கீழ்காணும் குணங்களைக் கொண்டது

அ) கட்டாயத்தன்மை ஆ) பிரதிபலன் கருதாமை

இ) வரி மறுப்பு ஒரு குற்றம் **<u>ஈ) மேல் கூறப்பட்ட அனைத்தும்</u>**

4. ஆடம் ஸ்மித்தால் கூறப்படாத புனித வரி விதிப்பு விதி எது? **<u>எளிமை விதி</u>**

5.கீழே உள்ள வாக்கியங்களை கருத்தில் கொண்டு, சரியான ஒன்றை அடையாளம் காண்க.

i.மாநில பட்டியலிலோ, இணைப்பு பட்டியலிலோ குறிப்பிடப்படாத வரியை விதிப்பதற்கு மைய அரசுக்கு தனி உரிமையில்லை.

ii) அரசியலமைப்பு சில வரிகளை மைய அரசு பட்டியலில் இருந்து மாநில அரசு பட்டியலுக்கு மாற்ற வசதி செய்கிறது. **<u>ii) மட்டும்</u>**

6.GST இதற்கு சமம்? **<u>விற்பனை வரி</u>**

7.இந்த நன்மையை நேர்முக வரி கொண்டிருக்கவில்லை **<u>வசதி</u>**

8. கீழ்வருவனவற்றுள் எது நேர்முக வரி? **<u>வருமான வரி</u>**

9.கீழே உள்ளவற்றில் எந்த வரி மத்திய அரசு பட்டியலில் இல்லை? **<u>விவசாய வருமான வரி</u>**

10.அரசின் வரவு வரவு (Revenue Receipts) கணக்கில் சேராதது **<u>சொத்திலிருந்து கிடைக்கிற வாரம்</u>**

11. வருவாய் செலவு (Revenue Expenditure) வருவாய் வருவாயை விட (Revenue Receipts) அதிகமாக இருந்தால், அது **<u>வருவாய் பற்றாக்குறை</u>**

12. மொத்தச் செலவு கடன் அல்லாத மொத்த வருவாயைவிட அதிகமாக இருந்தால், அது **<u>நிதிப்பற்றாக்குறை</u>**

13.பற்றாக்குறை நிதியாக்கத்தின் அடிப்படை நோக்கமாவது **<u>பொருளாதார முன்னேற்றம்.</u>**

14. பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் என்பதன் பொருளாவது **<u>அரசின் மொத்தச் செலவு மொத்த வருவாயைவிட அதிகம்</u>**

15. பொதுக்கடனை திரும்பிச் செலுத்தும் முறை

அ) கடனை மாற்றுதல் ஆ) மூழ்கும் நிதி

இ) பகுதியாகச் செலுத்துதல் **<u>ஈ) இவை அனைத்தும்</u>**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

16 பொதுக்கடனை மாற்றுதல் என்பது

**<u>அதிக வட்டி வீதம் கொண்ட கடன் பத்திரங்களுக்குப் பதிலாக குறைவான வட்டி வீதம் கொண்ட கடன் பத்திரங்களைக் கொடுத்தல்</u>**

17. பட்ஜெட் என்ற பதம் ஃப்ரெஞ்ச் வார்த்தையாகிய (Bougette) விலிருந்து பெறப்பட்டது அதன் பொருள் **<u>சிறிய பை</u>**

18. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது இந்தியாவில் பெரிய பற்றாக்குறையாக இருக்கும்? **<u>வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை</u>**

19. நிதிக்குழு நிர்ணயம் செய்வது எது?

**<u>நிதி வளங்களை மாநில அரசுக்கு மாற்றுதல்</u>**

20. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் எது சரியான சொற்றொடர் எனக் கண்டுபிடி.

(i) ஜனாதிபதியால் நிதிக்குழு பணியமர்த்தப்படுகிறது

(ii) ஒரு நிதி குழுவின் காலம் 5 ஆண்டுகள்

அ) i) மட்டும் ஆ) ii) மட்டும் **<u>இ) இரண்டும்</u>**

**21." பொது நிதி" வரையறு. (9.2)**

**பொது நிதி:**

- "பொது நிதி" என்பது அரசின் நிதி சார்ந்தவை பற்றி படிக்கக் கூடியதாகும்.
- அரசின் வருவாய் மற்றும் செலவுகளின் இயல்பையும் கொள்கைகளையும் ஆராய்வதே பொது நிதியியல் ஆகும். – ஆடம் ஸ்மித்

**22." பொது வருவாய்" என்றால் என்ன? (9.8.1)**

**பொது வருவாய்:**

- "பொது வருவாய்" அல்லது பொது வருமானம் என்பது அனைத்து மூலங்களின் வழியாக பெறும் வருமானத்தைக் குறிக்கும்.
- **உதாரணம்:** சொத்து வரி, குடிநீர் வரி

**23." வரி", "கட்டணம்" வேறுபடுத்துக. (9.9.1)**

**"வரி", "கட்டணம்" வேறுபாடு:**

| **வரி** | **கட்டணம்** |
|---|---|
| வரி என்பது குடிமக்கள் எவ்வித பிரதிபலனும் எதிர்பாராமல் அரசுக்கு கட்டாயமாக செலுத்தக்கூடியது ஆகும். | பொது நிர்வாகத்தில் செய்யும் சேவைக்காக கட்டணம் விதிக்கப்படுகிறது. |
| இதனை வரி செலுத்துபவர் மறக்காமல் செலுத்த வேண்டியதாகும். | அரசானது சில சேவையை செய்வதற்காக கட்டணங்களை வசூலிக்கிறது. |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**24." பூஜ்ய அடிப்படை வரவு செலவுத் திட்டம்" குறிப்பு வரைக. (9.11.3)**

**பூஜ்ய அடிப்படை வரவு செலவுத் திட்டம்:**

- ஒவ்வொரு செலவினமும் புதிதாகக் கருதப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் மதிப்பீடுகள் செய்யப்படும்.
- இந்திய அரசு 1987-88ல் பூஜ்ய வரவு செலவுத்திட்டத்தை தாக்கல் செய்தது.
- புதிய இனமாகக் கருதப்பட்டு அரசு பட்ஜெட்டில் புதிதாக செலவு மதிப்பீட்டைக் கொண்டுள்ளது.

**25.நேர்முக வரிக்கு இரு உதாரணங்கள் தருக. (9.9.6)**

**நேர்முக வரி:**

- நேர்முக வரி என்பது ஒரு நபரின் வருமானம் மற்றும் செல்வம் மீது விதிக்கப்பட்டு அரசுக்கு நேரடியாக செலுத்தக் கூடியதாகும்.
- அவ்வரியின் சுமையை பிறருக்கு மாற்ற இயலாது.

**உதாரணம்:** 1. வருமான வரி 2. சொத்து வரி 3. வெகுமதி வரி

**26.GST யின் கூறுகள் யாவை? (9.9.13)**

**GST யின் கூறுகள்:**

**CGST:** மாநிலத்திற்குள்ளே நடைபெறுகிற விற்பனையில் மத்திய அரசால் வசூலிக்கப்படுவதாகும்.

**SGST:** மாநிலத்திற்குள்ளே நடைபெறுகிற விற்பனையில் மாநில அரசால் வசூலிக்கப்படுவதாகும்.

**IGST:** மாநில அரசுகளுக்கிடையேயான விற்பனையில் மத்திய அரசால் வசூலிக்கப்படுவதாகும்.

**27." பொதுக்கடன்" என்பதன் பொருள் யாது? (9.10.1)**

**பொதுக்கடன்:**

- "கடன் என்பது அரசு கருவூலத்தால் கடன் வழங்கியவர்களுக்கு வட்டியும், அசலும் கொடுப்பதற்கான உத்தரவாதம் ஆகும். நடப்பு நிதி பற்றாக்குறையைச் சரிசெய்வதற்காக திரட்டப்படும் நிதி ஆகும்". – பிலிப் E.டெய்லர்.

**28.வரி விதிப்பு விதிகளை விவரிக்க. (9.9.5)**

**வரி விதிப்பின் புனித விதிகள் (ஆடம் ஸ்மித்):**

**1.செலுத்தும் திறன் பற்றிய விதி:**

- மக்களின் வரி செலுத்தும் திறனுக்கேற்ப அரசானது வரி விதிக்க வேண்டும். ஏழை அல்லது நடுத்தர வர்க்கத்தினரை ஒப்பிடும் போது செல்வந்தர் அதிக வரி செலுத்தும் வகையில் இருக்க வேண்டும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**2.நிச்சயத்தன்மை விதி:**

- வரி வீதம் அல்லது செலுத்தும் காலம் குறித்து நிச்சயமற்ற தன்மை இல்லாத வகையில் அரசு வரியினை விதிக்க வேண்டும்.

**3.வசதி விதி:** வரி வசூலிக்கும் முறை மற்றும் வரி செலுத்தும் காலம் மக்களின் வசதிகேற்ப அமைய வேண்டும்.

**4.சிக்கன விதி:** ஆடம்ஸ்மித் கருத்துப்படி வசூலிக்கும் செலவுகள் குறைவாக இருக்கும் வரிகளை மட்டுமே அரசு விதிக்க வேண்டும் என்பதாகும்.

**29.தனியார் நிதிக்கும் பொது நிதிக்கும் உள்ள மூன்று ஒற்றுமைகளைக் கூறுக. (9.5.1)**

**தனியார் நிதிக்கும் பொது நிதிக்கும் உள்ள ஒற்றுமைகள்:**

**1.பகுத்தறியும் தன்மை:**

- இரண்டும் குறைந்த செலவில் அதிக நலத்தைப் பெறுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

**2.வளங்களின் பயன்பாடு:**

- இரண்டு நிதிகளும் உத்தம அளவில் வளங்களைப் பயன்படுத்த முனைகிறது.

**3.கடனுக்கான வரையறை:**

- கடன்களுக்கான வரையறையைக் கொண்டுள்ளது. அரசின் பற்றாக்குறை வரவு செலவு திட்டத்திற்கும் எல்லை இருக்கிறது.

**4.நிர்வாகம்:**

- நிர்வாகத் திறனானது அரசு மற்றும் தனியாரின் செயல்திறனைப் பொருத்து அமைகிறது.

**30.நவீன அரசின் பணிகள் யாவை? (9.6)**

**நவீன அரசின் பணிகள்:**

**1.பாதுகாப்பு:**

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அழிவிலிருந்து பொது மக்களை பாதுகாப்பதே அரசின் முக்கியப் பணியாகும்.

**2.நீதி:**

- நீதியைப் பரிபாலனம் செய்தல் மற்றும் தகராறுகளைத் தீர்த்தல் ஆகியவை அரசின் பணியாகும்.

**3.நிறுவனங்கள்:**

- தனி நிறுவனங்கள் மீதான ஒழுங்கு முறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தற்கால அரசின் பணியின் கீழ் வருகிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**4.சமூக நலன்:**

- ❖ நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக கல்வி, சமூக பதுகாப்பு, சமூக காப்பீடு, உடல்நலம் மற்றும் துப்புறவு போன்றவற்றை ஏற்படுத்துவது அரசின் கடமையாகும்.

**5.கட்டமைப்பு:**

- ❖ இது பொருளாதார முன்னேற்றத்தின் அடிப்படையாக அமைகிறது.

**6.பேரின பொருளாதாரக் கொள்கை:** இதற்காக நிதிக் கொள்கை மற்றும் பணக் கொள்கைகளை மேற்கொள்கிறது.

**7.சமூக நீதி:** நிதித் தீர்வை மூலம் வருவாயை மறு பகிர்வு செய்வதற்கு அரசானது தேவைப்படுகிறது.

**31.வரியின் ஏதேனும் மூன்று பண்புகளை எழுதுக. (9.9.3)**

**வரியின் பண்புகள்:**

1. வரி என்பது அரசுக்கு கட்டாயம் செலுத்தக் கூடிய ஒன்றாகும்.
2. பொது நிர்வாகத்தினரிடம் வரி செலுத்துவோர் எவ்வித பிரதிபலனும் எதிபாரமல் செலுத்த வேண்டியது.
3. ஒவ்வொரு வரியும் வரி செலுத்துவோரின் தியாகத்தை உள்ளடக்கியது.
4. வரியானது சட்டத்தை மீறியதற்காக சுமத்தப்படும் தண்டத் தொகை போன்று விதிக்கப்படுவதில்லை.
5. சில வரி வருவாய் மூலங்கள்:
   வருமான வரி, நிறுவன வரி, விற்பனை வரி கூடுதல் கட்டணம், செஸ்.

**32.நேர்முக மற்றும் மறைமுக வரிகளுக்கிடையேயான மூன்று வேறுபாடுகளைக் கூறுக. (9.9.6)**

**நேர்முக வரி - மறைமுக வரி வேறுபாடுகள்:**

| **நேர்முக வரி** | **மறைமுக வரி** |
|---|---|
| நேர்முக வரி என்பது ஒரு நபரின் வருமானம் மற்றும் செல்வம் மீது விதிக்கப்பட்டு அரசுக்கு நேரடியாக செலுத்தக் கூடியது. | பொருட்களையோ அல்லது பணிகளையோ வாங்கும் நபரின் மீது விதிக்கப்படுவது. |
| வரிச்சுமையை பிறருக்கு மாற்ற இயலாது. | வரிச் சுமையை பிறருக்கு மாற்ற இயலும். |
| **உதாரணம்:**<br>வருமான வரி, சொத்து வரி, வெகுமதி வரி | **உதாரணம்:**<br>பண்டங்கள் மற்றும் பணிகளின் மீதான வரி |

K.ILAMPOORANI, M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**33.முதன்மைப் பற்றாக்குறை என்றால் என்ன? (9.11.5)**

**முதன்மைப் பற்றாக்குறை:**

- ❖ முதன்மைப் பற்றாக்குறையானது நிதிப் பற்றாக்குறையிலிருந்து வட்டி செலுத்துதலை கழித்த பின் உள்ள பற்றாக்குறையாகும்.
- ❖ அரசின் உண்மையான சுமையை சுட்டும்.
- ❖ முதன்மைப் பற்றாக்குறை என்பது அரசின் கடனுக்கான குறிப்பாக வட்டி செலுத்துதல்களுக்கான தேவையைக் குறிக்கும்.

முதன்மைப் பற்றாக்குறை (PD) = நிதிப்பற்றாக்குறை (FD) – வட்டி செலுத்துதல் (IP)

**34.பொதுக்கடனை திரும்ப செலுத்துவதற்கான மூன்று முறைகளைக் கூறுக. (9.10.4)**

**பொதுக்கடனை திரும்ப செலுத்துவதற்கான மூன்று முறைகள்:**

**1.மூழ்கும் நிதி:**

- ❖ கடனுக்கென அரசு தனியொரு நிதியினை ஏற்படுத்தும், அதனை ‘மூழ்கும் நிதி’ என்பர்.
- ❖ அரசு ஒவ்வொரு வருடமும் ஒரு குறிப்பிட்ட நிலையான தொகையை செலுத்துகிறது.
- ❖ கடன் முதிர்ச்சிடையும் போது, வட்டியோடு அசலையும் சேர்த்து வழங்கும் வகையில் இந்நிதி பெருகிவிடும்.
- ❖ **முதன்முதலாக அறிமுகப்படுத்தியவர்:** வால்போல், இங்கிலாந்து

**2.கடனை மாற்றுதல்:**

- ❖ இம்முறையில் பழைய கடன் புதிதாக மாற்றப்படுகிறது.
- ❖ டால்டன் கடன் மாற்றுதல் கடன் பளுவை குறைக்கிறது என்கிறார்.

**3.வரவு செலவு திட்ட உபரி:**

- ❖ உபரி வரவு செலவுத் திட்டத்தை அரசு கடனைத் திருப்பிச் செலுத்த பயன்படுத்திக் கொள்ளும்.

**35.பொது நிதியின் எல்லைகளை விளக்குக. (9.4)**

**பொது நிதியின் பொருள்:**

பொது நிதி என்பது அரசின் நிதி சார்ந்தவை பற்றி படிக்கக் கூடியதாகும்.

**வரைவிலக்கணம்:**

“அரசின் வருவாய் மற்றும் செலவுகளின் இயல்பையும், கொள்கைகளையும் ஆராய்வதே பொது நிதியியல் ஆகும்” – ஆடம் ஸ்மித்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**பொதுநிதியின் எல்லை / பாடப் பொருள்:**

**1.பொது வருவாய்:**

- ❖ பொது வருவாய் என்பது வருவாயைப் பெருக்கக் கூடிய முறைகளான வரி மற்றும் வரியல்லா வருமானங்கள் பற்றியும், வரிக்கொள்கை, வரிவிகிதம், வரியின் பளு, வரியின் தாக்கம் மற்றும் அவற்றின் விளைவுகள் ஆகியவற்றையும் விளக்குகிறது.

**2.பொதுச் செலவு:**

- ❖ இப்பகுதி அரசின் செலவு, பொதுச் செலவின் விளைவுகள் மற்றும் பொதுச் செலவைக் கட்டுப்படுத்துதல் போன்றவை சார்ந்த அடிப்படைக் கோட்பாடுகளைக் கொண்டுள்ளது.

**3.பொதுக் கடன்:**

- ❖ பொதுக் கடன் என்ற பகுதியில் உள்நாடு மற்றும் வெளிநாட்டின் மூலம் பெறக்கூடிய பொதுக் கடன்களின் சுமை, அதன் விளைவுகள் மற்றும் திரும்பச் செலுத்தும் முறை பற்றி படிப்பது.

**4.நிதி நிர்வாகம்:**

- ❖ இப்பகுதி அரசின் வரவு செலவு திட்டத்தின் பல்வேறு பகுதிகளைப் பற்றி படிக்கிறது.
- ❖ வரவு செலவு திட்டம் என்பது ஓராண்டிற்கான அரசின் பேரளவு நிதி திட்டமாகும்.
- ❖ வரவு செலவு திட்டத்தின் பல்வேறு நோக்கங்கள் மற்றும் அதனைத் தயாரிப்பதற்கான வழிமுறைகள், நிதி ஒதுக்கீடு மற்றும் தணிக்கை போன்றவைகள் நிதி நிர்வாகத்தின் கீழ் வருகிறது.

**5.நிதிக் கொள்கை:**

- ❖ வரிகள், மானியங்கள், பொதுக் கடன் மற்றும் பொதுச் செலவு ஆகியவைகள் நிதிக் கொள்கையின் கருவிகளாகும்.

**36.மறைமுக வரிகளின் நன்மைகள் யாவை? (9.9.10)**

**மறைமுக வரிகளின் நன்மைகள்:**

**1.பரந்து காணப்படுதல்:**

- ❖ எல்லா நுகர்வோர்களும் அவர்கள் ஏழை அல்லது பணக்காரர்களாக இருந்தாலும் மறைமுக வரிகளை செலுத்த வேணடும்.
- ❖ எடுத்துக்காட்டாக, இந்தியாவில் 2 சதவீத நபர்கள் மட்டுமே வருமான வரி செலுத்துகிற நிலையில் மறைமுக வரியை அனைவரும் செலுத்துகின்றனர்.

R.THALAMPOORAJAN.M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**2.சமத்துவம்:**

- ❖ பணக்காரர்களால் பயன்படுத்தக்கூடிய ஆடம்பரப் பொருட்கள் மீது அதிக வரி சுமத்தப்படுவதால் மறைமுகவரி சமத்துவ விதியின் அடிப்படையில் அமைகிறது.

**3.சிக்கனத் தன்மை:**

- ❖ உற்பத்தியாளர்களும், சில்லரை விறனையாளர்களும் வரியை வசூலித்து அரசுக்கு செலுத்துவதால் வசூலிப்பதற்கான செலவு குறைவாகிறது.
- ❖ வணிகர்கள் மதிப்புமிக்க வரி வசூலிப்பவர்களாக செயலாற்றுகின்றனர்.

**4.உடலுக்குக் தீங்கான பொருட்களின் நுகர்வைக் குறைக்கிறது:**

- ❖ அரசானது உடலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய பொருட்கள் மீது மறைமுக வரியை விதிக்கிறது.
- ❖ எடுத்துகாட்டாக, புகையிலை, மது போன்ற பொருட்கள் மீதான வரி.
- ❖ இது **பாவ வரி** என அழைக்கப்படுகிறது.

**5.வசதியானது:**

- ❖ மறைமுக வரியானது பண்டங்கள் மற்றும் பணிகள் மீது விதிக்கப்படுகிறது.
- ❖ நுகர்வோர் இதனை வாங்கும்போது விலையுடன் சேர்த்து செலுத்திவிடுவதால், வரி செலுத்துவதை உணர்வதில்லை.

**37.கடன் திரும்பச் செலுத்தும் முறைகளை விளக்குக. (9.10.4)**

**கடன் திரும்பச் செலுத்தும் முறைகள்:**

**1.மூழ்கும் நிதி:**

- ❖ கடனுக்கென அரசு தனியொரு நிதியினை ஏற்படுத்தும், அதனை 'மூழ்கும் நிதி' என்பர்.
- ❖ அரசு ஒவ்வொரு வருடமும் ஒரு குறிப்பிட்ட நிலையான தொகையை செலுத்துகிறது.
- ❖ கடன் முதிர்ச்சியடையும் போது, வட்டியோடு அசலையும் சேர்த்து வழங்கும் வகையில் இந்நிதி பெருகிவிடும்.
- ❖ **முதன்முதலாக அறிமுகப்படுத்தியவர்:** வால்போல், இங்கிலாந்து

**2.கடனை மாற்றுதல்:**

- ❖ இம்முறையில் பழைய கடன் புதிதாக மாற்றப்படுகிறது.
- ❖ டால்டன் கடன் மாற்றுதல் கடன் பளுவை குறைக்கிறது எங்கிறார்.

**3.வரவு செலவு திட்ட உபரி:**

- ❖ உபரி வரவு செலவுத் திட்டத்தை அரசு கடனைத் திருப்பிச் செலுத்த பயன்படுத்திக் கொள்ளும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**4.பகுதியாகச் செலுத்துதல்:**

- அரசு பொதுக்கடனை சம வருடாந்திர தவணைகளாக செலுத்துகிறது.

**5.கடன் மறுப்பு:**

- அரசு கடன் செலுத்தும் சுமையிலிருந்து வெளி வருவதற்கான எளிமையான முறையாகும்.
- இதில் அரசானது ஏற்கெனவே செலுத்துவதாக உறுதியளித்த கடமையை மறுக்கும்.
- சாதாரண சூழ்நிலைகளில் கடனை மறுக்க இயலாது. ஏனெனில் அது அரசின் நாணயத் தன்மையை பாதித்து விடும்.

**6.வட்டி வீதத்தை குறைக்கும்:**

- நிதிச் சிக்கல்கள் ஏற்படும் நேரங்களில் கட்டாயமாக வட்டியை குறைத்து கடனை செலுத்துவதும் ஒரு வகையான கடன் தீர்வு முறையாகும்.

**7.மூலதனத் தீர்வை:**

- ஒரு தனிநபர் அல்லது நிறுவனம் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் அல்லது வளர்ச்சிப் போக்கில் உள்ள மூலதன சொத்துக்கள் பெற்றிருப்பின் அதன் மீது அரசு வரி விதித்து, அதனை போர்க்கால கடனை செலுத்துவதற்கு பயன்படுத்துவதாகும்.

**38.நிதிக் கொள்கைகளின் கருவிகள் எவை? விளக்குக. (9.15.3)**

**நிதிக் கொள்கை: வரைவிலக்கணம்:**

- "நிதிக் கொள்கை என்பது நாட்டின் பொருளாதார நோக்கங்களை அடைவதற்கு பயன்படுத்தப்படும் பொது நிதி அல்லது செலவு, வரி, பெறுதல்கள் மற்றும் நிதி நிர்வாகம் சார்ந்த கொள்கையாகும்". பியுளெர்

**நிதிக் கொள்கைகளின் கருவிகள்:**

**1.வரிவிதித்தல்:**

- வரிகள் மக்களிடமிருந்து வருமானத்தை அரசிற்கு மாற்றுகிறது. வரிகள் நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ இருக்கும்.
- வரி அதிகரிப்பு செலவிடத்தக்க வருமானத்தை குறைக்கிறது.
- எனவே பணவீக்கத்தை கட்டுப்படுத்த வரியை அதிகப்படுத்த வேண்டும். மந்த காலத்தில் வரிகள் குறைக்கப்பட வேண்டும்.

**2.பொதுச் செலவு:**

- பொதுச் செலவு பணியாளர்களின் கூலி மற்றும் சம்பளங்களை அதிகரிக்கும்போது பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான மொத்த தேவை உயருகிறது.
- ஆகையால் பொதுச் செலவு பின்னிறக்கம் மற்றும் பணவீக்கத்தை கட்டுப்படுத்த உதவுகிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**3.பொதுக் கடன்:**

- ❖ அரசு, கடன் மூலம் பொது மக்களிடமிருந்து அரசிற்கு பணத்தை மாற்றம் செய்கிறது.
- ❖ அது பின்னர் மக்களுக்கு திரும்ப வட்டியோடு செலுத்தப்படுகிறது. இதனால் அரசிடமிருந்து பணம் மாற்றப்படுகிறது.

**39.கூட்டாட்சி நிதியின் கொள்கைகளை விளக்குக. (9.12.1)**

**கூட்டாட்சி நிதியின் கொள்கைகள்:**

**1.சுதந்திரம்:**

- ❖ கூட்டரசு நிதி முறையின் கீழ், ஒவ்வொரு அரசும் தன்னுடைய நிதியில் தன்னாட்சி அதிகாரம் கொண்டதாக இருக்க வேண்டும்.

**2.சமத்துவம்:**

- ❖ சமத்துவ நீதியின் அடிப்படையில் வளங்கள் பங்கீடு செய்யப்பட வேண்டும்.

**3.ஒரே மாதிரியான தன்மை:**

- ❖ கூட்டரசு முறையில் ஒவ்வொரு மாநிலமும் கூட்டாட்சி நிதிக்கு சம வரி செலுத்துதல்களை செய்ய வேண்டும்.

**4.போதுமான வளங்களைப் பெற்றிருத்தல்:**

- ❖ மத்திய மற்றும் மாநில அரசுகள், அவற்றின் பணிகளை திறம்பட மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் போதுமான அளவில் வளங்களைப் பெற்றிருக்க வேண்டும்.

**5.நிதி வசதி:**

- ❖ அரசின் பெருகி வரும் பொறுப்புகளுக்கேற்றவாறு வளங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**6.ஒறுங்கிணைப்பு மற்றும் ஒன்றுபடுதல்:**

- ❖ அனைத்து நிதிமுறைகளும் முழுவதும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். இவை நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சியை முன்னேற்றுவதற்கு உதவும்.

**7.செயல்திறன்:**

- ❖ ஏய்ப்பு மற்றும் மோசடிக்கான வாய்ப்புகள் இருக்கக் கூடாது. ஓர் ஆண்டில் ஒரு முறைக்கு மேல் ஒருவரும் வரி விதிப்பிற்கு உட்படுத்தக் கூடாது.

**8.நிர்வாகச் சிக்கனம்:**

- ❖ வரி வசூலிக்கும் செலவு குறைவாக இருப்பதோடு செலவிடுவதற்கு ஏதுவாக அமைய வேண்டும்.

**9.பொறுப்புணர்வு:**

நிதிசார் முடிவுகளுக்கு ஒவ்வொரு அரசும் பொறுப்பேற்க வேண்டும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**40.வரவு செலவு திட்டத்தில் உள்ள பல்வேறு பற்றாக்குறைகளை விளக்குக. (9.11.5)**

**வரவு செலவு திட்டம்:**

- "முதல் நிலையிலான ஏற்றுக் கொள்ளப்பட்ட பொது வருவாய் மற்றும் செலவு திட்டத்தை உள்ளடக்கிய ஆவணமாகும்". – ரேனி ஸ்டோன்

**வரவு செலவு திட்டத்தில் உள்ள பற்றாக்குறைகள்:**

**1.வருவாய் பற்றாக்குறை:**

- அரசின் வருவாய் செலவினம், வருவாய் வரவைவிட அதிகமாக இருந்தால் அது வருவாய் பற்றாக்குறை எனப்படும்.
- வருவாய் பற்றாக்குறை என்பது அரசின் அன்றாட பணிகளை நடத்துவதற்கு தேவையானதைவிட குறைவாக உள்ளதைக் காட்டும்.
- வருவாய் பற்றாக்குறை = மொத்த வருவாய் செலவினம் – மொத்த வருவாய் வரவினம்

**2.வரவு செலவு திட்ட பற்றாக்குறை:**

- வருவாய் மற்றும் மூலதனக் கணக்குகளின் மொத்த வரவுக்கும் செலவுக்கும் உள்ள இடைவெளியே வரவு செலவு திட்ட பற்றாக்குறையாகும்.
- வரவு செலவு திட்ட பற்றாக்குறை = மொத்தச் செலவு – மொத்த வரவு

**3.நிதிப் பற்றாக்குறை:**

- நிதிப் பற்றாக்குறை = வரவு செலவு திட்ட பற்றாக்குறை – அரசின் அங்காடிக் கடன்களும் ஏனைய பொறுப்புகளும்

**4.முதன்மைப் பற்றாக்குறை:**

- முதன்மைப் பற்றாக்குறையானது நிதிப் பற்றாக்குறையிலிருந்து வட்டி செலுத்துதலை கழித்த பின் உள்ள பற்றாக்குறையாகும்.
- அரசின் உண்மையான சுமையை சுட்டும்.
- முதன்மைப் பற்றாக்குறை என்பது அரசின் கடனுக்கான குறிப்பாக வட்டி செலுத்துதல்களுக்கான தேவையைக் குறிக்கும்.

முதன்மைப் பற்றாக்குறை (PD) = நிதிப்பற்றாக்குறை (FD) – வட்டி செலுத்துதல் (IP)



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**41.அரசுச் செலவு அதிகரிப்புகளுக்கான காரணங்கள் யாவை? (9.7.4)**

**அரசுச் செலவு அதிகரிப்புகளுக்கான காரணங்கள்:**

**1.மக்கள் தொகை வளர்ச்சி:**

- மக்கள் தொகை வளர்ச்சியினால் உடல் நலம், கல்வி, சட்டம் ஒழுங்கு போன்றவற்றிற்காக பேரளவு முதலீடு செய்ய வேண்டியிருக்கிறது.
- இளைஞர்களுக்கான கல்வி மற்றும் உடல் நலத்திற்கான வசதிகள் ஏற்படுத்தவும் பொதுச் செலவு அதிகமாகிறது.

**2.பாதுகாப்புச் செலவு:**

- இராணுவ தளவாடங்களை நவீனமயமாக்குவதால் இராணுவச் செலவு பலமடங்கு அதிகரித்துள்ளது.

**3.அரசு மானியங்கள்:**

- இந்திய அரசானது, உணவு, உரங்கள், முன்னுரிமை துறைக்கான கடன் வழங்கல், ஏற்றுமதி மற்றும் கல்வி போன்ற பல இனங்களுக்கு மானியம் வழங்குகிறது.
- மானியங்களுக்கான தொகை மிக அதிகமாக இருப்பதால் பொதுச் செலவு பலமடங்கு அதிகரித்துள்ளது.

**4.கடன் சேவைகள்:**

- அரசானது அதிகமான அளவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆதாரங்கள் மூலம் கடன் பெற்றுள்ளன.
- அதன் விளைவாக அரசு கடனை திருப்பி செலுத்துவதற்காக அதிக பணம் தேவைப்படுகிறது.

**5.வளர்ச்சித் திட்டங்கள்:**

- நீர்ப்பாசனம், இரும்பு மற்றும் எஃகு, கனரக எந்திரங்கள், எரிசக்தி, தொலைதொடர்பு போன்ற வளர்ச்சித் திட்டங்களுக்கு அதிகளவு முதலீடு தேவைப்படுகிறது.

**6.நகரமயமாக்கல்:**

- நகரங்களில் மக்கள் தொகை விரைவாக அதிகரித்து வருகிறது.
- இதனால் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதற்கு, கல்வி மற்றும் குடிமை வசதிகளை மேற்கொள்ள அதிக அளவில் செலவுகள் ஏற்படுகின்றது.

**7.தொழில்மயமாக்கல்:**

- அடிப்படை மற்றும் கனரக தொழில்களுக்கு அதிக அளவு மூலதனம் தேவைப்படுகிறது.
- மேலும் இது உற்பத்திக்கு நீண்ட காலத்தையும் எடுத்துக் கொள்ளும்.

**8.மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கான மானியங்கள் அதிகரிப்பு:**

- இயற்கை பேரழிவுகளை எதிர்கொள்வதற்கு மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களுக்காக வழங்கப்படும் மானியங்கள் உதவுத் தொகை பெருமளவில் அதிகரித்துள்ளது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## பயிற்சி வினாக்கள்

1.நிதிப் பொருளியல் என்றால் என்ன? (9.1)

2.தனியார் நிதிக்கும் பொதுநிதிக்கும் உள்ள வேற்றுமைகளை எழுதுக. (9.5.2)

3.பொதுச் செலவு என்றால் என்ன? (9.7)

4.பொது வருவாயின் வகைப்பாடு யாது? (9.8.2)

5.வரி வருவாய் மூலங்கள் யாவை? (9.9.3)

6.வரிசாரா வருவாய் மூலங்கள் யாவை? (9.9.4)

7.வரி விதிப்பின் புனித விதிகள் யாவை? (9.9.5)

8.நேர்முக வரியின் நன்மைகள் யாவை? (9.9.7)

9.நேர்முக வரியின் தீமைகள் யாவை? (9.9.8)

10.மறைமுக வரி என்றால் என்ன? பல்வேறு மறைமுக வரிகளை விளக்குக. (9.9.9)

11.மறைமுக வரியின் தீமைகள் யாவை? (9.9.11)

12.சரக்கு மற்றும் சேவை வரியைப் [GOODS AND SERVICES TAX (GST)] பற்றி குறிப்பிடுக. (9.9.13)

13.விற்பனை வரியின் இயல்புகள் யாவை? (9.9.13)

14.VAT மற்றும் GST வேறுபடுத்துக. (9.9.13)

15.GST-ன் நன்மைகள் யாவை? (9.9.13)

16.உள்நாட்டு பொதுக்கடன் என்றால் என்ன? (9.10.2)

17.வெளிநாட்டு பொதுக்கடன் என்றால் என்ன? (9.10.2)

18.பொதுக்கடன் அதிகரிப்பதற்கான காரணங்கள் யாவை? (9.10.3)

19.வரவு செலவுத் திட்டம் வரையறு. (9.11.1)

20.வருவாய் வரவு செலவு திட்டம் என்றால் என்ன? (9.11.3)

21.மூலதன பட்ஜெட் என்றால் என்ன? (9.11.3)

22.துணை வரவு செலவுத் திட்டம் என்றால் என்ன? (9.11.3)

23.நிதிக்கு வாக்கெடுப்பு வரவு செலவுத் திட்டம் என்றால் என்ன? (9.11.3)

24.செயல்திறன் வரவு செலவுத் திட்டம் என்றால் என்ன? (9.11.3)

25.உபரி வரவு செலவுத் திட்டம் என்றால் என்ன? (9.11.3)

26.பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் என்றால் என்ன? (9.11.3)

P.THALAMPOORAJAN,M.A.,B.Ed.,M.Phil., www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**27.வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவைகளைப் பட்டியலிடுக. (9.11.4)**

**28.மைய அரசின் வருவாய் மூலங்களைப் பட்டியலிடுக. (9.12)**

**29.மாநில அரசின் வருவாய் மூலங்களைப் பட்டியலிடுக. (9.12)**

**30.மத்திய அரசால் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு மாநிலங்களுக்கு ஒதுக்கக் கூடிய வளங்களைப் பட்டியலிடுக. (ஷரத்து 269-ன் படி) (9.12)**

**31.மத்திய அரசால் விதிக்கப்பட்டு, ஆனால் மாநில அரசு வசூலிப்பது மற்றும் பயன்படுத்தக் கூடிய வளங்களைப் பட்டியலிடுக. (ஷரத்து 268-ன் படி) (9.12)**

**32.மத்திய அரசால் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு பகிர்ந்தளிக்கக்கூடிய வரிகளைப் பட்டியலிடுக. (ஷரத்து 270, 272-ன் படி) (9.12)**

**33.நிதிக்குழுவின் வரலாற்றைக் கூறுக. (9.13)**

**34.இந்திய நிதிக்குழுவின் பணிகள் யாவை? (9.13.1)**

**35.உள்ளாட்சி அமைப்பின் வகைகளையும் வருவாய் ஆதாரங்களையும் குறிப்பிடுக. (9.14)**

**36.நிதிக்கொள்கையின் வரைவிலக்கணம் தருக. (9.15.2)**

**37.நிதிக்கொள்கையின் நோக்கங்கள் யாவை? (9.15.4)**

**38.வரியின் வகைகள் யாவை?**

R.THALAMPOORAJAN,M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# அத்தியாயம் 10: சுற்றுச்சூழல் பொருளியல்

1. "என்வைரான்மென்ட்" (Environment) என்ற வார்த்தை **என்வைரோனியோ** என்ற பொருள் கொள்ளும் எந்த பிரெஞ்சு வார்த்தையில் இருந்து தோன்றியது

2. "உயிர் சார்" (biotic) என்ற வார்த்தையின் பொருள் என்ன? **உயிர் வாழ்வன**

3.சூழலியல் என்பது எந்த ஒன்றின் சிறிய பகுதி? **பையொஸ்பியர்**

4."பொருள்சார் சமநிலை அணுகுமுறையை" நிறுவியவர் யார்? **ஆலன்நீஸ் மற்றும் ஆர்.வி. அய்யர்ஸ்**

5.சுற்றுச்சூழல் பொருட்கள் என்பவை? **சந்தையிடா பொருட்கள்**

6.தூய பொதுப்பொருட்களில், நுகர்ச்சி என்பது **போட்டியற்றது.**

7.சுற்றுச்சூழல் பொருளியலின் அடிப்படை கருத்துக்களில் ஒன்றும், அங்காடி தோல்விக்குக் காரணமானதும் **எதிர்மறை புறவிளைவுகள்** ஆகும்.

8. வெளிக்காற்று மாசுவுக்கு **மோட்டார் வாகனங்கள்** காரணமாகும்.

9.கார்பன் மோனாக்சைட் அதிகமாவதில் பங்களிப்பைச் செய்வது **மோட்டார் வாகனங்கள்**

10. பின்வரும் எது உலக வெப்பமயமாதலுக்கு காரணம்? **வெப்பநிலை அதிகமாதல்**

11. பின்வரும் எந்த ஒன்று புறஊதாக் கதிர்களில் இருந்து மனிதர்களை பாதுகாக்கிறது? **ஓசோன் படலம்**

12.உலக வெப்பமயமாதல் **பருவநிலை மாறுபாடு** என்றும் குறிப்பிடப்படுகிறது.

13.பின்வரும் எந்த ஒன்று உலக வெப்பமயமாதலின் எதிர்பார்க்கப்படும் விளைவு? **கடல் மட்டம் உயர்தல்**

14.சத்துக்களை அதிகப்படுத்தும் செயல் எப்படி அழைக்கப்படுகிறது? **யூட்ரோபிகேசன்**

15. மண்மாசுவிற்கு முதல் நிலை காரணம் **ரசாயன உரங்கள்.**

16. வன அழிவிற்கான முதன்மை காரணம் யாது? **மரம் வெட்டும் தொழில்**

17.மின்னணு கழிவுகள் **இ-கழிவுகள்** என்று பொதுவாகக் குறிப்பிடப்படுகின்றன.

18. அமில மழை **காற்று மாசு** விளைவுகளில் ஒன்று.

19.நீடித்த வளர்ச்சி (அல்லது) வளம் குன்றா வளர்ச்சிக் குறிக்கோள்களை அடைய விதிக்கப்பட்டிருக்கும் காலம் **2030**.

20.கார நிலம் அதிகமாக காணப்படும் சமவெளி எது?

அ)சிந்து-கங்கை ஆ)வட இந்தியா இ)கங்கை **ஈ)மேற்கூறியஅனைத்தும்**

R.THALAMPOORANAN M.A.,B.Ed.,M.Phil., www.Padasalai.Net

**21.சுற்றுசூழல் என்பதன் பொருள் கூறுக. (10.2)**

**சுற்றுசூழல்:**

- ❖ சுற்றியிருப்பவைகள் என்ற பொருள்படும் **"Environia"** எனும் பிரஞ்ச் சொல்லிலிருந்து தோன்றியது சுற்றுசூழல்.
- ❖ சுற்றுசூழல் என்பது, நம்மை சுற்றியுள்ள அனைத்து நிலைமைகள், சூழ்நிலைகள், உயிர்கள் அல்லது உயிர் தொகுப்பு ஆகியவைகளை குறிப்பிடுவது ஆகும்.

**22.சூழலியல் என்றால் என்ன? (10.3)**

**சூழலியல்:**

- ❖ உயிரினங்களுக்கிடையேயான பரஸ்பர உறவும், அவைகளின் சுற்றுச்சூழலையும் பற்றி படிக்கும் இயல்.

**23.தலா கரியமில வாயு அதிகமாக வெளியேற்றும் நாடுகள் யாவை? (10.7.1)**

**தலா கரியமில வாயு அதிகமாக வெளியேற்றும் நாடுகள்:**

- ❖ கனடா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், தென்கொரியா, சவுதி அரேபியா, ஆஸ்திரேலியா.

**24.சுற்றுச்சூழல் பொருட்கள் என்றால் என்ன? உதாரணம் கூறு. (10.5)**

**சுற்றுச்சூழல் பொருட்கள்:**

- ❖ சுற்றுச்சூழல் பொருட்கள் என்பவை சந்தையிடாப் பொருட்கள் மற்றும் தனியார் சொத்துரிமை இல்லாத, பொதுவாக அனைவராலும் பயன்படுத்தப்படுபவை ஆகும்.

**உதாரணம்:**

தூய்மை காற்று, பசுமையான போக்குவரது உள்கட்டமைப்பு, பொது பூங்காக்கள், ஆறுகள், மலைகள், கடற்கரை போன்றவைகளாகும்.

**25.ஒலிமாசுவினை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை கூறுக. (10.7.3)**

**ஒலிமாசுவினை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள்:**

- ❖ ஒலித்தடைகளை ஏற்படுத்துதல்.
- ❖ தரைப்போக்குவரத்திற்கு புதிய சாலைகள் ஏற்படுத்துதல்.
- ❖ போக்குவரத்து நெரிசல் கட்டுப்பாடு.
- ❖ வேலை செய்யும் இடங்களில் ஒலித்தடுப்பானை நிறுவுதல்.
- ❖ கனரக வாகனங்கள் செல்லும் நேரத்தைக் கட்டுப்படுத்துதல்.
- ❖ ஒலிபெருக்கிகளைக் கட்டுப்படுத்துதல்.



R.THALAMPOORAJAN,M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**26.உலக வெப்பமயமாதல் என்பதனை வரையறு. (10.8)**

**உலக வெப்பமயமாதல்:**

- ❖ பல்வேறு மனித நடவடிக்கைகளின் காரணமாக இயல்பினைவிட அதிக அளவு கரியமில வாயு, மீத்தேன், குளோரோ புளோரா கார்பன், நைட்ரஸ் ஆக்சைடு போன்ற பசுமை இல்ல வாயுக்கள் வெளியாகி, அதன் காரணமாக உலகின் சராசரி வெப்பநிலை அதிகரித்து வருவது உலக அல்லது புவி வெப்பமயமாதல் எனப்படுகிறது.

**27.விதைப்பந்து என்பதன் பொருள் கூறுக. (10.16)**

**விதைப்பந்து:**

- ❖ ஒரு விதை மண்ணால் மூடிவைக்கப்படுகிறது. அந்தமண் உரம் கலந்த களிமண்ணாகும். பிறகு உலர்த்தப்படுகிறது.
- ❖ பின்பு எங்கு வேண்டுமோ அங்கு அதனை விதைக்கலாம். இவ்வாறு செய்யும் போது, அந்த விதை முன்பே நடப்பட்டுவிட்டது என்றே பொருள்.

**28.பொருளாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் உள்ள தொடர்பினை சுருக்கமாக கூறு. (10.4)**

**பொருளாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் உள்ள தொடர்பு:**

- ❖ சமூக, அரசியல், அறிவியல், தத்துவ மற்றும் பொருளாராத அமைப்பு முறைகள் மனித வாழ்வினை தீர்மானிக்கிறது என்பதில் நம்மில் பலருக்கும் தெரிந்திருக்கும்.
- ❖ மனிதன் தனது வாழ்வாதாரதிற்காக இயற்கையிலுள்ள மற்ற உயிரனங்களுடனும், உயிரற்ற பொருட்களுடனும் இணைந்துள்ளதால், அவனது வாழ்க்கை முறையை சுற்றுச்சூழல் பெருமளவு தீர்மானிக்கிறது.
- ❖ "உற்பத்தி முறைக்குள் உள்நுழையும் எந்தவொன்றும் பிறகு வெளியேறித்தான் ஆக வேண்டும்".

**29.பொருள்சார் சமநிலை அணுகுமுறையின் பொருள் குறிப்பிடுக. (10.4)**

**பொருள்சார் சமநிலை அணுகுமுறையை நிறுவியவர்:**

ஆலன் நீஸ் மற்றும் R.V.அய்யர்ஸ்

**பொருள்சார் சமநிலை அணுகுமுறை:**

- ❖ இயற்பியலின் பொருள் மற்றும் ஆற்றல் பாதுகாப்பிற்கான வெப்ப இயக்கவியல் முதல்விதி.
- ❖ இவ்விதியை ஆதாரமாகக் கொண்டு சுற்றுச்சூழலுக்கும் பொருளாதாரத்துக்குமான தொடர்பினை விளக்குவதுதான் பொருள்சார் சமநிலை அணுகுமுறை.

P.THALAMPOORAJAN.M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**30.பல்வகையான காற்று மாசுகளை விளக்குக. (10.7.1)**

**காற்று மாசு:**

காற்று மாசு இரண்டு வகைப்படும்.

**1.உட்புற காற்று மாசு:**

- ❖ மனிதர்களின் வசிப்பிடத்திற்குள் தீங்கு விளைவிக்கக் கூடிய அசுத்தங்கள் காற்றில் கலந்திருப்பதை உட்புற காற்று மாசு என்கிறோம்.

**உதாரணம்:** திட எரிபொருட்களைக் கொண்டு சமையல் செய்தல்

**2.வெளிப்புற காற்று மாசு:**

- ❖ காற்று மண்டலத்தில் திட, திரவ அல்லது காற்று வடிவ அசுத்தங்கள் கலந்திருப்பதே வெளிப்புற காற்று மாசு எனப்படுகிறது.

**உதாரணம்:** தொழிற்சாலைகள் மற்றும் மோட்டார் வாகன மாசு

**31.நீர்மாசுக்கான காரணங்கள் யாவை? (10.7.2)**

**நீர்மாசுக்கான காரணங்கள்:**

- ❖ கழிவுநீர் மற்றும் தேவையற்ற நீர் வெளியேற்றம்
- ❖ திடக்கழிவுகள் குவிதல்
- ❖ ஆலைக் கழிவுகளைக் கொட்டுதல்
- ❖ எண்ணெய் சிந்துதல்
- ❖ அமில மழை
- ❖ புவி வெப்பமடைதல்
- ❖ நீர்நிலைகளில் பிராண வாயு குறைதல்.
- ❖ அதாவது 40 விழுக்காடு அளவிற்கு புவி வெப்பத்தை அதிகரித்துள்ளது.

**32.இ-கழிவுகள் என்பதன் பொருள் தருக. (10.11)**

**இ-கழிவுகள்:**

- ❖ பயன்படுத்தாத மின்னனு சாதனங்கள் இ-கழிவுகள் எனப்படும்.

**உதாரணம்:** தேவையற்ற தொலைக்காட்சிப் பெட்டி, கைபேசி

**33.நில மாசு என்றால் என்ன? அதற்கான காரணங்களை குறிப்பிடுக. (10.7.4)**

**நில மாசு:**

- ❖ "கழிவுகளைக் கொட்டுவதால் நிலம் தரக்குறைவானதாக மாறும். சுற்றுச்சூழலில் கொட்டப்படும் பல திட, திரவ, வாயுப் பொருட்கள் நிலத்தின் தன்மையை கெடுத்துவிடுதல் நில மாசு ஆகும்". PEOAct 1997.

R.THALAMPOORAJAN,M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**நில மாசுவின் காரணங்கள்:**

- காடுகளை அழித்தல்
- விவசாய நடவடிக்கைகள்
- சுரங்க தொழில்
- மண்ணில் புதைத்தல்
- தொழில்மயமாதல்
- கட்டுமானப் பணிகள்
- அணுமின் விரயங்கள்

**34.குறிப்பு வரைக: அ) பருவநிலை மாற்றம் (10.9) ஆ) அமில மழை (10.10)**

**அ) பருவநிலை மாற்றம்:**

- வெப்பநிலை, மழைப்பொழிவு, காற்று வீசுதல் ஆகியவற்றின் அளவுகளிலும், அவைகள் நிலவும் காலங்களிலும் ஏற்படும் குறிபிடத்தகுந்த மாற்றம் பருவநிலை மாற்றம் எனப்படுகிறது.

**ஆ) அமில மழை:**

- சல்பர் – டை – ஆக்சைட், நைட்ரஜன் ஆக்சைட் வளிமண்டலத்தில் நீருடன் வினை புரிந்து, மழை மற்றும் பனிப்பொழிவாக பூமிக்கு திரும்புவதை குறிப்பது அமிலமழை.

**35.மொத்த தேசிய உற்பத்திக்கும் சுற்றுச்சூழல் தரத்திற்கும் இடையேயான தொடர்பினை சுருக்கமாக விளக்குக. (10.4)**

**மொத்த தேசிய உற்பத்திக்கும் சுற்றுச்சூழல் தரத்திற்கும் இடையேயான தொடர்பு:**

- சமூக, அரசியல், அறிவியல், தத்துவ மற்றும் பொருளாராத அமைப்பு முறைகள் மனித வாழ்வினை தீர்மானிக்கிறது என்பதில் நம்மில் பலருக்கும் தெரிந்திருக்கும்.
- மனிதன் தனது வாழ்வாதாரத்திற்காக இயற்கையிலுள்ள மற்ற உயிரனங்களுடனும், உயிரற்ற பொருட்களுடனும் இணைந்துள்ளதால், அவனது வாழ்க்கை முறையை சுற்றுச்சூழல் பெருமளவு தீர்மானிக்கிறது.
- பொருளாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையேயான தொடர்பினை விளக்க ஆலன் நீஸ் மற்றும் R.V.அய்யர்ஸ் "பொருள்சார் சமநிலை அணுகுமுறை" வகுத்துள்ளார்.
- சுற்றுச்சூழலுக்கும் பொருளாதாரத்திற்குமான இணைப்பினை நாம் அறிவியல் விதிகொண்டு விளங்கிக் கொள்ளலாம்.
- "உற்பத்தி முறைக்குள் உள்நுழையும் எந்தவொன்றும் பிறகு வெளியேறித்தான் ஆக வேண்டும்".
- இயற்பியலின் பொருள் மற்றும் ஆற்றல் பாதுகாப்பிற்கான வெப்ப இயக்கவியல் முதல் விதி. இவ்விதியை ஆதாரமாகக் கொண்டு

RTI AMOORAJAN M.A.,B.Ed.,M.Phil., www.Padasalai.Net




Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

சுற்றுச்சூழலுக்கும் பொருளாதாரத்துக்குமான தொடர்பினை விளக்குவதுதான் பொருள்சார் சமநிலை அணுகுமுறையாகும்.

- ❖ நுகர்வோரும் உற்பத்தியாளர்களும் ஒருவருக்கொருவர் தொடர்பில் இருந்தாலும் வளங்களுக்கான இயற்கையைச் சார்ந்திருப்பதால் சுற்றுச்சூழலுடன் தொடர்புடையவர்களாக இருக்கின்றார்கள்.
- ❖ உற்பத்திக்காக நாம் எடுக்கும் மூலப்பொருட்களின் தரம் குறையும், உற்பத்தி செலவு அதிகரிக்கவும் வழிவகுக்கும்.

$$M = G - R_C - R_P + R^r_P + R^r_c = R^d_c + R^d_c$$



வரைபடம் 10.1

**36.புறவிளைவுகள் என்ற கருத்தினையும் அதன் வகைப்பாடுகளையும் விளக்குக. (10.6.1)**


**புறவிளைவுகள்:**

- ❖ புறவிளைவுகள் அல்லது மிகை வழிதல் விளைவு என்பது ஒருவருடைய நுகர்ச்சி அல்லது உற்பத்தி, சம்பந்தமில்லாத மூன்றாம் தரப்பிலான மற்றொருவருடைய நுகர்ச்சி அல்லது உற்பத்தியினைபாதகமாக பாதிப்பதாகும்.

**புறவிளைவுகள் – இலக்கணம்:**

- ❖ "தனிநபர்களின் நுகர்ச்சி அல்லது உற்பத்தி ஆகிய பொருளாதார நடவடிக்கைகள் காரணமாக, அதன்நடவடிக்கைகளில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பங்குபெறாத சமுதாயத்திலுள்ள மற்றவர்களுக்கு ஏற்படும் செலவு அல்லது பயன் புறவிளைவுகள் எனப்படும்.

**புறவிளைவுகளின் வகைகள்:**






Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**நேர்மறை நுகர்சிப் புறவிளைவு:**

- ஒருவருடைய நுகர்ச்சி சார்பு மற்றொருவருடைய நுகர்ச்சி சார்பில் **சாதகமான** விளைவினை ஏற்படுத்துவது ஆகும்.

**எதிர்மறை நுகர்சிப் புறவிளைவு:**

- ஒருவருடைய நுகர்ச்சி சார்பு மற்றொருவருடைய நுகர்ச்சி சார்பில் **பாதகமான** விளைவினை ஏற்படுத்துவது ஆகும்.

**நேர்மறை உற்பத்தி புறவிளைவு:**

- ஒருவருடைய உற்பத்தி சார்பு மற்றொருவருடைய உற்பத்தி சார்பில் **சாதகமான** விளைவினை ஏற்படுத்துவது ஆகும்.

**எதிர்மறை உற்பத்தி புறவிளைவு:**

- ஒருவருடைய உற்பத்தி சார்பு மற்றொருவருடைய உற்பத்தி சார்பில் **பாதகமான** விளைவினை ஏற்படுத்துவது ஆகும்.

**37.நீடித்த அல்லது வளம் குன்றா வளர்ச்சி முக்கியத்துவம் மற்றும் அதன் நோக்கங்களை விளக்குக. (10.12.1)**

**நீடித்த அல்லது வளம் குன்றா மேம்பாடு:**

- நீடித்த அல்லது வளம் குன்றா மேம்பாடு என்பது, எதிகால சந்ததியினர் தங்களது தேவைகளை சமரசமில்லாமல் பூர்த்தி செயது கொள்வதற்கு வழிகோலும் வகையில், நிகழ்கால தலைமுறையினர் தங்களது உற்பத்தி மற்றும் நுகர்ச்சி அளவுகளையும், பொருளாதார மேம்பாட்டின் அளவினையும் அமைத்துக் கொள்வது ஆகும்.

**நோக்கங்கள்:**

**1.வறுமையற்ற நிலை**

- எல்லா வடிவங்களிலும் எல்லா இடத்திலும் வறுமையை ஒழித்தல்.

**2.பட்டினியில்லா நிலை**

- பட்டினியை முடிவுக்குக் கொண்டு வருதல்; உணவுப் பாதுகாப்பை அடைதல், ஊட்டச்சத்தினை உயர்த்துதல், நீடித்த நிலையான விவசாயத்துறை வளர்ச்சியை ஊக்கப்படுத்துதல்.

**3.சிறந்த உடல் நலம்**

- அனைத்து வயது மனிதர்களின் நலமான வாழ்வை உறுதிப்படுத்துதல்.

**4.தரமான கல்வி**

- எல்லோரையும் உள்ளடக்கிய தரமான கல்வியை வழங்கி வாழ்நாள் முழுக்கக் கற்றுக் கொள்ள வசதி செய்தல்.

**5.பாலின சமத்துவம்**

- பெண்களுக்கு அதிகாரம் வழங்குதல், பாலின சமன்பாட்டை சாதித்தல்.

**6.தூய்மையான குடிநீர் மற்றும் துப்புரவு**

- குடிநீரும் சுகாதாரமும் அனைவருக்கும் உறுதிப்படுத்துதல்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**7.தூய்மையான மற்றும் மலிவான ஆற்றல்**

- ❖ சுத்தமான, நீடித்த நிலையான, எளிதில் பெறக்கூடிய சக்தியினை அனைவருக்கும் உறுதிப்படுத்துதல்.

**8.நல்ல வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி**

- ❖ அனைவருக்கும் தரமான வேலை வாய்ப்பினையும் நீடித்த நிலையான பொருளாதார வளர்ச்சியினையும் வழங்குதல்.

**9.தொழில், புத்தாக்கம், உள்கட்டமைப்பு**

- ❖ தேவையான கட்டமைப்புகளை வழங்குதல், தொழில்மயமாகல், புத்தாக்கங்களை ஊக்குவித்தல்.

**10.ஏற்றத்தாழ்வு குறைப்பு**

- ❖ நாடுகளுக்குள்ளேயும் நாடுகளுக்கிடையேயும் உள்ள சமமின்மைகளை அகற்றுதல்.

**11.நிலைத்த நகரங்கள் மற்றும் சமுதாயங்கள்**

- ❖ பாதுகாப்பான, அமைதியான யாவரையும் உள்ளடக்கிய நகரங்களை உருவாகுதல்.

**12.பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி**

- ❖ நீடித்த நிலையான உற்பத்தி மற்றும் நுகர்வினை உறுதிப்படுத்துதல்.

**13.தட்பவெப்பநிலை நடவடிக்கை**

- ❖ தட்பவெப்ப மாற்றங்களையும் அவற்றின் தாக்கங்களையும் குறைத்தல்.

**14.நீருக்கடியில் வாழ்க்கை**

- ❖ சமுத்திரங்கள், கடல்கள், கடல் வளங்கள் ஆகியவற்றைப் பாதுகாத்தல்.

**15.நிலப்பகுதியில் வாழ்க்கை**

- ❖ காடுகளைப் **பராமரித்தல்**, நிலம் **அழிவதைத் தடுத்தல்**, நிலத்தின் **தன்மை குறைவதைக் கட்டுப்படுத்தி உயர்த்துதல்**

**16.அமைதி மற்றும் நீதிக்கான வலிமையான நிறுவனங்கள்**

- ❖ அமைதியான, சமூக நீதியுள்ள, அனைவரையும் உள்ளடக்கிய சமூகங்களை உருவாக்குதல்.

**17.இலக்குகளை அடவதில் கூட்டு முயற்சி**

- ❖ நீடித்த நிலையான வளர்ச்சிக்காக உலக ஒத்துழைப்பை உறுதிப்படுத்துதல்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## பயிற்சி வினாக்கள்

1.சுற்றுச்சூழல் தரம் என்றால் என்ன? (10.6)

2.மாசுபடுதல் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை? (10.7)

3.காற்று மாசுபடுதலின் வரைவிலக்கணம் யாது? ((10.7.1)

4.காற்று மாசுபடுதலின் காரணங்கள் யாவை? (10.7.1)

5.காற்று மாசுவின் விளைவுகள் யாவை? (10.7.1)

6.நீர் மாசுபடுதல் என்றால் என்ன? (10.7.2)

7.நீர் மாசுக்களின் வகைகள் யாவை? (10.7.2)

8.நீர் மாசுபடுதலுக்கான காரணங்கள் யாவை? (10.7.2)

9.நீர் மாசுவின் விளைவுகள் யாவை? (10.7.2)

10.நீர் மாசுவினைக் கட்டுப்படுத்த எடுக்க வேண்டிய தீர்வுகள் யாவை? (10.7.2)

11.ஒலி மாசு வரைவிலக்கணம் தருக. (10.7.3)

12.ஒலி மாசுவின் வகைகள் யாவை? (10.7.3)

13.ஒலி மாசுவிற்கான காரணங்கள் யாவை? (10.7.3)

14.ஒலி மாசுவின் விளைவுகள் யாவை? (10.7.3)

15.நில மாசு என்றால் என்ன? (10.7.4)

16.நில மாசுவின் வகைகள் யாவை? (10.7.4)

17.நில மாசுவிற்கான காரணங்கள் யாவை? (10.7.4)

18.நில மாசுவின் விளைவுகள் யாவை? (10.7.4)

19.நில மாசுவைக் கட்டுப்படுத்த தீர்வுகள் யாவை? (10.7.4)

20.பசுமைக்குடில் விளைவு என்பது யாது? (10.8)

21.புவி வெப்பமடைவதால் பாதிக்கப்படுபவைகளைப் பட்டியலிடுக. (10.8)

22.கரியமில வாயுவின் அளவு எவ்வாறு அளவிடப்படுகிறது? (10.9)

23.திடக் கழிவுகள் என்றால் என்ன? (10.11)

24.இயற்கைப் பண்ணை முறை என்றால் என்ன? (10.14)

25.இயற்கைப் பண்ணையின் பொதுவான கொள்கைகள் யாவை? (10.14)

26.இந்தியாவில் உவர் நிலங்கள் உள்ளடங்கிய பகுதிகள் யாவை? 10.14)

P.THALAMPOORAJAN,M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# அத்தியாயம் 11

## பொருளாதார மேம்பாடு மற்றும் திட்டமிடல்

1."வளர்ச்சியுடன் கூடிய மறு பகிர்வு" கீழ்கண்ட எந்த அணுகுமுறையின் புகழ்பெற்ற விளக்கம் இது. **புதிய பொதுநல அணுகுமுறை**

2.பின்வருவனவற்றுள் பொருளாதார வளர்ச்சியின் தன்மை இல்லாதவை எது? **விரிவான கருத்து**

3.கீழ்கண்டவற்றுள் எவை பின்தங்கிய நாடுகளின் பண்புகளில் ஒன்றாகும்? **வறுமையின் நச்சு சுழற்சி**

4.கீழ்க்கண்டவற்றுள் எந்த பொருளாதாரம் சாராத காரணி, பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கிறது? **மனித வளங்கள்**

5.பொருளாதார வளர்ச்சி **உற்பத்தி அதிகரிப்பு** ஐ அளவிடுகிறது.

6.அளிப்பு பக்கத்திலிருந்து இயங்கும் வறுமையின் நச்சு சுழற்சியின்படி ஏழைநாடுகள் ஏழையாகவே இருக்கின்றன. ஏனென்றால்

அ) சேமிப்பு குறைவாகவே உள்ளது

ஆ)முதலீடு குறைவாகவே உள்ளது **அ மற்றும் ஆ**

7.கீழ்கண்ட எந்த திட்டத்தில், வேளாண்மை மற்றும் கிராம பொருளாதாரத்தை மையமாகக் கொண்டது? **காந்திய திட்டம்**

8.கீழ்க்கண்ட திட்டங்களை அவை முன் மொழியப்பட்ட ஆண்டின் அடிப்படையில் காலக்கிரம வரிசைப்படி தொகுத்து விடையை தேர்ந்தெடுக்கவும்

அ)மக்கள் திட்டம் ஆ)பாம்பே திட்டம்

இ)ஜவஹர்லால் நேரு திட்டம் ஈ) விஸ்வேஸ்வரய்யா திட்டம் **iv) iii) ii) I)**

9. எம். என்.ராய் வழங்கிய திட்டம் கீழ்கண்டவைகளில் எது? **மக்கள் திட்டம்**

10.சுட்டிக்காட்டும் திட்டமிடலை செயல்படுத்திய நாடு **பிரான்சு**

11. குறுகியகால திட்டத்தின் இன்னொரு பெயர் **கட்டுப்படுத்தும் திட்டம்**

12.நீண்ட கால திட்டத்தின் மற்றொரு பெயர் **முன்னோக்கு திட்டம்**

13. நீண்ட கால திட்டமிடலின் அடிப்படைக் கருத்து நாட்டின் **கட்டமைப்பு** மாற்றமாகும்.

14.சர்வோதய திட்டத்தை முன்மொழிந்தவர் யார்? **ஜெயப்பிரகாஷ் நாராயணன்**

15.இந்தியாவில் திட்டக்குழு அமைக்கப்பட்ட ஆண்டு **1950**

16."அடிமைத்தனத்திற்கான பாதை" என்ற புத்தகத்தை எழுதியவர் யார்? **பிரடெரிக் ஹேயக்**

R.THALAMPOORAJAN M.A.,B.Ed.,M.Phil., www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

17.முன்னோக்கு திட்டத்தின் மற்றொரு பெயர் **<u>நீண்ட காலத் திட்டமிடல்</u>**

18. நிதி ஆயோக் கீழ்க்கண்ட எதன் மூலமாக அமைக்கப்பட்டது?

**<u>அமைச்சரவை தீர்மானம்</u>**

19. நிதி ஆயோக்கின் (NITI Aayog) சரியான ஆங்கில விரிவாக்கம்

**<u>National Institute for Transforming India</u>**

20.சட்டபூர்வமாக நிதி ஆயோக்கின் தலைவராக கீழ்க்கண்ட எந்த பதவியில் உள்ள ஒருவர் செயல்படுவார்? **<u>பிரதமர்</u>**

**21.பொருளாதார முன்னேற்றம் – வரையறு. (11.2)**

**பொருளாதார முன்னேற்றம்:**

- ❖ அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை ஒரு குறிப்பிட்ட நோக்கம் மற்றும் தேவையை அடைய பயன்படுத்தும் வழிமுறையைக் குறிக்கும்.
- ❖ தொடர்ச்சியற்ற தன்னிச்சையான மாற்றங்கள் நிகழும் தன்மை.

**22.பொருளாதார முன்னேற்றத்தின் குறியீடுகளை குறிப்பிடுக. (11.3)**

**பொருளாதார முன்னேற்றத்தின் குறியீடுகள்:**

- ❖ நாட்டின் மொத்த உற்பத்தி
- ❖ தலாவீத மொத்த நாட்டு உற்பத்தி
- ❖ நலன்
- ❖ சமூகக் குறியீடுகள்

**23.பொருளாதார வளர்ச்சியிலிருந்து முன்னேற்றத்தை வேறுபடுத்துக. (11.2)**

| பொருளாதார வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்குமிடையேயான வேற்றுமைகள் | |
|---|---|
| **பொருளாதார வளர்ச்சி** | **பொருளாதார முன்னேற்றம்** |
| வளர்ந்த நாடுகளின் பொருளாதார பிரச்சனைகளை கையாளுகிறது | வளரும் நாடுகளின் பிரச்சனைகளைக் கையாளுகிறது |
| மாற்றங்கள் படிப்படியாகவும் நிதானமாகவும் நிகழ்கிறது | தொடர்ச்சியற்ற தன்னிச்சையான மாற்றங்கள் நிகழ்கிறது |
| அதிக அளவான உற்பத்தியைக் குறிக்கிறது. | உற்பத்தி அதிகரிப்பது மட்டுமல்லாமல் உற்பத்தியாகும் பொருட்களின் வகைகளும் மாறுகிறது |

**24.மொத்த நாட்டு உற்பத்தி என்றால் என்ன? (11.3)**

**மொத்த நாட்டு உற்பத்தி:**

- ❖ ஒரு நாட்டின் புவி எல்லைக்குள் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளின் சந்தை மதிப்புடன் அந்த நாட்டு மக்கள் வெளிநாடுகளில் ஈட்டிய வருமானத்திற்கும், வெளிநாட்டினர் சம்பாதித்து அவர்கள் நாட்டுக்கு அனுப்பிய வருமானத்திற்கும் இடையிலான வேறுபாட்டுத் தொகையை கூட்டினால் கிடைக்கும் மொத்த மதிப்பே மொத்த நாட்டு உற்பத்தி எனலாம்.

R. RAJAN M.A., B.Ed., M.Phil., www.Padasalai.Net

**25.பொருளாதார திட்டமிடுதலின் வரைவிலக்கணம் எழுதுக. (11.7)**

**பொருளாதார திட்டமிடுதலின் வரைவிலக்கணம்:**

- "பொருளாதாரத் திட்டமிடல் என்பது தனியார் உற்பத்தி மற்றும் விநியோக நடவடிக்கைகளை கூட்டாக கட்டுப்படுத்துவது அல்லது ஒடுக்குவதை குறிப்பதாகும்". - ராபின்ஸ்

**26.பொருளாதார முன்னேற்றத்தின் சமூக குறியீடுகளை பட்டியலிடுக. (11.3)**

**பொருளாதார முன்னேற்றத்தின் சமூக குறியீடுகள்:**

- மக்களின் அடிப்படை மற்றும் கூட்டுத் தேவையை நிவர்த்தி செய்வதை சமூக குறியீடுகள் என அழைக்கப்படுகிறது.

**உதாரணம்:** மக்களின் சுகாதாரம், கல்வி, உணவு, குடிநீர், துப்புரவு மற்றும் வீட்டு வசதி.

**27.நிதி ஆயோக் பற்றி குறிப்பு வரைக. (11.9)**

**நிதி ஆயோக்:**

- **National Institution for Transforming India** என்பதன் சுருக்கமே நிதி ஆயோக் என்பதாகும்.
- இதனை ஆகஸ்டு 13, 2014-ல் திட்டக்குழுவுக்கு பதிலாக இந்த நிறுவனத்தை உருவாக்கும் முடிவை இந்திய அரசு எடுத்தது.
- ஜனவரி 1, 2015 அன்று அமைச்சரவைக் குழுவின் தீர்மானத்தின் மூலமாக நிதி ஆயோக் அமைக்கப்பட்டது.


**தலைவர்:** இந்தியப் பிரதமர்

**முதலாவது துணைத் தலைவர்:** அரவிந்த் பனகரியா

**உறுப்பினர்கள்:** மத்திய அமைச்சர்கள்

**28.வறுமையின் நச்சு சுழற்சிக்கான காரணங்களை வரைபத்துடன் தெளிவுபடுத்துக. (11.6)**

**வறுமையின் நச்சு சுழற்சி:**






R.THALAMPOORANAN.M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net

**காரணங்கள்:**

- ❖ வறுமையின் நச்சு சுழற்சி தேவைப் பக்கத்திலிருத்தும் அளிப்பின் பக்கத்திலிருந்தும் செயல்படுகிறது.
- ❖ தேவைப் பக்கத்திலிருந்து பார்த்தால் குறைவான உண்மை வருமானம் காரணமாக தேவையும் குறைவாக இருக்கும்.
- ❖ அளிப்புப் பக்கத்தில் வறுமையின் நச்சு சுழற்சி உடைத்தெறிய குறைவான சேமிப்பு மற்றும் குறைவான முதலீட்டினால் இயங்கத் துவங்குகிறது.

**29.பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் பொருளாதாரம் சாராத காரணிகள் யாவை? (11.5.2)**

**பொருளாதாரம் சாராத காரணிகள்:**

1.மனித வளம்

- ❖ மக்களின் அறிவு, திறன்கள் மற்றும் உற்பத்தி செய்யும் தகுதி ஆகியவற்றை அதிகரிக்கும் செயலை மனித மூலதன ஆக்கம் எனலாம்.

2.தொழில்நுட்ப அறிவு

- ❖ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அறிவு வளரும் பொழுது உயர்வகை உற்பத்தி தொழில் நுட்பங்கள் பிறக்கும்.

3.ஊழலற்ற அரசு நிர்வாகம்

- ❖ நாட்டு நிர்வாகத்தில் ஊழலை அகற்றாவிட்டால் முதலாளிகளும், வணிகர்களும் நாட்டின் வளங்களை சுரண்டிவிடுவார்கள்.

4.அரசியல் சுதந்திரம்

5.சமூக அமைப்பு

6.முன்னேற்றம் அடைவதற்கான விருப்பம்

7.சூதாட்ட முதலாளித்துவம்

8.நீதிபோதனை, அறநெறி மற்றும் சமூக மதிப்புகள்

9.பரம்பரை சொத்துரிமை முதலாளித்துவம்

**30.வறுமையின் நச்சு சுழற்சியை எப்படி தடுப்பது? (11.6.1)**

**வறுமையின் நச்சு சுழற்சியை தடுத்தல்:**

**அளிப்பு பக்கம்:**

- ❖ அளிப்பு பக்கத்தில் வறுமையின் நச்சு சுழற்சி உடைத்து எரிய குறைவான சேமிப்பு மற்றும் குறைவான முதலீட்டினால் இயங்கத் துவங்குகின்றது.
- ❖ ஆகவே பின் தங்கிய நாடுகளில் முதலீட்டையும் மூலதன ஆக்கத்தையும் அதிகரிக்கும்போது, நுகர்வு அளவு குறையாமல் இருக்க வேண்டும்.

RTHALAMPOORANAN M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**தேவைப் பக்கம்:**

- ❖ தேவைப் பக்கத்தில் வறுமை நச்சு சுழற்சியை உடைத்தெறிய நர்க்ஸ் சரிசம வளர்ச்சி உத்தியை பரிந்துரை செய்கிறார். ஒரே நேரத்தில் பலவகை தொழில்களில் ஒரு நாடு முதலீடு செய்தால் தொழிலாளர்களுக்கு அந்த தொழில்களில் வேலை கிடைக்கும்.
- ❖ அவர்கள் மற்ற தொழில்களில் உற்பத்தி செய்த பொருட்களுக்கு நுகர்வோர்களாக மாறுவார்கள்.

**31.இந்தியாவில் பொருளாதாரத் திட்டமிடல் பரிணாம வளர்ச்சியை மதிப்பிடுக. (11.7.1)**

**இந்தியாவில் பொருளாதாரத் திட்டமிடல் பரிணாம வளர்ச்சி:**

**உயர்திரு எம். விஸ்வேஸ்வரய்யா (1934):**

1934ல் இந்தியாவில் திட்டமிடுதலுக்கான அடித்தளத்தை அமைத்தார்.

**ஜவஹர்லால் நேரு (1938):** தேசியத் திட்டக் குழுவை அமைத்து வைத்தார்.

**பாம்பே திட்டம் (1940):** மும்பையின் முன்னணி தொழிலதிபர்களால் 1938ல் முன்மொழியப்பட்டது.

**எஸ். என். அகர்வால் (1944):** காந்தியத் திட்டத்தை வழங்கினார்.

**எம். என். ராய் (1945):** மக்கள் திட்டம் என்பதை வடிவமைத்தார்.

**32.திட்டமிடலுக்கு ஆதரவான கருத்துக்களை விவரி. (11.7.2)**

**திட்டமிடலுக்கு ஆதரவான கருத்துக்கள்:**

- ❖ நாட்டின் சந்தைகளின் இயக்கத்தை முடுக்கிவிடுதலும் உற்பத்தியாக்குதலும்.
- ❖ வேலையின்மையை அகற்றுதல்.
- ❖ சமமான முன்னேற்றம் ஏற்படுத்துதல்.
- ❖ வேளாண்துறை மற்றும் தொழில்துறை முன்னேற்றம்
- ❖ கட்டமைப்பு முன்னேற்றம்
- ❖ பண மற்றும் மூலதன அங்காடியின் முன்னேற்றம்
- ❖ திட்டமிடல் வறுமையையும் ஏற்றத் தாழ்வையும் குறைக்கும்.

**33.செயல்பாட்டுத் திட்டமிடலுக்கும் அமைப்புமுறைத் திட்டமிடலுக்குமிடையேயான வேறுபாடுகளை எழுதுக. (11.8)**

**செயல்பாட்டுத் திட்டமிடலுக்கும் அமைப்புமுறைத் திட்டமிடலுக்குமிடையேயான வேறுபாடுகள்:**

- ❖ ஒரு நாடுபெற்றுள்ள பொருளாதார மற்றும் சமூக அமைப்பு முறையை மாற்றாமல் பொருளாதார சீர்கேடுகளை நீக்குவதற்கு வழிகாட்டுதல் மட்டுமே செய்யும் திட்டமிடல், **பணிகள் திட்டமிடல்** ஆகும்.
- ❖ பொருளாதார அமைப்பு முறையில் பொருத்தமான மாற்றங்களை செய்து இலக்குகளை அடையும் திட்டமிடலே **கட்டமைப்பு திட்டமிடலாகும்**.
- ❖ இவ்வகையான திட்டமிடல் பெரும்பாலும் பின்தங்கிய நாடுகளில் காணப்படுகிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**34.நிதி ஆயோக்கின் பணிகள் யாவை? (11.9.1)**

**நிதி ஆயோக்:**

**National Institution for Transforming India** என்பதன் சுருக்கமே நிதி ஆயோக் என்பதாகும்.

**தலைவர்:** இந்தியப் பிரதமர்

**முதலாவது துணைத் தலைவர்:** அரவிந்த் பனகரியா

**உறுப்பினர்கள்:** மத்திய அமைச்சர்கள்

**நிதி ஆயோக்கின் பணிகள்:**

- ❖ கூட்டுறவு மற்றும் போட்டி அடிப்படையிலான கூட்டாட்சி
- ❖ நாட்டின் நிகழ்வுகளில் மாநிலங்களைப் பங்கெடுக்க வைத்தல்
- ❖ பரவாலாக்கப்பட்ட திட்டமிடல்
- ❖ தொலைநோக்கு மற்றும் காட்சித் திட்டமிடல்
- ❖ நிபுணர்களின் கூட்டமைப்பை உருவாக்குதல்
- ❖ உகந்ததாக்குதல்
- ❖ சச்சரவுத் தீர்த்தல்
- ❖ வெளியுலகத் தொடர்பை ஒருங்கிணைத்தல்
- ❖ உள்நாட்டு ஆலோசனை வழங்குதல்
- ❖ திறன் உருவாக்குதல்

**35.பொருளாதார முன்னேற்றத்தை தீர்மானிக்கும் பொருளாதாரம் சார்ந்த காரணிகளை விவாதிக்கவும். (11.5.1)**

**பொருளாதாரம் சார்ந்த காரணிகள்:**

**1.இயற்கை வளங்கள்:**

- ❖ ஒரு நாடு பெற்றுள்ள இயற்கை வளங்களின் அளவு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கும்.
- ❖ வளங்கள் பற்றாக்குறையாக உள்ள நாடு விரைவாக முன்னேற இயலாது.

**2.மூலதன உருவாக்கம்:**

- ❖ மூலதனம் பொருளாதாரத்தின் அனைத்துச் செயல்பாட்டிற்கும் அடிப்படையாகும்.
- ❖ ஏற்கெனவே உள்ள இருப்புடன் தற்போது கூடும் நிகர அளவு மூலதனமே மூலதன உருவாக்கம்.

**3.சந்தையின் அளவு:**

- ❖ சந்தை அளவானது பெரிய அளவில் இருந்தால் கூடுதலான உற்பத்தி, அதிக வேலைவாய்ப்பு மற்றும் தேசிய தலா வருமான உயர்வு ஆகியவற்றைத் தூண்டும்.



R.THALAMPOORANAN M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net

**4.கட்டமைப்பு மாற்றம்:**

- ❖ கட்டமைப்பு மாற்றம் என்பது பொருளாதாரத்தில் தொழில் கட்டமைப்பில் ஏற்படும் மாற்றத்தைக் குறிக்கும்.
- ❖ எந்த ஒரு பொருளாதாரமும் முழு வேளாண்மையை மட்டும் சார்ந்து இருந்தால் பின் தங்கிய நிலையிலேயே இருக்கும்.

**5.நிதியியல் முறை:**

- ❖ நிதியியல் முறை என்பது ஒரு நாட்டில் திறமையான மற்றும் சிறந்த முறையில் கட்டமைக்கப்பட்ட வங்கி முறையினைக் கொண்டதாகும்.

**6.விற்பனைக்குரிய உபரி:**

- ❖ வேளாண் துறையில் குடும்பத்திற்கான தேவையைவிட கூடுதலாக செய்யப்படும் உற்பத்தியை விற்பனைக்குரிய உபரி என்கிறோம்.
- ❖ இந்தக் கூடுதல் விளைபொருட்களை சந்தையில் விற்று வருமானம் ஈட்டலாம். அவர்களுடைய வாங்கும் திறன் அதிகப்படுத்தும்.

**7.பன்னாட்டு வாணிகம்:**


- ❖ அந்நிய செலாவணி கையிருப்பு போதுமானதாக இருந்தால் அந்த நாட்டின் பணமாற்று வீதம் ஏற்ற இறக்கமின்றி நிலைத்திருக்கும்.

**8.பொருளாதார அமைப்புமுறை:**

- ❖ ஒரு நாடு தடையில்லாப் பொருளாதாரக் கொள்கையை கடைப்பிடித்தால் கட்டளைப் பொருளாதாரத்தைவிட வேகமான வளர்ச்சி பெறும். இது சில நாடுகளுக்கு மட்டும் பொருந்தும்.

**36.பல்வேறு வகையான திட்டமிடல் வகைகளை விவரி. (11.8)**

**திட்டமிடலின் வகைகள்:**




**1.மக்களாட்சித் திட்டமிடல்:**

- ❖ திட்டங்களைத் தாரித்தல் மற்றும் செயல்படுத்துதலின் உள்ள அனைத்து நிலைகளிலும் மக்கள் பங்கெடுத்துக் கொள்ளும் திட்டமிடலே **மக்களாட்சித் திட்டமிடல்**.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**2.சர்வாதிகாரத் திட்டமிடல்:**

- சர்வாதிகாரத் திட்டமிடலில் பொருளாதார நட்டவடிக்கைகள் மத்திய கட்டுப்பாடு மற்றும் வழிகாட்டுதலின்படி ஒரே ஒரு திட்டமாக இருக்கும்.

**3.மையப்படுத்தப்பட்ட திட்டமிடல்:**

- மையப்படுத்தப்பட்ட திட்டமிடலில் அனைத்து நிலைகளிலும் திட்டம் தொடர்புடைய நடவடிக்கைகள் மையத் திட்டக் குழுவின் கட்டுப்பாட்டில் இருக்கும்.

**வேறு பெயர்: "மேலிருந்து திட்டமிடல்"**

**4.பரவலாக்கப்பட்ட திட்டமிடல்:**

- மைய அமைப்புகளின் கட்டுப்பாடுகளின்றி, உள்ளூர் அமைப்புகள் மற்றும் உள்ளூர் நிறுவனங்கள், திட்டங்களைத் தீட்டுதல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றைச் செய்யும்.

**வேறு பெயர்: "கீழிருந்து திட்டமிடல்"**

**5.வழிகாட்டும் திட்டமிடல்:**

- திட்டக்குழு வழிகாட்டுதல் வழங்கி திட்டம் தயாரித்து மேலும் திட்டத்தை ஆணையிடுதல் மூலம் செயல்படுத்தினால் அது **வழிகாட்டும் திட்டமிடுதல்** ஆகும்.

**6.தூண்டும் திட்டமிடல்:**

- திட்டக்குழு நிர்ணயம் செய்த இலக்குகளை பல்வேறு நிதியியல் மற்றும் பணவியல் வழிமுறைகள் மூலம் ஊக்கங்கள் அளித்து, அதன் நடவடிக்கைகளை மக்களால் மேற்கொள்ளப்படுவதே **தூண்டும் திட்டமிடல்** என்கிறோம்.

**7.சுட்டிக்காட்டும் திட்டமிடல்:**

- தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகள் தொழிற் சங்கத் தலைவர்கள் நுகர்வோர் குழுக்கள் நிதி நிறுவனங்கள் மற்றும் பிற துறை நிபுணர்களிடம் கலந்து ஆலோசித்து செயல்படுத்தும் திட்டமிடலே **சுட்டிக்காட்டும் திட்டமிடல்** ஆகும்.

**வேறு பெயர்:** மோனட் திட்டம் (பிரான்ஸ்)

**8.கட்டாயமானத் திட்டமிடல்:**

- கட்டாயமான திட்டமிடல் முறையில் திட்டம் தயாரித்தல் மற்றும் செயல்படுத்துதல்களில் அரசு அதிகாரமிக்கது. திட்டம் தயாரித்து முடித்து விட்டால் எவ்வித தடைகளுமின்றி திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

**கடைப்பிடிக்கும் நாடுகள்:** சீனா, ரஷ்யா



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**9.குறுகியகால திட்டமிடல்:**

- ❖ ஓராண்டில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறுகியகாலத் திட்டங்கள் ஆகும்.

**வேறுபெயர்கள்:** கட்டுப்படுத்தும் திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டம்.

**10.நடுத்தரகால திட்டமிடல்:**

- ❖ மூன்றிலிருந்து ஏழு ஆண்டு காலத்தில் முடிவடையும் திட்டங்கள் **நடுத்தரகாலத் திட்டங்கள்** ஆகும்.

**11.நீண்டகாலத் திட்டமிடல்:**

- ❖ பத்திலிருந்து முப்பது ஆண்டுகளுக்கு தீட்டப்படும் திட்டங்கள் **நீண்டகாலத் திட்டமிடல்** ஆகும்.

**வேறுபெயர்:** முன்னோக்குத் திட்டம்

**12.நிதித் திட்டமிடல்:**

- ❖ திட்டத்தை செயல்படுதத் தேவையான நிதியை பண மதிப்பில் ஒதுக்கீடு செய்யும் திட்டமிடலே **நிதித்திட்டமிடல்** ஆகும்.

**13.உருவப் பொருள் திட்டமிடல்:**

- ❖ உருவப் பொருள் திட்டமிடல் என்பது மனித வளம், இயற்கை வளம் மற்றும் இயந்திரங்கள் போன்ற பருமப் பொருட்களை ஒதுக்கீடு செய்யும் திட்டமிடலாகும்.

**14.பணிகள் திட்டமிடல்:**

**15.கட்டமைப்புத் திட்டமிடல்:**

**16.விரிவான திட்டமிடல்:**

- ❖ நாட்டின் அனைத்துப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான திட்டமிடல் **விரிவான திட்டமிடல்** ஆகும்.

**17.பகுதித் திட்டமிடல்:**

- ❖ ஒரு சில துறைகளுக்கு மட்டுமே இலக்கு நிர்ணயம் செய்து அதை அடைய தீட்டப்படும் திட்டம் **பகுதித் திட்டமாகும்**.

**37.திட்டமிடலுக்கு எதிரான வாதங்களை எடுத்துரைக்கவும். (11.7.3)**

**திட்டமிடலுக்கு எதிரான வாதங்கள்:**

- ❖ பொருளாதார திட்டமிடுதலின் முக்கிய நோக்கம் வளர்ந்த நாடுகளில் பொருளாதார நிலைத் தன்மையை அடைவது, பின் தங்கிய நாடுகளில் வளர்ச்சியைப்பெறுவதாகும்.
- ❖ திட்டமிடுதல் தனியார் முயற்சியை தடுக்கும், நிர்வாகச் செலவு அதிகரிக்கவும், தானாகவே விலை நிர்ணய முறையை சரி செய்வதை நிறுத்தவும் செய்கிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**1.தன் விருப்பம் போல் செயல்பட இயலாமை:**

- திட்டமிடல் கட்டுப்பாடுகளையும் வழிமுறைகளையும் விதித்து நாட்டிற்கு முதுகெலும்பாக உள்ளது.
- ஹேயக் எழுதிய **"அடிமைத்தனத்திற்கான பாதை"** என்னும் நூலில் மையப்படுத்தப்பட்ட திட்டமிடலில் மக்களின் பொருளாதார விடுதலையைக் கட்டுப்படுத்தி நாட்டை மந்தநிலைக்கு இட்டுச் செல்லும் என கருத்து தெரிவிக்கிறார்.
- மக்களின் நலன் புறக்கணிக்கப்பட்டு, இலாபம் ஒன்றுக்கே மிக முக்கியத்துவம் வழங்கப்படும்.

**2.தன் முனைப்புக் குறைதல்:**

- தனி உரிமை இல்லாதது, இலாப நோக்கை குறைத்து தொழில் முனைவோர் திறம்பட முடிவு எடுப்பதையும், இடர் எதிர் நோக்குதலையும் குறைக்கிறது.
- எவரும் இடர்பாடுகளை ஏற்று புதிய நிறுவனத்தை துவக்க முன் வர மாட்டார்கள்.
- உயர் பதவியில் உள்ள அலுவலர்கள் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தும் போக்கு திட்டமிடலில் தவிர்க்க இயலாத ஒன்றாக உள்ளது.

**3.அதிகமான நிர்வாக செலவு:**

- லூயிஸ் இதைப்பற்றி குறிப்பிடும் பொழுது "திட்டமிடல் சிறப்பாக அமைய வேண்டுமானால் கூடுதலான திட்டமிடல் நிபுணர்கள் தேவை" என்கிறார்.

**4.முன்கணிப்பதில் உள்ள சிரமங்கள்:**

- அரசு தடையில்லா நாட்டில், விலை இயக்க முறையில், விலை, தேவை மற்றும் அளிப்பு ஆகியவை தானாக இயங்கி ஒன்றையொன்று சரி செய்து கொள்கிறது.
- திட்டமிடல் நாடுகளில் இப்படி ஒரு வசதி இல்லை. நுகர்வு மற்றும் உற்பத்தி அளவுகளை துல்லியமாக முன்கூட்டியே நிர்ணயிப்பது கடினம்.

R.THALAMPORAJAN,M.A.,B.Ed.,M.Phil., www.Padasalai.Net

## பயிற்சி வினாக்கள்

**1.தலா வீத மொத்த நாட்டு உற்பத்தியின் அடிப்படையில் நாடுகளை வகைப்படுத்துக. (11.1)**

**2.வளர்ச்சி குன்றிய பொருளாதார நாடுகளின் பண்புகள் யாவை? (11.1)**

**வியூகத்திட்டமிடல் என்றால் என்ன? (11.8)**

**3.தந்திரமான திட்டமிடல் என்றால் என்ன? (11.8)**

**4.செயல்பாட்டு திட்டமிடல் என்றால் என்ன? (11.8)**

**5.நிதி ஆயோக்கின் 7 தூண்களைக் குறிப்பிடுக. (11.9)**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# அத்தியாயம் 12

# புள்ளியியல் முறைகள் மற்றும் பொருளாதார அளவையியல் ஓர் அறிமுகம்

1.'ஸ்டாட்டிஸ்டிக்ஸ்' எனும் சொல் **ஒருமை மற்றும் பன்மை** ஆகும்.

2. புள்ளியியல் எண் விவரங்களை பற்றி படிக்கும் பயன்பாட்டுக் கணிதத்தின் ஒரு சிறப்புப் பகுதி என்று கூறியவர் யார்? **போர்டிங்டன்**

3. இரண்டாம் நிலை விவரங்களுக்கான ஆதாரம்

அ)வெளியிடப்பட்ட விவரங்கள்

ஆ)வெளியிடப்படாத விவரங்கள் **அ மற்றும் ஆ**

4.கேள்வித்தாள் மூலம் புள்ளி விவரம் திரட்டப்பட்டால் அது **முதல் நிலை விவரம்.**

5.நேர்கோடு உறவினை கொண்டிருக்கும் இருமாறிகளின் உறவினை அளவினை அளக்கும் முறைக்கு **உடன் தொடர்புக் கெழு** பெயர்.

6. X மற்றும் Y மாறிகள் இரண்டும் ஒரே திசையில் மாறினால் உடன்தொடர்புக்கெழு எவ்வாறு இருக்கும்? **நேர்மறையாக**

7.ஒரு சிதறல் விளக்கப்படத்தில் ஒரு மாறி அதிகரித்துச் செல்லும் பொழுது மற்றொரு மாறி குறைந்து சென்றால் உடன் தொடர்புக்கெழுவின் அளவு எவ்வாறாக இருக்கும்? **எதிர்மறையாக**

8.உடன் தொடர்புக் கெழு γ-ன் அளவு எந்த எல்லைக்குள் இருக்கும்? **-1 மற்றும் 1**

9. ஒட்டுறவு என்ற கருத்தினை முதலில் பயன்படுத்தியவர் **கால்டன்.**

10.ஒட்டுறவு பகுப்பாய்வின் நோக்கம்?

**ஒரு காரணியின் மதிப்பினைக் கொண்டு அடுத்த காரணியின் மதிப்பினை கண்டறிவது.**

11.சார்பு மாறியின் மதிப்பினை மதிப்பீடு செய்வதற்காக சாரா மாறிகளை பயன்படுத்தும் செயலுக்கு **சறிவு** பெயர்.

12.Y+2-0.2X எனில், Y அச்சு வெட்டு **2** ஆகும்.

13. $Y = \beta 0+\beta 1x$ என்ற ஒட்டுறவு சமன்பாட்டில் Y என்பது **சார்பு மாறி.**

14.$Y = \beta 0+\beta 1x$ என்ற ஒட்டுறவு சமன்பாட்டில் X என்பது **சாரா மாறி.**

15 பொருளாதார அளவையியல் என்பது எதன் இணைப்பு?

**பொருளியல், கணிதம் மற்றும் புள்ளியியல்**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

16.பொருளாதார அளவையியல் என்ற வார்த்தையை உருவாக்கியவர்?
அ).:.பிரான்ஸி கால்டன் ஆ) ராக்னர்.:.பிரிஸ்க் இ) கார்ல் பியர்சன்
ஈ)ஸ்பியர்மேன்

17. பொருளாதார அளவையியலுக்கான மூலப்பொருள் **புள்ளி விவரம்.**

18.U என்பது **பிழைக்கருத்து**

19.U என்பது எதைக் குறிக்கிறது? **விடுபட்ட காரணிகள்**

20.பொருளாதார அளவையியல் என்பது எத்தனை பாடங்களின் இணைப்பு?
**3 பாடங்கள்**

**21.புள்ளியியல் என்றால் என்ன? (12.3)**

**புள்ளியியல்:**

- "புள்ளியியல் என்பது மதிப்பீடுகளை மற்றும் நிகழ்தகவுகளை பற்றிய அறிவியல்". – போடிங்டன்
- "புள்ளியியல் என்பது எண்ணிலான விவரங்களை திரட்டி, ஒருங்கிணைத்து வழங்கி, பகுத்தாய்ந்து, விவரிப்பது ஆகும்". – கிராக்ஸ்டன் மற்றும் கௌடன்

**22.புள்ளியியலின் வகைகள் யாவை? (12.8)**

**புள்ளியியலின் வகைகள்:**

புள்ளியியல் இரண்டு வகைப்படும்.

1. விவரிப்பு புள்ளியியல்
2. உய்த்துணர்வு புள்ளியியல்


**23.உய்த்துணர்வு புள்ளியியல் என்றால் என்ன? (12.8)**

**உய்த்துணர்வு புள்ளியியல்:**

- கூறுவின் விவரங்களை பகுப்பாய்வு செய்து அதன் பண்பினை அறிந்து கொள்வதன் மூலம் முழுத்தொகுப்பின் விவரங்களுக்கான பண்புகளை அறிந்து கொள்வது அல்லது உய்த்துணர்வதற்குப் பயன்படும் புள்ளியியலின் ஒரு பகுதி உய்த்துணர்வு புள்ளியியல் எனப்படுகிறது.

**24.புள்ளிவிவர வகைகள் யாவை? (12.9)**

**புள்ளிவிவர வகைகள்:**






Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**25.உடன் தொடர்பு என்பதனை வரையறு. (12.12)**

**உடன் தொடர்பு:**

உடன் தொடர்புப் பகுப்பாய்வு என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாறிகள் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு மாறுகின்றன என்பதைப் பற்றி கணக்கிடுவது ஆகும்.

**கண்டறிந்தவர்:** சர் ஃபிரான்சிஸ் கால்டன்

**26.ஒட்டுறவு என்பதனை வரையறு. (12.13)**

**ஒட்டுறவு:**

- ❖ ஒரு மாறியின் மதிப்பில் மாற்றம், மற்ற மாறியின் மதிப்பில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதே ஒட்டுறவு ஆகும்.
- ❖ இங்கு இரு மாறிகள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது.

**27.பொருளாதார அளவையியல் என்றால் என்ன? (12.14)**

**பொருளாதார அளவையியல்:**

- ❖ பொருளாதார அளவையியல் என்பது பொருளாதார அளவீட்டு முறை பொருளாதார அளவையியல் பொருளாதாரத் தன்மைகளை அளவீடு செய்ய பயன்படுகிறது.
- ❖ பொருளாதார அளவையியல் என்பது பொருளியல், புள்ளியியல் மற்றும் கணிதம் ஆகிய மூன்றின் ஒருங்கிணைப்பாகும்.
- ❖ பொருளியல் + கணிதம் = கணிதப் பொருளியல்
- ❖ பொருளியல் + கணிதம் + புள்ளியியல் = பொருளாதார அளவையியல்

**28.புள்ளியியலின் பணிகள் யாவை? (12.4)**

**புள்ளியியலின் பணிகள்:**

- ❖ புள்ளியியல் விவரங்களை துல்லியமான வடிவில் வழங்குகிறது.
- ❖ இது பரந்த விவரங்களை சுருக்கித் தருகிறது.
- ❖ இது ஒப்பீடுகளைச் செய்ய உதவுகிறது.
- ❖ இது எடுகோள்களை உருவாக்கவும், சோதனைக்கு உட்படுத்தவும் உதவுகிறது.
- ❖ கொள்கைகளை உருவாக்குவதில் இது உதவுகிறது.

R.THALAMPOORAJAN,M.A.,B.Ed.,M.Phil., www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**29.பின்வரும் விவரங்களுக்கு திட்டவிலக்கத்தினை காண்.**

**14,22,9,15,20,17,12,11**

தீர்வு:

| வ.எண். | மதிப்பு (X) | X - $\bar{X}$ | (X - $\bar{X})^2$ |
|---|---|---|---|
| 1 | 14 | =1 | 1 |
| 2 | 22 | 7 | 49 |
| 3 | 9 | 6 | 36 |
| 4 | 15 | 0 | 0 |
| 5 | 20 | 5 | 25 |
| 6 | 17 | 2 | 4 |
| 7 | 12 | -3 | 9 |
| 8 | 11 | -4 | 16 |
| | **$\Sigma X$=-44** | | **$\Sigma$(X - $\bar{X})^2$= 140** |

$\bar{X} = \frac{\Sigma X}{n}$ n = 8


$\bar{X} = \frac{120}{8} = 15$

$\sigma = \sqrt{\frac{\sum(X-\bar{X})^2}{n}}$

$\sigma = \sqrt{\frac{140}{8}} = \sqrt{17.5} = 4.18$

**30.பல்வகையான உடன் தொடர்புகளை கூறி விளக்குக. (12.12.1)**

**பல்வகையான உடன் தொடர்புகள்:**




R.THALAMPOORAJAN.M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**31.ஒட்டுறவுப் பகுப்பாய்வின் பயன்களை கூறுக. (12.13)**

**ஒட்டுறவு:**

- ஒரு மாறியின் மதிப்பில் மாற்றம், மற்ற மாறியின் மதிப்பில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதே ஒட்டுறவு ஆகும்.

**ஒட்டுறவுப் பகுப்பாய்வின் பயன்கள்:**

- இருமாறிகளுக்கிடையே காரண விளைவை ஆராய்ந்து அவைகளுக்கிடையே சார்புத் தொடர்பை ஏற்படுத்துகின்றது.
- ஒட்டுறவு ஆய்வில் போலி ஒட்டுறவு இல்லை.
- நேர்கோடு அல்லாத தொடர்புகளையும் ஆய்வு செய்வதால் இதன் பயன்பாடு விரிவடைந்துள்ளது.
- இது அதிகம் மேற்கணக்கீட்டிற்கு பயன்படுத்தப்படுகின்றது.

**32.பொருளாதார அளவையியலின் நோக்கங்களை கூறுக. (12.14)**

**பொருளாதார அளவையியலின் நோக்கங்கள்:**

- பொருளாதார நடவடிக்கைகளை முன்கணித்தல் மூலமாக அறிந்து விளக்குவதற்கு உதவுகின்றது.
- இவைகள் மாறிகளுக்கு இடையேயுள்ள பழைய மற்றும் நிறுவப்பட்ட உறவுகளை மீண்டும் நிருபிப்பதற்கும் உதவுகின்றது.
- புதிய கோட்பாடுகளையும் புதிய உறவுகளையும் நிறுவுவதற்கு உதவுகின்றது.
- எடுகோள்களை சோதனை செய்யவும், முழுத்தொகுப்பின் பண்புகளை மதிப்பீடு செய்யவும் உதவுகின்றது.

**33.பொருளாதார மாதிரியிலிருந்து பொருளாதார அளவையியல் மாதிரியினை வேறுபடுத்துக. (12.14)**

| **பொருளாதார மாதிரி** | **பொருளாதார அளவையியல் மாதிரி** |
|---|---|
| கணித பொருளியல் மாதிரிகள் பொருளாதார கோட்பாடுகளின் அடிப்படையில் உருவாக்கப்படுகிறது. | பொருளாதார அளவையியல் மாதிரிகள் கோட்பாடுகளின் நம்பகத்தன்மையை அறிய புள்ளி விவரங்களின் அடிப்படையில் சோதனை செய்யப்படுகிறது. |
| புள்ளியியலில் இருக்கும் ஒட்டுறவு மாதிரியில் பிழைக்கருத்து இல்லை. | பிழைக்கருத்து உள்ளடக்கியிருக்கிறது. |
| புள்ளியியல் ஒட்டுறவு மாதிரி: $Yi = \beta_0 + \beta_1 X_1$ | ஒட்டுறவு போக்கு மாதிரி: $Yi = \beta_0 + \beta_1 X_1 + U_1$ $U_i$ = பிழைக்கருத்து |

R.THALAMPORAIAN M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**34.இந்தியாவில் புள்ளியியல் ஆதார அமைப்புகளின் முக்கியத்துவத்தை விவாதி. (12.15)**

**இந்தியாவில் புள்ளியியல் ஆதார அமைப்புகளின் முக்கியத்துவம்:**

- ❖ நாடு முழுவதும் நடைபெறும் புள்ளிவிவர சேகரிப்புகளை ஒருங்கிணைப்பது மற்றும் அவற்றிணை பரிசோதிப்பதும், தரமேம்பாட்டினை உறுதிப்படுத்துவதும் ஆகும்.
- ❖ தேசிய கணக்குகளை ஒருங்கிணைப்பது மற்றும் நுகர்வோர் குறியீட்டெண்ணை அமைப்பதும் ஆகும்.
- ❖ மேலும், மற்ற சமுதாய புள்ளி விவரங்களை சேகரிப்பது, பயிற்சி, பன்னாட்டு ஒத்துழைப்பை பேணுதல், தொழில் பிரிவுகளை நிர்ணயித்தல் ஆகிய பணிகளையும் இது செய்கிறது.

**35.புள்ளியியலின் இயல்பு மற்றும் எல்லைகளை விளக்குக. (12.5)**

**புள்ளியியலின் இயல்புகள்:**

- ❖ புள்ளியியலில் அறிவியல், கலையியல் ஆகிய இரண்டின் தன்மைகளும் கலந்திருக்கின்றன.
- ❖ புள்ளியியல் என்பது ஒரு முறைப்படுத்தப்பட்ட தொகுப்பாகும்.
- ❖ இது விவரங்களை பகுத்தாய்ந்து, அதன் அடிப்படையில் கோட்பாடுகளை உருவாக்கவும், உருவாக்கப்பட்ட கோட்பாடுகளை சோதனை செய்து துல்லியமான முடிவுகளை எடுக்கவும் உதவுகிறது.
- ❖ விவரங்களை திரட்டுவது, அட்டவணையிடுவது, முடிவுகளை எடுப்பது, தீர்மானங்களை செய்வது என பல புள்ளிவிவர நடவடிக்கைகளில் கலையியலின் உட்கூறுகள் கலந்துள்ளன.

**புள்ளியியலின் எல்லைகள்:**

**பொருளியலில் புள்ளியியல்:**

- ❖ எடுகோள்களை உருவாக்குவது, விவரங்களை திரட்டுவது, வகைப்படுத்துவது, பகுத்தாய்வு செய்வது, முடிவுகளை எடுப்பது, கொள்கைகளை வகுப்பது என புள்ளியியல் பொருளியலில் இரண்டறக் கலந்துள்ளது.

**தொழிலியல் புள்ளியியல்:**

- ❖ குறிப்பிட்ட தரத்தில் பொருட்கள் இருக்கின்றனவா என்பதை சோதிக்க தரக்கட்டுப்பாடு பயன்படுகிறது.

**புள்ளியியலும் வணிகமும்:**

- ❖ உற்பத்தியும், சந்தையிடலும் ஒருசேர நடப்பதில்லை. உற்பத்தியை முன்கூட்டியே திட்டமிட வேண்டியுள்ளது. அவ்வாறு திட்டமிடுவதற்கு புள்ளியியலின் தேவை அவசியமாகும்.

**புள்ளியியலும் கல்வியியலும்:**

- ❖ பழைய அறிவினை சோதித்துப் பார்ப்பதும், புதிய அறிவினைப் பெறுவதும் புள்ளிவிவரங்களின் மூலமே சாத்தியமாகும்.

**புள்ளியியலும் திட்டமிடலும்:**

- ❖ இந்தியாவின் மைய, மாநில மற்றும் உள்ளூர் அரசுகள் திட்டமிடலின் அடிப்படையிலேயே செயல்படுகிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**புள்ளியியலும் மருத்துவமும்:**

- மருத்துவத் துறையில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் அனைத்திலும் புள்ளியியலின் பல்வேறு பகுதிகள் பயன்படுகிறது.

**36.பின்வரும் விவரங்களுக்கு கார்ல் பியர்ஸ்னின் ஒட்டுறவுக் கெழுவினை கண்டறிக.**

| தேவை X | 23 | 27 | 28 | 39 | 30 | 31 | 33 | 35 | 36 | 39 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| விற்பனை Y | 18 | 22 | 23 | 24 | 25 | 26 | 28 | 29 | 30 | 32 |

SOLUTION:

| வ.எண். | தேவை (X) | விற்பனை (Y) | dx (A = 31) (X – A) (X – 31) | dy (B = 26) (Y – B) (Y – 26) | $dx^2$ | $dy^2$ | dx.dy |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 23 | 18 | 23 - 31 = -8 | 18 - 26 = -8 | 64 | 64 | 64 |
| 2 | 27 | 22 | 27 - 31 = -4 | 22 - 26 = -4 | 16 | 16 | 16 |
| 3 | 28 | 23 | 28 - 31 = -3 | 23 - 26 = -3 | 9 | 9 | 9 |
| 4 | 29 | 24 | 29 - 31 = -2 | 24 - 26 = -2 | 4 | 4 | 4 |
| 5 | 30 | 25 | 30 - 31 =-1 | 25 - 26 = -1 | 1 | 1 | 1 |
| 6 | 31 | 26 | 31 - 31 = 0 | 26 - 26 = 0 | 0 | 0 | 0 |
| 7 | 33 | 28 | 33 - 31 = 2 | 28 - 26 = 2 | 4 | 4 | 4 |
| 8 | 35 | 29 | 35 - 31 = 4 | 29 - 26 = 3 | 16 | 9 | 12 |
| 9 | 36 | 30 | 36 - 31 = 5 | 30 - 26 = 4 | 25 | 16 | 20 |
| 10 | 39 | 32 | 39 - 31 = 8 | 32 - 26 = 6 | 64 | 36 | 48 |
| | ΣX = 311 | ΣY = 257 | Σdx = 1 | Σdy = -3 | $\Sigma dx^2$= 203 | $\Sigma dy^2$= 159 | Σdx.dy= 178 |

R.THALAMPOORAJAN M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

N = 10 ΣX = 311 ΣY = 257

$\bar{\bar{X}} = \frac{\Sigma X}{N} = \frac{311}{10} = 31\frac{1}{10}$, A = 31 $\bar{\bar{Y}} = \frac{\Sigma Y}{N} = \frac{257}{10} = 25\frac{7}{10}$, B = 26

Σdx = 1 Σdy = -3 $\Sigma dx^2$ = 203 $\Sigma dy^2$ = 159 Σdx.dy= 178

$$r = \frac{N\,\Sigma\,dx.dy - (\Sigma\,dx)\,(\Sigma dy)}{\sqrt{N\,\Sigma dx^2 - (\Sigma dx^2)}\ \sqrt{N\,\Sigma dy^2 - (\Sigma dy^2)}}$$

$$r = \frac{10 \times 178 - (1)\,(-3)}{\sqrt{10\,X\,203 - (1)2}\ \sqrt{10\,X\,159 - (-3)^2}}$$

$$r = \frac{1780 + 3}{\sqrt{2030 - 1}\ \sqrt{1590 - 9}}$$

$$r = \frac{1780 + 3}{\sqrt{2029}\ \sqrt{1581}}$$

$$r = \frac{1783}{(45.044)(39.761)}$$

$$r = \frac{1783}{1790.94}$$

r = 0.9955

R.THALAMPOORAJAN.M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net

**37.பின்வரும் விவரங்களிலிருந்து Y மீது X மற்றும் X மீது Y ஆகியவற்றினை கண்டறிக.**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Y | 45 | 48 | 50 | 55 | 65 | 70 | 75 | 72 | 80 | 85 |
| X | 25 | 30 | 35 | 30 | 40 | 50 | 45 | 55 | 60 | 65 |

| Y | X | $d_Y$ = (Y – 65) | $d_x$ = (X = 45) | $d_y^2$ | $d_x^2$ | $d_x.d_y$ |
|---|---|---|---|---|---|---|
| 45 | 25 | 45 - 65 = -20 | 25 - 45 = -20 | 400 | 400 | 400 |
| 48 | 30 | 48 - 65 = -17 | 30 - 45 = -15 | 289 | 225 | 225 |
| 50 | 35 | 50 - 65 = -15 | 35 - 45 = -10 | 225 | 100 | 150 |
| 55 | 30 | 55 - 65 = -10 | 30 - 45 = -15 | 100 | 225 | 150 |
| 65 | 40 | 65 - 65 = 0 | 40 - 45 = -5 | 0 | 25 | 0 |
| 70 | 50 | 70 - 65 = 5 | 50 - 45 = 5 | 25 | 25 | 25 |
| 75 | 45 | 75 - 65 = 10 | 45 - 45 = 0 | 100 | 0 | 0 |
| 72 | 55 | 72 - 65 = 7 | 55 – 45 = 10 | 49 | 100 | 70 |
| 80 | 60 | 80 - 65 = 15 | 60– 45 = 15 | 225 | 225 | 225 |
| 85 | 65 | 85 - 65 = 20 | 65 - 45 = 20 | 400 | 400 | 400 |
| ΣY = 645 | ΣX = 435 | $\Sigma d_y$ = -5 | $\Sigma d_x$ = -15 | $\Sigma d_y^2$= 1813 | Σ $d_x^2$= 1725 | $\Sigma d_x.d_y$= 1675 |

$\Sigma d_x = -15$ $\Sigma d_y = -5$ $\Sigma d_x^2 = 1725$ $\Sigma d_y^2 = 1813$ $\Sigma d_x.d_y = 1675$

$\bar{X} = \frac{\Sigma X}{n}$ = 435/10 = 43.5 $Y = \frac{\Sigma Y}{n}$ = 645/10 = 64.5

$b_{xy} = \frac{N\,\Sigma d_x.d_y - (\Sigma d_x)(\Sigma d_y)}{N\,\Sigma d_y^2 - (\Sigma d_y)^2}$

$b_{xy} = \frac{(10)(1675) - (-15)(-5)}{(10)(1813) - (-5)^2}$

$b_{xy} = \frac{16750 - 75}{18130 - 25}$

$b_{xy} = \frac{16675}{18105}$



R.THALAMPOORANAN M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net

$b_{xy} = \dfrac{3335}{3621}$

**$b_{xy}$ = 0.92**

$b_{yx} = \dfrac{N\,\Sigma d_x.d_y - (\Sigma d_x)(\Sigma d_y)}{N\,\Sigma d_x^2 - (\Sigma d_x)^2}$

$b_{yx} = \dfrac{(10)(1675) - (-15)(-5)}{(10)(1725) - (-15)^2}$

$b_{yx} = \dfrac{16750 - 75}{17250 - 225}$

$b_{yx} = \dfrac{16675}{17025}$

**$b_{yx}$ = 0.98**

**X on Y**

$X - \bar{X} = b_{xy}$ **(Y – Y)**

**X – 43.5 = 0.92 (Y – 64.5)**

**X – 43.5 = 0.92 Y – 59.34**

**X = 0.92 Y – 59.34 + 43.5**

**X = 0.92 Y – 15.84**

**Y on X**

**(Y – Y)** = $b_{yx}\,X - \bar{X}$

**Y – 64.5 = 0.98 (X – 43.5)**

**Y = 0.98 X – 42.63 + 64.5**

**Y = 0.98 X + 21.87**

P.THALAMPOORAJAN.M.A.,B.Ed.,M.Phil., www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**38. பொருளியலில் பொருளாதார அளவையியலின் பயன்பாடுகளை விளக்குக. (14.12)**

**பொருளாதார அளவையியல்:**

- ❖ பொருளாதார அளவையியல் என்பது பொருளாதார அளவீட்டு முறை பொருளாதார அளவையியல் பொருளாதாரத் தன்மைகளை அளவீடு செய்ய பயன்படுகிறது.
- ❖ பொருளாதார அளவையியல் என்பது பொருளியல், புள்ளியியல் மற்றும் கணிதம் ஆகிய மூன்றின் ஒருங்கிணைப்பாகும்.
- ❖ பொருளியல் + கணிதம் = கணிதப் பொருளியல்
- ❖ பொருளியல் + கணிதம் + புள்ளியியல் = பொருளாதார அளவையியல்

**பொருளாதார அளவையியலின் நோக்கங்கள்:**

- ❖ பொருளாதார நடவடிக்கைகளை முன்கணித்தல் மூலமாக அறிந்து விளக்குவதற்கு உதவுகின்றது.
- ❖ இவைகள் மாறிகளுக்கு இடையேயுள்ள பழைய மற்றும் நிறுவப்பட்ட உறவுகளை மீண்டும் நிருபிப்பதற்கும் உதவுகின்றது.
- ❖ புதிய கோட்பாடுகளையும் புதிய உறவுகளையும் நிறுவுவதற்கு உதவுகின்றது.
- ❖ எடுகோள்களை சோதனை செய்யவும், முழுத்தொகுப்பின் பண்புகளை மதிப்பீடு செய்யவும் உதவுகின்றது.

**ஆய்வு முறையின் நிலைகள்:**

1.கோட்பாடு அல்லது ஆய்வு எடுகோளைக் கூறுவது.

2.ஆய்வுக்கு உட்படுத்திய கோட்பாட்டிற்கான கணித மாதிரியை உருவாக்குதல்.

3.பொருளாதார அளவையியல் மாதிரியை உருவாக்குவது.

4.புள்ளிவிவரங்களைத் திரட்டுவது.

5.பொருளாதார அளவையியல் மாதிரியின் முழுத்தொகுப்புப் பண்புகளை மதிப்பீடு செய்தல்.

6.எடுகோள் சோதனை செய்தல்.

7.முன்கணித்தல் தீர்மானம் செய்தல்.

8.கொள்கை முடிவெடுக்க, நெறிப்படுத்த மாதிரியை பயன்படுத்துதல்.

**பயிற்சி வினாக்கள்**

**1.புள்ளியியலின் தந்தை பற்றி சிறு குறிப்பு வரைக. (12.1)**

**2.புள்ளியியலின் பிறப்பு பற்றி குறிப்பிடுக. (12.1)**

**3.பிரான்ஸிஸ் ஜி.பி. நெய்ஸன் பற்றி சிறு குறிப்பு வரைக. (12.1)**

**4.நவீன புள்ளியியலின் நிறுவனர் மற்றும் இந்திய புள்ளியியலின் தந்தை பற்றி சிறு குறிப்பு வரைக. (12.2)**

**5.புள்ளியியலின் பண்புகள் யாவை? (12.4)**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**6.புள்ளியியலின் குறைபாடுகள் யாவை? (12.7)**

**7.விவரிப்பு புள்ளியியல் என்றால் என்ன? (12.8)**

**8.விவரிப்பு புள்ளியியலுக்கும், உய்த்துணர்வு புள்ளியியலுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (12.8)**

9.**அளவு விவரங்கள் என்றால் என்ன? (12.9)**

**10.பண்பு விவரங்கள் என்றால் என்ன? (12.9)**

**11.பெயரளவு விவரங்கள் என்றால் என்ன? (12.9)**

**12.தரவரிசை விவரங்கள் என்றால் என்ன? (12.9)**

**13.முதல்நிலை விவரங்கள் என்றால் என்ன? (12.9)**

**14.இரண்டாம் நிலை விவரங்கள் என்றால் என்ன? (12.9)**

**15.சராசரி என்றால் என்ன? அதன் வகைகள் யாவை? (12.10)**

**16.விலகல் அளவையின் வகைகள் யாவை? (12.11)**

**17.தனித்த விலகல் அளவைகள் என்றால் என்ன? (12.11)**

**18.ஒப்பீட்டு விலகல் அளவைகள் என்றால் என்ன? (12.11)**

**19கார்ல் பியர்ஸன் பற்றி சிறு குறிப்பு வரைக. (12.12.1)**

**20.நேர்மறை உடன் தொடர்பு என்றால் என்ன? (12.12.1)**

**21.எதிர்மறை உடன் தொடர்பு என்றால் என்ன? (12.12.1)**

**22.உடன் தொடர்பின் வகைகள் யாவை? (12.12.1)**

**23.எளிய உடன்தொடர்பு என்றால் என்ன? (12.12.1)**

**24.பன்முக உடன்தொடர்பு என்றால் என்ன? (12.12.1)**

**25.பகுதி உடன்தொடர்பு என்றால் என்ன? (12.12.1)**

**26.உடன் தொடர்பினை அளவிடும் முறைகள் யாவை? (12.12.1)**

**27.சிதறல் விளக்கப்பட முறையின் நன்மைகள் யாவை? (12.12.1)**

**28சிதறல் விளக்கப்பட முறையின் குறைபாடுகள் யாவை? (12.12.1)**

**29.பிரான்ஸிஸ் கால்டன் பற்றி சிறு குறிப்பு வரைக. (12.13)**

**30.ரேக்னர் ஃபிரிஸ்க் பற்றி சிறு குறிப்பு வரைக. (12.14)**

R.THALAMPOORAJAN,M.A.,B.Ed.,M.Phil.,
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com